

செழிப்புக்கான ஒளிமயமான பாதை

ஆண்டறிக்கை 2017

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

உள்ளடக்கம்

1 மைல்கற்கள்
பக்கம் 3

2 நிதி சிறப்பம்சங்கள்
பக்கம் 5

3 தலைவரின் செய்தி
பக்கம் 6

4 பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியின் மதிப்பாய்வு
பக்கம் 9

5 முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் ஆய்வு
பக்கம் 12

6 வழிகாட்டல்
பக்கம் 29

7 நிதி அறிக்கைகள்
பக்கம் 79

செழிப்புக்கான ஒளிமிக்க பாதை

நாட்டின் ஒரு தேசிய வங்கி என்ற முறையில், கிராமிய பொருளாதாரத்தின் விருத்திக்கு உதவும் வகையில் இலகுவில் அணுகக் கூடியதும் அடையக் கூடியதுமான நிதித் தயாரிப்புக்களை வழங்குவதன் மூலம் இலங்கையின் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். அதனால் வங்கியானது மக்களின் வாழ்விற்கு வழிகாட்டியாக இருப்பதுடன், மக்களினதும் நாட்டினதும் பேண்தகைமை விருத்திக்கான முண்ணனி நிறுவனமாகவும் அடையாளப்படுத்தப்படுகிறது.

எமது நோக்கு

சமூக பொருளாதார சௌபாக்கியத்தின் துரித முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக வியங்கும் நாட்டின் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல்.

எமது பணி

சேவை அர்ப்பணிப்பு மிகுந்த தொழில்சார் வல்லுனர் குழாமின் மூலம் பிரதேச சமூக பொருளாதா சௌபாக்கியத்திற்காக உற்பத்தி திறனை உயர்த்திட நிதிச்சேவைகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

பிரதேச அபிவிருத்தி வங்கி...

பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஆரம்பமானது, 1985ம் ஆண்டு பிராந்திய கிராமிய அபிவிருத்தி என்ற பிரிவின் கீழ் மாவட்ட மட்ட வங்கிகளாக ஆரம்பிக்கப்பட்ட காலம் வரை பின்னோக்கிச் செல்கின்றது.

இவ்வாறான பதினேழு பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 1997ம் ஆண்டில் ரஜரட்ட, ருஹுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ எனும் ஆறு மாகாண மட்ட வங்கிகளாக ஒன்றிணைக்கப்பட்டன.

மேலும் 2010ம் ஆண்டில் அந்த ஆறு மாகாண வங்கிகளும் தேசிய அபிவிருத்தி வங்கியாக இணைக்கப்பட்டு பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) என பெயரிடப்பட்டது. பிரதேச அபிவிருத்தி வங்கியானது 2008ம் ஆண்டின் பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்ட இலக்கம் 41இன் கீழ் கிராமிய பொருளாதார விருத்திக்கு பங்களிக்கும் நோக்கில் இலகுவாக அணுகக் கூடியதும் அடையக் கூடியதுமான நிதித் தயாரிப்புகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நீண்ட கால நோக்குடன் தேசிய அளவில் முழுமையான அரச வங்கியாக உருவாக்கப்பட்டதாகும்.

அடிப்படையில் “வெறும்பாத வங்கியியல்” எனும் கருப்பொருளை (Bare foot Banking Concept) மையமாகக் கொண்டு குறைந்த மற்றும் நடுத்தர வருமான மட்டத்தில் உள்ளவர்களுக்கான புதுமையானதும் எளிமையானதுமான வினைத்திறன் மிக்க நிதித் தயாரிப்புக்களை வழங்கும் (பிரதானமாக வைப்பு சேகரிப்பு மற்றும் கடன் வழங்கல் என்பவற்றில்) வங்கி பின்பற்றுகின்றது. வங்கியானது தனது வாடிக்கையாளர்களுக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறைகளில் உதவுதல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்யும் பெண் தொழில்முனைவர், விவசாய, வாழ்வாதார, மீன்பிடி மற்றும் ஏனைய தொழிற்துறையினரை ஊக்குவித்தல் போன்றவற்றில் தனது பிரதான கவனத்தை செலுத்துகின்றது. மேலும் கிராமப்புற மக்கள் சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என்போரிடத்தில் சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்து அவர்களின் சேமிப்புக்களுக்கான உயர் நலன்களை வழங்குவதையும் வங்கி தனது நோக்கமாக கொண்டுள்ளது.

இன்று பிரதேச அபிவிருத்தி வங்கி 265 கிளைகளிலும் 6 மில்லியன்களுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் கணக்குகள் மற்றும் 2,350 தொழிற்திறன் மிக்க ஊழியர்களுடன் எமது நாட்டின் சமூக பொருளாதார விருத்திக்கு உதவும் தொழில் முனைவோரிற்கு தனது உந்து சக்தியாக விளங்குகின்றது.

RDB
දෙයියන් නැගිටින ශ්‍රී ලංකිකයන්ට
தன்னம்பிக்கையுள்ள இலங்கையருக்காக
Empowering Sri Lankans

ஆறு மாகாண அபிவிருத்தி வங்கிகளை ஒரே தேசிய மட்டத்தில் ஒன்றிணைத்த பின்னர் கிடைத்த வெற்றி

பிரதேச அபிவிருத்தி வங்கி

ஏழு ஆண்டுகளுக்குள் + 2010 இல் ஒன்றிணைந்ததன் பின்னர், 169 பில்லியன் மொத்த ஆதனங்கள், 128 பில்லியன் கடன்கள் மற்றும் 140 பில்லியன் வைப்புக்கள் என்ற உச்சத்தை பிரதேச அபிவிருத்தி வங்கி அடைந்தது


(%)
791
ரூ. 371 மில்லியனிலிருந்து ரூ. 3,307 மில்லியன் வரையான இயக்க வருமான வளர்ச்சி

(%)
205
மொத்த ஈவுத்தொகை வளர்ச்சி ரூ. 3 பில்லியனில் இருந்து ரூ. 10 பில்லியன் வரை

(%)
313
மொத்த ஆதன வளர்ச்சி ரூ. 41 பில்லியனில் இருந்து ரூ. 169 பில்லியன் வரை

(%)
332
மொத்த வைப்புத் தொகை வளர்ச்சி ரூ. 32 பில்லியனில் இருந்து ரூ. 140 பில்லியன் வரை

(%)
323
மொத்த கடன் மற்றும் முற்பணங்கள் வளர்ச்சி ரூ. 30 பில்லியனில் இருந்து ரூ. 128 பில்லியன் வரை



1985 முதல் 2009 வரையான இருபத்தி நான்கு வருட காலப்பகுதியில் மாகாண அபிவிருத்தி வங்கிகளால் (அதாவது ரஜரட, ருஹுணு, வயம்ப, கந்துரட்ட, ஊவா மற்றும் சபரகமுவ அபிவிருத்தி வங்கிகளால்) பெறப்பட்ட விளைவுகள், அனைத்து மாகாண அபிவிருத்தி வங்கிகளையும் இணைத்து 2010 இல் பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) நிறுவப்பட்டதன் பின்னர் சிறப்பாக விருத்தி கண்டன.

மே 2010 முதல் டிசெம்பர் 2017 வரையான ஏழு வருட காலப்பகுதியில்

- RDB இன் மொத்த வைப்புத்தொகை ரூ. 32,350 மில்லியனில் இருந்து ரூ. 139,827 மில்லியனாக ரூ. 108 பில்லியன் அதிகரிப்புக் காணப்பட்டது.
- RDB இன் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூ. 30,311 மில்லியனில் இருந்து ரூ. 128,344 மில்லியனாக ரூ. 98 பில்லியன் அதிகரிப்பு காணப்பட்டது.
- RDB இன் மொத்த ஆதனம் ரூ. 41,018 மில்லியனில் இருந்து ரூ. 169,259 மில்லியனாக ரூ. 128 பில்லியன் அதிகரிப்பு காணப்பட்டது.

RDB இன் வரலாறு

1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச கிராம அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் அடிப்படையில் பிரதேச கிராம அபிவிருத்தி வங்கிகளின் கீழ் மாவட்ட மட்ட வங்கிகள் நிறுவப்பட்டு 1985 ஆம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB) தொடக்கத்தினைக் குறிக்கிறது. பின்னர் 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் 1997 ஆம் ஆண்டில் பதினேழு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், ஆறு மாகாண அபிவிருத்தி வங்கிகளான ரஜரட, ருஹுணு, வயம்ப, கந்துரட, ஊவா மற்றும் சபரகமுவ அபிவிருத்தி வங்கிகளுடன் இணைக்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேசிய சங்வர்தன வங்கிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் இந்த ஆறு வங்கிகளும் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி பிரதேசிய சங்வர்தன வங்கி (பிரதேச அபிவிருத்தி வங்கி) என்ற நாமத்துடன் தேசிய அளவில் ஒன்றிணைக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டில், RDB தனது 30 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. தேசிய மட்டத்தில் அரசுக்கு சொந்தமான அபிவிருத்தி வங்கியாக RDB இருப்பதுடன், விவசாயம், தொழில், வர்த்தகம், வணிகம், கால்நடை, மீன்பிடி மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர பெண் தொழில் முனைவோரக்கான ஆதரவு என்பவற்றின் ஊடாக இலங்கையின் ஒட்டுமொத்த பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கிறது.

நிதி சிறப்பம்சங்கள்

- அபிவிருத்தி நிதி வழங்கலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனமாக பிரதேச அபிவிருத்தி வங்கி, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டின் கிட்டத்தட்ட அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களுடனும் முக்கிய பங்கு வகிப்பதில் வங்கி முன்னணியில் உள்ளது. வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் 6 மில்லியனுக்கும் மேலான பரப்பளவில் எங்கள் வாடிக்கையாளர் தளம் வியாபித்துள்ளது. நாட்டினதும் அதன் மக்களினதும் அபிவிருத்தி வங்கியின் முக்கிய நோக்கம் ஆகும். எனவே, வங்கி இவற்றிற்கு ஆதரவு அளிக்கும் பொருட்டு நாடு முழுவதிலுமுள்ள 265 கிளைகளினூடாக தேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்கிறது.
- வங்கியின் மொத்த வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 40% அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் செயற்பாட்டு இலாபம் ரூ. 3,307 மில்லியன் ஆகும், இது 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 2,131 மில்லியனை விட 55% அதிகமாகும். வங்கியின் வரிக்கு முந்தைய ROA 2.26% ஆக அதிகரித்துள்ளது. இது 2016 ஆம் ஆண்டில் 1.8% ஆக இருந்தது.


எங்கள் வாடிக்கையாளர்களுக்கான உதவிச் சேவைகள்

- **வெஸ்டன் யூனியன் உடன்** NDB – வெஸ்டன் யூனியன் மூலம் பண பரிமாற்றங்கள் எளிமையானதும் வேகமான வழியாக எமது நாட்டிற்கு எந்தவொரு வெளிநாட்டிலிருந்தும் நிதியை பரிமாறிக்கொள்ள உதவுகின்றன. வாடிக்கையாளர்களுக்கு RDB யின் அனைத்து கிளைகளிலும் இந்த வசதி அளிக்கப்பட்டுள்ளது. இக்கிளைகள் பெரும்பாலும் கிராம மற்றும் அரை நகர்ப்புறப் பகுதிகளில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- DFCC **உடன் லங்கா பண பரிவர்த்தனை** (LMT) – லங்கா பண பரிமாற்றம் நேரடியாகவும் உடனடியாகவும் வாடிக்கையாளர் வங்கிக் கணக்குகளுக்கு பணம் செலுத்துகிறது. லங்கா பண பரிவர்த்தனையானது 275 இற்கும் மேலான இடங்களில் பரந்த சர்வதேச நெட்வொர்க்குடனும், 265 RDB கிளைகளிலும் சேவையை வழங்குகின்றது.
- ஸ்ரீலங்கா டெலிகொம், இலங்கை மின்சார சபை (CEB), தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (NWSDB) ஆகியவற்றிற்கான **பாவனைப்பட்டியல் செலுத்தும் வசதி.**
- RDB ATM மற்றும் **லங்காபே** ATM **வசதி** – தற்போது எமது வாடிக்கையாளர்கள் தங்கள் பணத்தை 3,500 இற்கும் மேற்பட்ட ATM களில் மீளப் பெற முடியும். இதுவரை வாடிக்கையாளர்களுக்கு 100,000 வரையான ATM அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.
- **பொது மின்னணு நிதி பரிமாற்றம்** (CEFT) – உள்ளக வங்கி பணப் பரிமாற்ற வசதிகள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

	2017 ரூபா '000	2016 ரூபா'000	பரிமாற்றம் %
ஆண்டுக்கான இயக்க விளைவுகள்			
மொத்த வருமானம்	22,016,079	15,744,337	40
வரிக்கு முந்தைய இயக்க இலாபம்	3,306,995	2,130,568	55
வரி விதிப்பு	2,023,065	1,489,280	36
வரிக்குப் பிந்திய இலாபம்	1,283,930	641,288	100
பங்குதாரர்களுக்கான இலாபம்	1,113,803	518,605	115
ஆதனங்கள் மற்றும் பொறுப்புக்கள்			
வாடிக்கையாளர் வைப்புக்கள்	139,827,365	107,031,721	31
கடன்கள் மற்றும் மீளப்பெறக்கூடிய தொகை (மொத்தம்)	130,324,846	108,102,760	21
மொத்த ஆதனங்கள்	169,259,202	130,913,984	29
மொத்த பொறுப்புக்கள்	159,646,453	124,915,039	28
பங்குதாரர்களின் முதலீடு	9,612,749	5,998,946	60
இலாபம்			
ஆதனங்களின் மீளப்பெறல் (%)	2.20	1.79	
ஈவுத்தொகை மீளப்பெறல் (%)	16.45	11.04	
செயற்பாடற்ற கடன் விகிதம்	3.27	2.85	
மூலதன விகிதம்			
மூலதன போதுமான விகிதம்			
பாசல் II அடிப்படையில்			
Tier I (5% இன் உச்ச வீதம்)	N/A	6.50	
Tier II (10% இன் குறைந்த வீதம்)	N/A	9.27	
பாசல் III அடிப்படையில்			
பொது ஈவுத்தொகை Tier I மூலதன வீதம் %	8.73	N/A	
மொத்த Tier I மூலதன வீதம் %	8.73	N/A	
மொத்த மூலதன வீதம் %	12.57	N/A	
சட்டபூர்வ பணப் பரிமாற்ற கூடிய ஆதன வீதம் %	26.27	21.25	


வாடிக்கையாளர் வைப்புக்கள்

ரூ. மில்லியன்




பெறப்பட்ட கடன்கள் (மொத்தம்)

ரூ. மில்லியன்




மொத்த வருமானம்

ரூ. மில்லியன்




பங்குதாரர் மூலதனம்

ரூ. மில்லியன்




வரிக்கு பிந்திய வருமானம்

ரூ. மில்லியன்



வரிக்கு முந்தைய இயக்க வருமானம்

ரூ. மில்லியன்





மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் நோக்கம் கிராமப்புற மக்களை மேம்படுத்துவதாக இருந்து வருகிறது. அனுகூலமான வணிகங்களை முன்னெடுப்பதற்காக மைக்ரோ மற்றும் SME (சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின்) உரிமையாளர்களுக்கு ஆதரவு நல்குவதை தனது பிரதான நோக்கமாக கொண்டு வங்கி முன் செல்கிறது.

அன்புள்ள பங்குதாரர்களே,

2017 ஆம் ஆண்டு நாட்டிற்கும் வங்கி துறைக்கும் ஒரு சவாலான ஆண்டாக இருந்தாலும், பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) பல முனைகளில் வெற்றி கண்டது. வங்கியின் பங்குதாரர்களின் ஆதரவுடனும் ஊழியர்களால் காட்டப்பட்ட மகத்தான பலம் மற்றும் அர்ப்பணிப்புடனும் வங்கியானது 2017 ஆம் ஆண்டில் நிலவிய பாதகமான காலநிலை மற்றும் பாதகமான பொருளாதார சூழலின் தாக்கத்தை சமாளிக்க முடிந்தது. இது எமது ஏற்கனவே உள்ள மற்றும் புதிய வாடிக்கையாளர்களால் எம்மீது காட்டப்பட்ட நம்பிக்கைக்கு ஒரு சான்றாகும்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் நோக்கம் கிராமப்புற மக்களை மேம்படுத்துவதாக இருந்து வருகிறது. அனுகூலமான வணிகங்களை முன்னெடுப்பதற்காக மைக்ரோ மற்றும் SME (சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின்) உரிமையாளர்களுக்கு ஆதரவு நல்குவதை தனது நோக்கமாக கொண்டு வங்கி முன் செல்கிறது. இந்த மதிப்பீட்டிற்கு உள்ளாகும் 2017 ஆம் ஆண்டில், வங்கியின் கடன் பத்திரம் ரூ. 106 பில்லியனிலிருந்து ரூ. 128 பில்லியனாகவும், அதன் வைப்புத்தொகை ரூ. 32 பில்லியனாகவும் வளர்ச்சியடைந்துள்ளது.

இயக்கச் சூழல்

2017 இல் உலக அளவில் வளர்ச்சி 3.7% ஆக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் முந்தைய ஆண்டை விட வளர்ச்சி இன்னும் குறைவாகவே இருந்தது. இந்த நிலைமை பல நாடுகளின் பொருளாதாரங்களில் பாதிப்பை ஏற்படுத்தியது. இலங்கையில், தென் மற்றும் வட மத்திய மாகாணங்களில் முறையே கடுமையான மழை மற்றும் வறட்சி ஆகிய பாதகமான காலநிலை காரணமாக கடுமையான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB) செயற்பாடுகள் முதன்மையாக நகர்ப்புறங்களுக்கு வெளியில் அமைந்திருப்பதால், அதன் வாடிக்கையாளர்களின் வாழ்வாதாரங்கள் இதனால் பெரும் அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் நிலையான பணவீக்கம் நியாயமான மட்டத்தில் நிலைத்திருக்கும் போதும், தளம்பல் பணவீக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. இது ஆண்டின் தொடக்கத்தில் அதிக வட்டி விகிதங்களை விளைவித்தது. ஆயினும், ஆண்டின் பிற்பகுதியில் வட்டி விகிதங்கள் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக அதிக பணப்புழக்க நிலைகள், அரசாங்கத்தின் குறைந்த அளவு கடன் பெறல் மற்றும் மிதமான பணவீக்கம் போன்ற மாற்றங்கள் ஏற்பட்டன. 2018 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 5% முதல் 5.3% வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், வங்கியின் புதிய மூலோபாய நோக்கங்கள் இதை நோக்கியதாக உள்ளன.

புதுப்பிக்கப்பட்ட மூலோபாய நோக்கு

வங்கி தனது ஐந்து ஆண்டுகால மூலோபாயத் திட்டத்தின் இரண்டாம் வருடத்தில், ஒரு திடமான மனித வள முகாமை முறையை தொடர்ந்து பேணியது. 2018 இன் முதல் காலாண்டில் கடனுக்கான உந்துதல் அமைப்பை (LOS) தொடங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று, வளர்ச்சி வங்கியியல் துறையில் கணிசமான அளவு போட்டி உள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டு, RDB இன் வாடிக்கையாளர்கள் பலர் மைக்ரோ வணிகங்களின் உரிமங்களிலிருந்து விலகியுள்ளனர்,

இதன் அடிப்படையில் பிரதேச அபிவிருத்தி வங்கி புதுப்பிக்கப்பட்ட முன்னோக்குடன் அதன் வணிக மாதிரியை அமைக்க முற்படுகிறது. வங்கி அதன் வளர்ச்சி இலக்குகளை அடையும் பொருட்டு, அதன் வாடிக்கையாளர் தளத்தில் புதிதாக உருவாகி வரும் தேவைகளை கருத்தில் கொள்கிறது. வங்கி அதன் பங்குதாரர் தரவரிசைகளை மேம்படுத்துவதன் மூலம் பரந்த அடிப்படையிலான அதன் மூலதன அடித்தளத்தை பேணுவதன் அவசியத்தையும் உணர்ந்திருக்கிறது. இந்த மாற்றங்கள், ஏற்கனவே காணப்படும் வணிக மாதிரியுடன் இணைக்கப்பட்டால், வங்கியால் நீண்ட கால வளர்ச்சியை அடைய முடியும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஆய்வு அடிப்படையிலான விருத்திகள்

விவசாயத் துறையின் அபிவிருத்திக்கான முக்கியமான பங்களிப்பினை பிரதேச அபிவிருத்தி வங்கி மேற்கொள்கிறது. விவசாய உற்பத்திகள் நாடு முழுவதும் பரவலாக விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் முறையான செயல்முறை ஒன்றினை முன்னெடுப்பதுடன், விநியோகம் மற்றும் ஏற்றுமதியின் முட்டுக்கட்டைகளைக் களைவதற்கான முறையான செயல்முறையும் காணப்படுகிறது. இலங்கையில் மிகப்பெரிய அபிவிருத்தி வங்கியாக RDB, உலகில் செயற்படும் வழிமுறைகளில் தொடர்ந்தும் ஆராய்ச்சியை மேற்கொள்கிறது. கூட்டுறவு அமைப்பின் அடிப்படையிலான நான்கு இசுறு நிறுவனங்கள் – வங்கியால் நிர்வகிக்கப்படுவதுடன் ஒரு முறையான விநியோக முறையையும் உறுதிப்படுத்துகிறது. இது நாடு முழுவதும் பரவலான தோற்றத்தை உருவாக்குகிறது. இந்த அமைப்பானது உள்நாட்டு மற்றும் சர்வதேச பரிமாற்றங்களை சிறப்பாக மேற்கொள்ள வழிவகுக்கிறது. வங்கி செயற்படுத்துவதற்கு முதன்மையான திட்டமாக இது உள்ளது. வெளிநாட்டு வளங்களின் நிபுணத்துவ உள்ளீடுகளின் உதவியுடன் ஒரு கூட்டு முயற்சியாக, நாட்டில் பண்ணைத் தொழிற் துறையை முன்னேற்றுவதற்கும் வங்கி தனது பங்களிப்பினை நல்குகின்றது.

பாதகமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் முன்னேற்றங்கள்

பாதகமான காலநிலை நிலைமைகள் வங்கியின் சில கிளைகளின் செயற்பாடுகளை பாதித்தன, ஆனால் RDB தனது செயற்பாடுகளில் வலுவாக நின்றது. வங்கி எதிர்காலத்தில் பல புதிய கிளைகளைத் திறக்க எதிர்பார்க்கிறது. இவை நாடு முழுவதிலும் 265 கிளைகளாக பரிணமிக்கும். வங்கிக்கு உரித்தான வளாகத்திற்கு சில கிளைகளை மாற்றுவதற்கும் வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. உபுல்தெனிய, புத்தளம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் வங்கியால் பராமரிக்கப்படும் தானியக் களஞ்சியங்களைத் தவிர, எம்பிலிப்பிட்டியவில் உள்ள களஞ்சியத்தையும் அரசு வங்கியின் பொறுப்பில் ஒப்படைத்துள்ளது. எதிர்காலத்தில், இக்களஞ்சியங்களின் தினசரி நடவடிக்கைகளை நிர்வகிப்பதையும் வங்கி எதிர்பார்க்கிறது.

மேலும் கள நடவடிக்கைகளில்...

பிரதேச அபிவிருத்தி வங்கி எதிர்கால மாற்றங்களுக்கு முகங்கொடுக்கும் விதத்தில் தனது செயற்பாடுகளை அமைத்துக் கொண்டுள்ளது. வங்கியின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் (பக்கம் 9 இல் RDB இன் பொது முகாமையாளர்/தலைமை நிர்வாக அதிகாரி அறிக்கையில் மேலும் விபரிக்கப்படும்) எதிர் காலச் செயற்பாடுகளுக்கான ஒரு இளைஞர்களின் பயிலுனர் குழுவை நியமித்துள்ளது. இவர்களே வங்கியின் எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுப்போராக உள்ளனர்.

நன்றிகள்...

வங்கியின் சில வாடிக்கையாளர் நடவடிக்கைகளில் காணப்பட்ட சிக்கலான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், வங்கியின் செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கமானது மிகவும் உதவியாக இருந்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க, கௌரவ பொது நிறுவன மேம்பாட்டு அமைச்சர் கபீர் ஹாசிம் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருக்கு அவர்களின் மதிப்புமிக்க ஆலோசனை மற்றும் தொடர்ச்சியான ஆதரவு என்பவற்றிற்கு எமது நன்றிகள். கௌரவ நிதி அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் பொது திறைசேரி அதிகாரிகளுக்கு அவர்களின் வழிநடத்தல் மற்றும் ஆதரவுக்காக எமது விஷேட நன்றிகள்.

மத்திய வங்கியின் ஆளுனர், துணை ஆளுனர்கள் மற்றும் மத்திய வங்கியின் பிரதேச மேம்பாட்டுத் துறையின் அதிகாரிகள் ஆகியோரால் வழங்கப்பட்ட வழிகாட்டல் மற்றும் வங்கிக்கான கணக்காய்வாளர் நாயகம் மற்றும் ஊழியர்களால் வழங்கப்பட்ட ஆதரவு என்பவை மிகவும் பாராட்டத்தக்கவை. மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், அரசாங்க மற்றும் அரசு சாரா அதிகாரிகளின் அனைத்து ஆதரவுகளுக்காகவும் ஊக்கத்திற்காகவும் எமது நன்றிகள். இவை கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பயணத்தில் எமக்கு பெரிதும் உதவின.

பணிப்பாளர்கள் குழு, பொது முகாமையாளர்/தலைமை நிர்வாக அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபால, பெருநிறுவன முகாமைத்துவம் மற்றும் சாதகமான விளைவுகளைப் பெறுவதற்கான அனைத்து ஊழியர்களினதும் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. கடன் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு நிறுவனங்களால் RDB க்கு வழங்கப்பட்ட ஆதரவு மிகவும் பாராட்டப்படும் அதே வேளையில், வாடிக்கையாளர் மற்றும் வைப்பாளர்களுக்கு அவர்களின் தொடர்ச்சியான ஆதரவிற்கும் நம்பிக்கைக்கும் நாம் மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மிக முக்கியமாக, ஒரு சிறப்பு வங்கியாக RDB மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்துள்ள எமது பங்குதாரர்களுக்கு எமது நன்றிகள். அச்சு, இலத்திரணியல் மற்றும் சமூக வலைத்தளங்களுக்கு அவர்களது ஆதரவுகளுக்காக வங்கியின் பணிப்பாளர்கள் குழுவின் சார்பாக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாட்டையும் அதன் கிராமிய மக்களையும் ஆதரிக்கும் தோழனாக பிரதேச அபிவிருத்தி வங்கி ஒரு நம்பிக்கையூட்டும் புதிய ஆண்டில் தனது செயற்பாடுகளைத் தொடரவுள்ளது.



பிரசன்ன பிரேமரத்ன

தலைவர்

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மதிப்புரை



வங்கி அதன் குறிப்பிடத்தக்க வளர்ச்சியில் பெருமிதம் கொள்கிறது, இதில் 29% பங்களிப்பு ஆதன அடிப்படையிலான வளர்ச்சியான ரூ. 38 பில்லியன் மற்றும் 20% வளர்ச்சி கடன்கள் மற்றும் முற்பணம் அடிப்படையிலான ரூ. 22 பில்லியன் வளர்ச்சி என்பனவாகவுள்ளன.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் குறிக்கோளினை அடைவதற்கான அர்ப்பணிப்பு ஆண்டு முழுவதும் பேணப்பட்டது. முக்கியமாக, கிராமப் புறங்களில் இலங்கை தொழில்முனைவோர்களை வளர்ப்பதற்கு வாடிக்கையாளர்களுடனான பயனுள்ள உறவை பராமரிப்பதில் வங்கி பங்காற்றியுள்ளது. வங்கியின் வளர்ச்சியை பேணும் அதே வேளையில், சாதகமற்ற காலநிலை நிலமைகளால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு பல நலன்களையும் உறுதிப்படுத்தியுள்ளது.

வங்கி அதன் குறிப்பிடத்தக்க வளர்ச்சியில் பெருமிதம் கொள்கிறது, இதில் 29% பங்களிப்பு ஆதன அடிப்படையிலான வளர்ச்சியான ரூ. 38 பில்லியன் மற்றும் 20% வளர்ச்சி கடன்கள் மற்றும் முற்பணம் அடிப்படையிலான ரூ. 22 பில்லியன் வளர்ச்சி என்பனவாகவுள்ளன. 31 டிசம்பர் 2017 இல் வங்கியின் செயற்பாடற்ற கடன்கள் 3.27% என்ற விகிதத்தில் இருந்தன. பாதகமான காலநிலை சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட பல வாடிக்கையாளர்களுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளை எடுக்க வங்கி விரும்பவில்லை.

2017 ஆம் ஆண்டில் வங்கியின் மொத்த வருமானம் ரூ. 22 பில்லியன் மற்றும் இயக்க இலாபம் ரூ. 3.3 பில்லியனாக பதிவு செய்யப்பட்டு முறையே 40% மற்றும் 55% வருடாந்த வளர்ச்சியைக் காட்டியது. மேலும், வங்கியின் வருடாந்த வருமான வளர்ச்சி முறையே 74% மற்றும் 100% ஆக ரூ 1.28 பில்லியன் வரிக்கு வரிக்கு முந்திய இலாபமும் ரூ. 2.19 பில்லியன் வரிக்குப் பிந்திய இலாபமும் பதிவு செய்யப்பட்டன. இந்த இலக்குகள் வங்கியின் மூலோபாய திட்டம், மேம்பட்ட தயாரிப்புக்கள், மற்றும் RDB குடும்பத்தின் ஒருங்கிணைந்த முயற்சிகள் ஆகியவற்றின் மூலம் அடையப் பெற்றவையாகும்.

பயிற்சி மற்றும் ஆட்சேர்ப்பு

RDB குடும்பத்தின் தொழில் வளர்ச்சியானது வங்கியின் முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான முன்னுரிமை வழங்கப்படும் துறையாகவுள்ளது. அதன ஊழியர்களின் திறன்களை அதிகரிக்க, வங்கியானது கடந்த காலத்தில் செய்தது போல் பயிற்சி அமர்வுகளை ஒழுங்கு செய்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட பல ஊழியர்கள் வெளிநாட்டு பயிற்சி பெற்றனர். வங்கியின் உதவியாளரிலிருந்து உதவி பொது முகாமையாளர் வரையிலான உத்தியோகத்தர்களின் தகுதிக்கேற்ப பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன.

இருப்பினும், அடுத்த இரு ஆண்டுகளில் சுமார் 200 ஊழியர்கள் ஓய்வுபெற இருக்கின்ற போதிலும் இளைய ஊழியர்கள் அவர்களின் இடத்தை நிரப்பத் தேவையான திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை பெற்றிருக்கவில்லை. இந்த சவாலுக்கு ஒரு தீர்வாக வங்கி நாடு முழுவதும் இருந்து 115 க்கும் மேற்பட்ட முகாமைத்துவப் பயிற்சிப் பணியாளர்களை நியமித்தது. 2018 ஆம் ஆண்டில் வங்கியின் சேவைக்காக குறைந்தபட்சம் 300 அபிவிருத்தி உதவியாளர்களை நியமனம் செய்ய வங்கி உத்தேசித்துள்ளது. வங்கியின் புத்தாக்க மூலோபாய கண்ணோட்டம் இந்த விடயங்களை முக்கியமாக கருத்திற் கொள்கிறது.

மேம்படுத்தப்பட்ட தயாரிப்புச் சேவை

வங்கியின் கவனம் கடன் அமைப்பில் அமைந்திருந்தாலும் – கடன் முற்போக்கு அமைப்பு (LOS) அபிவிருத்தி – RDB அதன் தயாரிப்புப் பிரிவுகளை மேம்படுத்துவதற்குமான கவனத்தைச் செலுத்துகின்றது. அதன் வைப்பாளர்களின் வளரும் தேவைகளுக்கு இடமளிக்கும் வகையில், வங்கியின் 14+ மற்றும் RDB Victory ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 14 வயதிலேயே இளைஞர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு கணக்கு 14+ ஆகும். RDB Victory என்பது நீண்ட கால முதலீட்டை ஊக்குவிக்க அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். இந்த வைப்புத் திட்டங்கள் கணிசமாக ஆண்டின் வங்கியின் மொத்த வைப்புத்தொகைக்கு பங்களித்துள்ளன.

விளைவினைப் பெறுதல்

வங்கியின் வாடிக்கையாளர் தளம் அதன் தயாரிப்புப் பிரிவுக்கு விரிவாக்கப்பட்ட மேம்பாடுகளைப் பற்றி முறையாக தகவல் அளிக்கின்றது. கடந்த காலத்தில் இருந்தே, Dorin Dora அதிகாரிகள் வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை அளிக்க தனிப்பட்ட முறையில் வருகை தந்தனர். இந்த அதிகாரிகள் வைப்புகளுக்கான ஊக்குவிப்புத் திட்டமாக பாம்டொப்க்களை வழங்கினர். RDB இந்த ஆண்டில் 13,800 ஜன ஹமு திட்டங்களை முன்னெடுத்தது. இந்த திட்டங்கள் முறையான வங்கி நடவடிக்கைகளுக்கு கிராமப்புற மக்கள் மத்தியில் கணிசமான எண்ணிக்கையிலான வரவேற்பை ஏற்படுத்தின. இந்த வகையான நிகழ்ச்சிகள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு சேமிப்புக்கான ஊக்குவிப்புக்களை அளிக்க உதவுகின்றன. கடந்த காலத்தில் தொழில் முனைவோர் வளர்ச்சி திட்டங்களும் இதேபோன்ற பிண்ணனியில் நடத்தப்பட்டன. இத்திட்டங்கள் முதன்மையாக இளைஞர்களையும், பெண்களையும் தங்கள் சமூகங்களில் தொழில் முனைவோர் திட்டங்களை வழிநடத்த ஊக்குவிக்கின்றன. இந்த வகையான திட்டங்கள் பல வியாபார தளங்களில் பல வேலை வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளன.

தொழில்நுட்ப புத்தாக்கங்கள்

வங்கி தனது தயாரிப்புகளை மேலும் பயனர் நட்பு கொள்ளும் பொருட்டு நவீன வங்கி தொழில்நுட்பங்களை இணைப்பதில் கவனம் செலுத்துகிறது. முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்டது போலவே, மேலும் ATMகள் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டன. இந்த ஆண்டு, வங்கி மற்றொரு வசதியையும் அறிமுகப்படுத்தியது, இது வாடிக்கையாளர்களுக்கு RDB மூலமாக இலங்கையில் உள்ள வேறு எந்த வங்கியுடனும் பணப்பரிமாற்றம் மேற்கொள்ள அனுமதிக்கிறது. வரவிருக்கும் ஆண்டுகளில் வங்கியானது, அதன் செயற்பாடுகளை மேம்படுத்தும் தொழில்நுட்பங்களைத் தொடர்ந்தும் பேணுவதுடன் அவற்றை தனது வலையமைப்புடன் இணைத்துக் கொள்ளவும் முயற்சிக்கும்.

சவால்களை எதிர்நோக்கிய, எதிர்கால நடவடிக்கைகள்

வரிகளின் அமுலாக்கம் இலங்கை வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க அளவு அழுத்தம் கொடுத்துள்ளது. ஒரு அபிவிருத்தி வங்கியாக, RDB வைப்புத்தொகை மற்றும் கடன்களை பெரிதும் நம்பியுள்ளது. இந்த வகையான வங்கிகளின் வணிக மாதிரியைப் பொறுத்தவரையில், அபிவிருத்தி வங்கிகளுக்கு என சிறப்பு வரி விதிப்பு திட்டத்தை அரசு உருவாக்க வேண்டும். நாட்டின் விவசாய முறைமையை மேம்படுத்துவதற்காக RDB திட்டமிட்டுள்ளது. ஒரு சிறப்பு வரித் திட்டம், அதன் வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு வங்கிக்கு போதுமான வைப்புத் செய்யும் தலைப்புக்கள் கைவசம் இருப்பதை உறுதி கடந்த ஆண்டு சவாலாகவே இருந்தது, ஆனால் கவனம் தேவைப்பட வேண்டிய பகுதிகளையும், மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டியவைகளையும் குறித்து வங்கியின் அதிக அளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பிரதேச அபிவிருத்தி வங்கி தனது எதிர்கால நடவடிக்கைகளுக்கு நன்கு திட்டமிட்டதாக இருக்க முடிகிறது.

நன்றிகள்

நிர்வாக குழு மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டப்படும் அதே நேரத்தில், தலைவர் மற்றும் பணிப்பாளர் குழுவிடம் இருந்து பெறப்பட்ட ஆதரவு வங்கியை முன்னேற்றமடையச் செய்துள்ளது. கௌரவ பொது நிறுவன அபிவிருத்தி அமைச்சர், கௌரவ நிதி அமைச்சர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கு வங்கிக்கு வழங்கிய ஆதரவுக்காக மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். பொது திறைசேரி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் சிறப்பு ஆதரவுக்காகவும் நன்றிகள். கணக்காய்வாளர் நாயகம் மற்றும் ஆண்டு முழுவதும் RDB க்கு உதவிகள் வழங்கிய அரசாங்க மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அவற்றின் அலுவலர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகள். இறுதியாக, RDB இன் ஆறு மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு வங்கியின் மீது கொண்டுள்ள உறுதியான நம்பிக்கைக்காக நமது நன்றிகள். இது எமக்கு எப்பொழுதும் வலுவான ஊக்கமாக இருந்து வருகிறது.



ரி. ஏ. ஆரியபால

பொது முகாமையாளர்/தலைமை நிறைவேற்று அதிகாரி

5

முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

13 நிதிக் கூற்று மதிப்பாய்வு

16 வாடிக்கையாளர் மற்றும் அவர்களுடனான தொடர்புகள் பற்றிய மதிப்பாய்வு

18 சமூக மற்றும் சுற்றுச்சூழல் மீளாய்வு

22 சிறப்பு நிகழ்வுகள்

24 பணியாளர் மீளாய்வு

26 தயாரிப்புக்களும் சேவைகளும்

சவாலான வணிகச் சூழலில் வரவு செலவுத்திட்டத்தில் 148% வரிக்குப் பின்னரான இலாபத்தை அடைந்ததன் மூலம் எதிர்பாராத எதிர்காலச் சவால்களை சந்திக்கும் வங்கியின் உறுதிப்பாடு நிலைநாட்டப்படுகிறது.

அபிவிருத்தி நிதிக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனமான, பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. நாட்டின் பெரும்பாலான அபிவிருத்தி திட்டங்களுக்கு வங்கி முன்னணி நிதியளிப்பாளராக முக்கிய பங்கு வகிக்கிறது. RDB இப்போது நாட்டில் பிரதேச அபிவிருத்திக்கான ஒரு தனித்துவமான நிதி நிறுவனமாக உருவாகியுள்ளது. பொருளாதாரத் துறைகளில் பணியாற்றும், பெரும் பாலான நிதி நிறுவனங்கள் இந்த முக்கியமான மற்றும் அதிநவீன அரங்கில் தீவிரமாக பங்கேற்கத் தயங்குகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட நாடு முழுவதும் பரவலாக 6 மில்லியன் மக்கள் எமது வாடிக்கையாளர்களாக உள்ளனர். இது நாட்டினதும் அதன் மக்களதும் அபிவிருத்தி வங்கியின் பிரதான முக்கியத்துவம் வாய்ந்த அம்சம் ஆகும். எனவே, வங்கி அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் ஈடுபட்டு அதன் மூலம் 265 கிளைகளின் ஊடாக நாடு முழுவதிலுமுள்ள கிளை வலையமைப்பு ஊடாக நாட்டை அபிவிருத்தி செய்ய முற்படுகிறது.

இலாபம்

2017 ஆண்டு RDB க்கு மிகவும் குறிப்பிடத்தக்க ஆண்டாகும், ஏனெனில் நாங்கள் வரவு செலவு இலக்குகளை விட சிறந்த செயல்திறனை பதிவு செய்ய முடிந்தது. வங்கியின் மொத்த வருமானம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 40% அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் செயல்பாட்டு இலாபம் ரூ. 3,307 மில்லியன் ஆகும், இது 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 2,131 மில்லியன் ரூபாயை விட 55% ஆகும். வரிக்கு முன்னரான வருமானம் (ROA) 2016 ஆம் ஆண்டில் 1.8% ஆக இருந்த போதும் அது 2.2% ஆக 2017 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2017 டிசம்பர் 31 இல் வங்கியின் மொத்த ஆதனங்கள் ரூ. 169 பில்லியனாக இருந்தது. இது முந்தைய ஆண்டை விட 29% வளர்ச்சியைப் பதிவு செய்தது.

வரவுசெலவுத் திட்டத்தின் மீதான பிரதான சாதனைகள்

	உண்மையான ரூபா '000	பட்ஜெட்டில் ரூபா '000	சாதனை %
மொத்த வருமானம்	22,016,079	20,168,515	109
செயல்பாட்டு இலாபம்	3,306,995	3,015,304	110
வரிக்குப் பின்னரான இலாபம்	1,283,930	869,114	148

RDB இன் காலாண்டு நிதியியல் செயற்பாடு

RDB யின் காலாண்டு நிதி செயல்திறன் 2017 ஆம் ஆண்டில் கணிசமாக அதிகரித்துள்ளது

	2017				2016
	31 டிசம்பர் ரூபா '000	31 செப்டம்பர் ரூபா '000	31 ஜூன் ரூபா '000	31 மார்ச் ரூபா '000	31 டிசெம்பர் ரூபா '000
நிகர இயக்க வருமானம்	10,157,834	6,768,673	4,163,400	2,031,747	8,451,603
வரிக்கு முந்தைய இலாபம்	3,306,995	2,102,526	1,172,677	501,023	2,130,568
வரிக்குப் பின் இலாபம்	1,283,930	725,825	365,982	154,917	641,288
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	130,324,846	123,460,985	116,894,818	111,840,457	108,102,760
வாடிக்கையாளர் வைப்பு	139,827,365	129,240,327	121,929,692	107,422,072	107,031,721
மொத்த ஆதனங்கள்	169,259,202	158,483,741	147,765,497	138,553,757	130,913,984
பங்குதாரர்கள் நிதி	9,612,749	6,724,770	6,364,927	6,153,862	5,998,946


வருமானம்

வங்கியின் மொத்த ஆண்டுக்கு ஆண்டு வருமான உயர்வு ரூ. 15.7 பில்லியனிலிருந்து ரூ. 22 பில்லியனாக 40% உயர்வு காணப்பட்டது. இதற்கு முக்கியமாக வட்டி வருமானம் 41% அதிகரித்ததுடன், கட்டணம் மற்றும் தரகு வருமானம் 22% வளர்ச்சியும் மொத்த வருவாய்க்கு பங்களித்துள்ளது.

மொத்த வருவாயின் கலவை	ரூபா '000
வட்டி வருமானம்	20,909,580
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	1,101,825
பிற இயக்க வருமானம்	4,674
மொத்த வருமானம்	22,016,079


நிகர வட்டி வருமானம் (NII)

2017 நிதியாண்டில் நிகர வட்டி வருமானம் 27% ஆக அதிகரித்துள்ளது, இது ரூ. 7,616 மில்லியனிலிருந்து ரூ. 9,676 மில்லியனாக அதிகரித்துள்ளது.



நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம் – வளர்ச்சி

2017 ஆம் ஆண்டில் 18% வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் 921 மில்லியன் ரூபாவிற்கு எதிராக 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது 781 மில்லியன் ரூபாவாகும்.




வரி

	2017 ரூபா '000	2016 ரூபா '000	மாற்றம் %
நிதி சேவைகள் மீதான VAT	984,943	767,485	28
தேசத்தைக்கட்டியெழுப்பும் வரி	131,326	107,483	22
வருமான வரி	906,796	614,312	48
மொத்த வரிச் செலவு	2,023,065	1,489,280	36

2017 ஆம் ஆண்டில், நிதி சேவைகள் மற்றும் தேசத்தைக்கட்டியெழுப்பும் வரி மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூ. 1,116 மில்லியன் மற்றும் வருமான வரி ரூ. 907 மில்லியன் ஆக இருந்தது. மொத்தம் ரூ. 2,023 மில்லியன் வருடாந்த வரியாகச் செலுத்தப்பட்டது.


ஆதனங்கள் மீதான வருவாய் (ROA)

வங்கியின் 2017 ஆம் ஆண்டிற்கான ROA (வரிக்கு முன்னர்) 2.2% ஆக பதிவு செய்யப்பட்டது. இது 2016 ஆம் ஆண்டில் 1.8% ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.



ஈவுத்தொகை மீது வருவாய் (ROE)

2017 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க 49% வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 11.04% இலிருந்து 16.45% வருவாயை அடைந்தது, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது வரிக்கு பிந்திய இலாபத்தில் (PAT) 100% அதிகரித்துள்ளது.



மொத்த ஆதனங்கள்


2017 ஆம் ஆண்டின் இறுதியில், அதே ஆண்டில் மொத்த ஆதனங்களில் 29% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. அதன்படி, ஆதனங்களின் மொத்த பெறுமதி ரூ. 160 பில்லியன் எல்லையைக் கடந்து ரூ. 169 பில்லியன் ஆக அதிகரித்துள்ளது.

மொத்த பங்குதாரர்களின் பங்கு

வங்கியின் மொத்த பங்குதாரர்களின் பங்கு ரூ. 9,613 மில்லியன். குறிப்பிடத்தக்க இயக்க முடிவுகள் மற்றும் புதிய மூலதனங்கள் மூலம் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பொது திறைசேரியில் ரூ. 2,500 மில்லியன்கள் காணப்பட்டுள்ளது.

பங்குதாரர்களின் பங்கு – வளர்ச்சி

ரூ. மில்லியன்




ஆதனங்களின் தரம்

வங்கியின் செயல்பாடு அற்ற கடன் (NPL) விகிதம் 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி 3.27% என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இது முந்தைய ஆண்டில் 2.85% ஆக இருந்தது. வலுவான மதிப்பாய்வு, கண்காணிப்பு மற்றும் மீட்பு செயல்முறைகள் வங்கி நிர்வகிக்கப்படும் மட்டத்தில் இந்த NPL விகிதத்தை பராமரிக்க உதவியது.

வங்கியின் செயல்பாடு அற்ற கடன்கள் (NPL) விகிதம்


%



இலங்கை மத்திய வங்கியின் கடன் இடர் வகைப்பாட்டின் அடிப்படையிலான வங்கியின் செயற்பாடற்ற கடன்களின் ஒரு பகுப்பாய்வை கீழே காணலாம்:

வங்கியின் செயற்பாடு அற்ற கடன்கள் மற்றும் ரசீதுகள்

ரூ. மில்லியன்



பணமாற்று ஆதனம்

	2017 %	2016 %
சட்டரீதியான பணமாற்று ஆதன விகிதம்	26.27	21.25

வங்கி தொடர்ந்து ஒழுங்குமுறை தேவைகளுக்கு மேலாக அதன் பணமாற்ற ஆதன அளவுகளை பராமரிக்கிறது. டிசெம்பர் 2017 ஆம் ஆண்டு எதிர்பாராத நிலையான வைப்புத்தொகை அதிகமான சட்டரீதியான பணமாற்ற ஆதன விகிதத்தை பதிவு செய்தது.

தகவல் தொழிநுட்ப மேம்பாடுகள்

2017 ஆம் ஆண்டில், தொடர்ச்சியாக வாடிக்கையாளர்களின் சேவை மற்றும் உள்நாட்டு செயல்திறனை மேம்படுத்துவதற்காக தகவல் தொழிநுட்ப பயன்பாடு பெரிதும் காணப்பட்டது.

இந்த ஆண்டின் போது, நடமாடும் சேமிப்பு சேகரிப்பு உதவியாளர்கள் எண்ணிக்கையை 356 க்கு அதிகரித்தது, இதனால் வாடிக்கையாளர் இருப்பிடத்திலேயே வங்கியியல் சேவைகள் மேம்படுத்தப்பட முடிந்தது.

வருடாந்த வங்கியில் மனித வள முகாமைத்துவ கட்டமைப்பின் மூன்று பிரதான தொகுதிகளான ஊழியர் சுயவிவரங்கள், நேர வருகை மற்றும் ஊதிய செயல்பாடுகள் ஆகியவற்றை செயல்படுத்த முடிந்தது.

2017 ஆம் ஆண்டில், சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கான முக்கிய தகவல்களை வழங்குவதற்காக வங்கியியல் கட்டமைப்புக்கு பல மேம்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த ஆண்டின் முதல் பாதியில் பதினேழு தகவல் தொழிநுட்ப மற்றும் வணிகப் பிரிவு பயனாளர்களுக்கு மைய வங்கி முறை CBS விற்பனையாளர்களால் சென்னையில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் போது வங்கி மற்றும் நிதித் துறையில் புதிய தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

ATM அட்டைகளை வழங்குவதில் 2017 ஒரு குறிப்பிடத்தக்க சாதனையைப் பெற்றது. 100,000 ATM கார்டுகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன. வங்கியின் ATM அட்டை வைத்திருப்பவர்கள் வங்கியின் 24 மணி நேர ATM இயந்திரங்களில் இருந்து தங்கள் வங்கிக் கணக்கை அணுகலாம், மற்றும் லங்காபே வலையமைப்பின் ஊடாக 3500 ATM களில் வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்குகளில் வங்கி பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியும். இதற்காக வங்கி SMS சேவை ஒன்றையும் அறிமுகப்படுத்தியது. SMS வழியாக தமது கணக்கில் உள்ள அனைத்து பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களைப் பெற வாடிக்கையாளருக்கு இது உதவுகிறது

வாடிக்கையாளர்களுக்கு பொது பாவனைப் பட்டியல் செலுத்தும் வசதி மற்றும் பொது மின்னணு நிதி பரிமாற்ற (CEFT) வசதியை அறிமுகப்படுத்துவதில் வங்கி பெருமை கொள்கிறது. இந்த முயற்சிகள் எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகளை வழங்க எமக்கு உதவுகின்றன.

2017-2022 இற்கான ஒரு தகவல் தொழிநுட்ப மூலோபாய திட்டத்தை தயாரிப்பது மற்றொரு முக்கிய முன்முயற்சியாகும். இந்த திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன் அதன் வாடிக்கையாளர் தளத்தை மேலும் விஷ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

வாடிக்கையாளர் மற்றும் அவர்களுடனான தொடர்புகள் பற்றிய மதிப்பாய்வு

கடன் மற்றும் செயற்பாடுகள்

தேசிய அபிவிருத்தி வங்கியாக தேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிடத்தக்க பங்களிப்பை வங்கி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் குறிக்கோளை அடைவதில் வங்கியால் பயன்படுத்தப்படுகின்ற முக்கிய கருவி கடன் செயற்பாடு ஆகும். விவசாயம், சிறு தொழில்கள், மீன் வளர்ப்பு, கால்நடை பராமரிப்பு, வீடமைப்பு மற்றும் பொருளாதாரத்தின் சேவை பிரிவு போன்ற முக்கியமான பிரிவுகளை ஊக்குவிப்பதற்கு கடன் வசதி வழங்கப்படுகிறது, இதன் மூலம் இந்த கடன் வருவாய்கள் தேசிய வருவாயை முன்நோக்கி பங்களிப்பை அதிகரிக்கிறது. வங்கியின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று கிராமப்புறங்களில் வலுவான செயற்பாட்டைக் கொண்டுள்ளதாகும், இது 1985 முதல் பிரதேச கிராம அபிவிருத்தி வங்கிகளின் தொடக்கம் முதல் ஆரம்பமாகிறது.

கடன் நடவடிக்கைகளை உள்ளடக்கிய வங்கியின் அனைத்து நடவடிக்கைகளிலும் காணப்படும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பல உத்திகளை வங்கி கொண்டுள்ளது. சலுகை அடிப்படையிலான வட்டி விகிதங்களை வழங்குவதன் மூலம் தேவைப்படும் துறைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட கடன் வசதிகளின் விதிமுறைகள், பாதுகாப்புத் தேவைகள் மீது வசதியான மீள்செலுத்தல் காலங்கள் என்பவை இத்திட்டங்களை சரியாக முன்னெடுக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், வங்கி மேலதிக வசதிகளை தொழில் முனைவோர் மேம்பாடு, பயிற்சி, மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான ஆலோசனைகளை வங்கி பெற்றுக் கொடுத்துள்ளது. இந்தச் சேவைகள் கடனளிப்பதனால் உண்டாகும் இடரினைக் குறைக்க உதவுகின்றன, இதன்மூலம் கடனளிப்பிற்கான பத்திரங்களின் உத்தரவாதத்தில் தங்கியிருப்பது குறைக்கப்படுகிறது.

தற்போது, பல்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளின் பல்வேறு தேவைகளுக்கு வடிவமைக்கப்பட்ட வெவ்வேறு கடன் திட்டங்கள் வங்கியில் செயற் படுத்துகிறது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய முதலீட்டு வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி (CBSL) போன்ற பல பங்காளி அமைப்புகளால் நடைமுறைப்படுத்தப்படும் மறுநிதியளிப்பு திட்டங்கள் மூலம் அபிவிருத்தி கடனுதவி திட்டங்களின் பெரும்பகுதியை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி பெற்றுக்கொள்ளப்படுகிறது. அதன்படி, ஆண்டு முழுவதும், வங்கியானது ஒரு பங்களிப்பு கடன் நிறுவனமாக (PCI) 15 மறுநிதியளிப்பு திட்டங்களில் செயலிபட்டது. இதில் இலங்கை மத்திய வங்கியின் மூலம் செயல்படுத்தப்படும் 6 திட்டங்கள் காணப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் அனைத்து மீள்நிதியளிப்பு திட்டங்களிலும் பங்கு பெறுவதன் மூலம் வங்கி தன்னை வலுவாக நிலைநிறுத்திக் கொண்டது.

மீளாய்வு செய்யப்படும் ஆண்டில், வங்கி "களஞ்சியசாலை பற்றுச்சீட்டு நிதி" என்ற பெயரில் ஒரு புதுமையான கடன் வழங்கும் நிலைப்பாட்டை மேற்கொண்டது. இலங்கையில் முதல் தடவையாக விவசாயிகளுக்கு உதவும் இத்தகைய ஒரு வங்கியியல் கடனளிப்புத் திட்டம் பயன்படுத்தப் பட்டது குறிப்பிடத்தக்கதாகும். அறுவடை காலங்களில் குறைந்த சந்தை விலையில் தங்கள் உற்பத்திகளை விற்பதிலிருந்து தவிர்ந்து தற்காலிக நிதியைப் பெறுவதற்கு விவசாயிகளுக்கு இத்திட்டம் உதவுகிறது. மொனராகலை மாவட்டத்திலுள்ள புத்தல, அனுராதபுர மாவட்டத்திலுள்ள உபுல்தெனிய, மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் ஆகியவற்றில் அரசாங்கத்தின் சார்பில் உலக வங்கியின் உதவியுடன் புதிதாக களஞ்சியசாலைகள் 2017 மார்ச் அளவில் ஆரம்பிக்கப்பட்டன. சரியான விலை நிலைகள் உறுதிப்படுத்தப்படும் வரை விவசாயிகள் இந்த களஞ்சியசாலைகளில் தங்கள் அறுவடைகளை சேமித்து வைக்க இதன் மூலம் ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், அறுவடை செய்யப்படுவதற்கு முன்னர், விலைகள் ஒரு நியாயமான அளவிற்கு வரும் வரை விவசாயிகளுக்கு அவசர பண தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு குறுகிய கால கடன்களை பெறுவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.


2017 ஆம் ஆண்டில் வங்கியால் வழங்கப்பட்ட கடனுடன் தொடர்புடைய காப்பீட்டு நடவடிக்கைகளை சேர்ப்பதன் மூலம் வங்கி வருமான வருவாயைத் தொடர்ந்தும் சேர்க்கிறது.

இந்த நோக்கத்திற்காக, வேளாண்மை காப்பீடு, கால்நடை வளர்ப்பு காப்பீடு, வாகன கடன் காப்பீடு, வீடமைப்பு கடன் காப்பீடு போன்ற ஏழு காப்பீட்டு நிறுவனங்களின் சேவைகளை வங்கி பெற்றுக் கொண்டது. 2017 ஆம் ஆண்டில் இவ்வாறு பெறப்பட்ட கட்டண வருமானம் ரூ. 5.2 மில்லியன் ஆகும். இதன் அடிப்படையில், 2017 ஆம் ஆண்டில் வங்கி காப்பீட்டு நடவடிக்கைகளுக்கான தனிப் பிரிவை நிறுவியது.

மேலும், 2017 ஆம் ஆண்டில், RDB யின் கிளை வலையமைப்பு மூலம் வாடிக்கையாளர், இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் பிஎல்சி ஆகியவற்றின் கட்டணங்களைச் செலுத்துவதற்கான வசதிகளையும் அறிமுகப்படுத்தியது. பிற சேவை வழங்குனர்களுக்கும் இந்த சேவைகளை எதிர்காலத்தில் விரிவுபடுத்த RDB எதிர்பார்க்கிறது.

ரூ. மில்லியன்

கடன்கள் மற்றும் முற்பணங்கள் வளர்ச்சி




கடன்கள் மற்றும் முற்பணங்கள் சேவை பகுப்பாய்வு – உற்பத்திகள் ரீதியாக

வகை	2017 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்
அடகு	9,512	7,874
ஊழியர்கள் கடன்கள்	3,501	3,194
குறுகிய காலம்	7,730	6,211
நீண்ட காலம்	107,601	89,527
மொத்தம்	128,344	106,806

ரூ. மில்லியன்

கடன்கள் மற்றும் முற்பண சேவை பகுப்பாய்வு – தொழில்துறை ரீதியாக




கடன்கள் மற்றும் முற்பண சேவை பகுப்பாய்வு – தொழில்துறை ரீதியாக

வகை	2017 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்
விவசாயம் மற்றும் மீன்பிடி	30,866	23,118
உற்பத்தி	21,349	16,609
போக்குவரத்து	336	374
கட்டுமான/வீட்டுவசதி	31,982	34,469
வர்த்தகர்கள்	20,324	13,814
நுகர்வோர்/ஊழியர்/கொள்கை/சுற்றுலாத்துறை	23,487	18,422
மொத்தம்	128,344	106,806

ரூ. மில்லியன்

கடன்கள் மற்றும் முற்பண சேவை பகுப்பாய்வு – தொழில்துறை ரீதியாக



அறவீடுகள்

2016 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த முதலீட்டில் 2.85% செயற்பாடற்ற கடன்களாக (NPL) இருந்ததனால், அதனை நிர்வகிப்பதற்காக வங்கியால் 2017 ஆம் ஆண்டின் போது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. எங்கள் வாடிக்கையாளர்கள் எதிர் கொண்ட சில துரதிஷ்டவசமான நிலைமைகளுக்கு மத்தியிலும் வங்கியின் NPL விகிதம் 3.27% ஆக நிர்ணயிக்கப்பட்டது. இது 2017 டிசம்பர் 31 இல் 20% கடன் வளர்ச்சியைக் குறித்துக் காட்டியது.

செயற்பாடற்ற பிரிவு	2017 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்
சிறப்பு குறிப்பு	986	492
தரக்குறைவான	885	544
சந்தேகத்திற்கிடமான	533	404
இழப்பு	1,787	1,610
மொத்த செயற்பாடற்ற பிரிவு	4,191	3,050
NPL விகிதம் (%)	3.27	2.85

வைப்பு வளர்ச்சி

வங்கியின் வைப்புத்தொகை ரூ. 140 பில்லியனாக முந்தைய ஆண்டை விட 31% வளர்ச்சியைக் காட்டியது. வங்கியின் சேமிப்பு தொகை ஆண்டின் போது ரூ. 3 பில்லியன்கள் உயர்த்தப்பட்டது.


இந்த வைப்பு சமநிலையை அடைய வங்கியானது பிரதேசங்களில் மேலும் வைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. இதற்காக ஜனவரி 2 ஆந் திகதியின் போது ஒரு நாள் வேலைத்திட்டங்களை கிளை மட்டத்தில் வங்கி மிகவும் வெற்றிகரமாக நடாத்தியது. அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்தும் வகையில் எமது வாடிக்கையாளர்கள் தங்கள் புத்தாண்டு பரிவர்த்தனைகளை வங்கியுடன் ஆரம்பித்தனர்.

சர்வதேச மகளிர் தினம் ஒவ்வொரு ஆண்டும் வங்கிக்கு ஒரு முக்கிய நிகழ்வு ஆகும். சர்வதேச மகளிர் தினத்தை அடிப்படையாகக்கொண்ட பெண்கள் சேமிப்புகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு சேமிப்பு ஊக்குவிப்பு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினத்தில் வங்கியுடனான பரிவர்த்தனைகளின் போது சிறப்பு நன்மைகளும் வாடிக்கையாளருக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

அக்டோபர் 1 ஆம் திகதி சிறுவர் தினத்திற்கு இணையாக ஒவ்வொரு ஆண்டும் சிறியோர் சேமிப்புக் கணக்குகளுக்கான கணிசமான பங்களிப்பும் வழங்கப்படுகிறது. இந்த சிறப்பு நாளில் "RDB அபே லமய்" என்ற சிறப்பு சேமிப்பு ஊக்குவிப்பு திட்டம் தொடங்கப்பட்டது, இது நடப்பு ஆண்டின் சேமிப்புக் கொள்கைக்கு கணிசமாக பங்களித்தது.

ரூ. மில்லியன்

மொத்த வைப்புத்தொகை வளர்ச்சி




வைப்பு வகை

வைப்பு வகை	2017 ரூபா மில்லியன்	2016 ரூபா மில்லியன்
சேமிப்பு வைப்பு	48,988	42,000
நிலையான வைப்பு	90,839	65,032
மொத்தம்	139,827	107,032

ரூ. மில்லியன்

வைப்புக் வகை





RDB மிகப்பெரிய தானியக் களஞ்சியங்களை ஆரம்பித்தல்

ஆண்டின் போது பிரதேச அபிவிருத்தி வங்கி அதன் சாதாரண வாடிக்கையாளர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு முயன்று வருகிறது: வங்கி இதற்காக பல திட்டங்களை ஆரம்பித்துள்ளது. 2017 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தின் முருங்கனில் திறந்து வைக்கப்பட்ட களஞ்சியசாலையானது விவசாயிகள் தமது விளைச்சலை சேமித்து வைக்க பெரிதும் உதவுகிறது.

போதுமான சேமிப்பக வசதி இல்லாததால் விவசாயிகள் பாதிக்கப் படுகின்றனர். முறையற்ற சேமிப்பக நடைமுறைகள் அறுவடையின் மதிப்பைக் குறைக்கலாம். விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இந்த களஞ்சியசாலைகள் ஒரு சிறந்த தீர்வாக உள்ளன. இவை அவர்களுக்கு பூச்சிகள் மற்றும் நீர் சேதம் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பினையும் வழங்குகின்றன.

கடந்த ஆண்டில் நிதி அமைச்சின் ஆதரவுடன் உபுல்தெனிய மற்றும் புத்தலவில் 5 ஏக்கர் பரப்பளவில் 5,000 டன் சேமிப்புத் திறனுடன் கூடிய களஞ்சியசாலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி மன்னார் முருங்கனில் 10,000 டன் வசதியுடன் களஞ்சியசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இது மின்சாரம், தொலைபேசிகள் மற்றும் அறுவடைத் தரத்தை ஆய்வு செய்வதற்கான உபகரணங்கள் என்பவற்றைக் கொண்ட ஆய்வகம் ஆகிய வசதிகளை உள்ளடக்கியுள்ளது.

தானியங்களைச் சேமிப்பதற்கான ஒரு பாதுகாப்பான களஞ்சியசாலையைப் பெற்றுக் கொடுத்ததுடன் நில்லாமல், விவசாயிகள் தங்கள் அறுவடைகளை ஒரு போட்டி விலையில் விற்பதற்கான ஆதரவு மற்றும் அவர்களுக்கு தேவையான நிதி உதவி என்பவற்றையும் வங்கி வழங்குகிறது.

RDB வங்கி சர்வதேச மகளிர் தினத்தை முன்னோக்கி *"அன்பான அம்மா"* என்ற உன்னத தாய்மையை போற்றும் நிகழ்ச்சி திட்டத்தையும் முன்னெடுக்கிறது.

இலங்கை பெண்கள் சமுதாயம் உலகின் மற்ற பகுதிகளிலுள்ள பெண்களின் தற்போதைய நிலைப்பாட்டில் முற்றிலும் மாறுபட்டது. இலங்கையின் பெண்களுக்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உயரிய அந்தஷ்த்து வழங்கப்படுவதை இட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

RDB வங்கி எப்போதும் சமுதாயத்தில் பொருளாதார மற்றும் சமூக நிலைப்பாட்டை வலுப்படுத்த ஒரு முன்னணி பாத்திரத்தை வகிக்கிறது. நாடு முழுவதிலும் பெண்கள் தொழில்முனைவோர் மீது அதிக கவனம் செலுத்துவதன் மூலம் இதனை மேற்கொள்கிறது.

தற்போது வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் பெண்களை இலக்காகக் கொண்ட பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு அரச அபிவிருத்தி வங்கியாக, பிரதேச அபிவிருத்தி வங்கி முக்கியமான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கின்றது. RDB வங்கியானது, நாட்டின் வளர்ச்சிக்காக பெண்களை வலுப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அதிக திறன் மற்றும் வலிமை உள்ள வங்கியாக காணப்படுகிறது.

கடந்த ஆண்டு, மார்ச் மாதம் 8 ஆம் திகதி, சர்வதேச பெண்கள் தின நினைவு நாள் நிகழ்ச்சிகள் கிளை மட்டத்தில் நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், RDB *"லிய சவிய"* கணக்கினால் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளகளில். பின்வரும் விடயங்கள் முக்கியமாக சுட்டிக் காட்டப்பட வேண்டியவைகளாகவுள்ளன.

- உன்னத தாய்மைக்கு *"அன்பான அம்மா"* செயற்திட்டம்
- உங்கள் குழந்தைக்கு ஒரு மதிப்புமிக்க கணக்காக RDB "கெகுளு"
- சலுகை அடிப்படையில் நிதி வசதிகள்
- சிறப்பு பயிற்சி பட்டறை
- வைப்புகளுக்கான சிறப்பு விருதுகள்

சர்வதேச மகளிர் தினம் – 2017 ஐ குறிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய விழா மார்ச் 8 ம் திகதி சரசவி ஸ்டுடியோ, தளுகம, களனியில் நடாத்தப்பட்டது. வங்கியின் தலைவர் பிரசன்ன பிரேமரத்ன, பணிப்பாளர் பிரியந்த அபேசிங்க மற்றும் வர்த்தகத் தூதர் நடிகை உமயங்கண விக்ரமசிங்க ஆகியோர் பங்குபற்றிய "பெண்கள் நடை பவனி" 2017 மார்ச் 8 ஆம் திகதி நடாத்தப்பட்டது.



RDB வங்கி "தொழில் முனைவோர் – 2017" க்கான அனுசரணையாளர்கள்



2017 மார்ச் 31ஆம் திகதி, BMICH இல் தொழில் முனைவோர் – 2017 தேசிய கண்காட்சிக்கு வங்கி நிதியுதவி அளித்தது.

எங்கள் தொழில்முனைவோருக்கு நாட்டின் பரந்த சந்தை வர்த்தக வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், சந்தை வாய்ப்புகளை கண்டறிய இது உதவியது.



RDB புத்தாண்டு நிகழ்ச்சிகள்

வங்கி புத்தாண்டு தினத்தில் தனது கிளை வலையமைப்புகளை திறந்து வைத்து. சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு விழா பரிவர்த்தனைகளை மேற்கொண்டது.

"RDB பரிசு பொதி" – புத்தாண்டு நாளில் வங்கி நேரத்தில் மணித்தியாலத்திற்கு ஒரு நுகர்வோர் பொருட்களின் மதிப்புமிக்க பரிசு பொதி வழங்கப்பட்டன இவ்வாண்டு வழமைப்போல வெற்றிகரமாக நாடு முழுவதும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஸ்தாபகர் திரு. ரொனி டி மெல் அவர்களின் கௌரவிப்பு விழா நிகழ்வு



RDB வங்கி அதன் ஸ்தாபகரான ரொனி டி மெல் அவர்களின் கௌரவ விழா நிகழ்வு கொழும்பு ஹில்டனில், ஜூன் 24 அன்று நடாத்தியது. பொதுத் தொழிற்துறை அமைச்சர் கௌரவ கபீர் ஹாசிம், வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் மத்திய வங்கி ஆளுநர் டாக்டர் இந்திரஜித் குமாரசுவாமி ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

RDB வங்கி தங்க விருதுகள் மற்றும் சிறப்பு விருதுகள் – 2016



மாவட்ட, மாகாண மற்றும் தேசிய அளவிலான முன்னணி பங்குதாரர்களை அங்கீகரிக்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட "தங்க விருதுகள் – 2016" மற்றும் "செயல்திறன் சிறப்பு விருதுகள்" வழங்கும் வைபவம் ஜூலை 16, 2017 அன்று பொதுத் தொழிற்துறை அமைச்சர் கௌரவ கபீர் ஹாசிம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

RDB க்கு 25 வருடங்களுக்கும் அதிகமான மதிப்புமிக்க சேவையை வழங்கிய ஊழியர்களுக்கு மொத்தம் 90 தங்க விருதுகள் வழங்கப்பட்டன.

மிரிஸ்வத்த கிளை சிறந்த கிளையாக விருது பெற்றது. எம்பிலிப்பிட்டிய மற்றும் கிரிமெட்டியான கிளைகள் மொத்தமாக 265 கிளைகளில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றன. மேல் மாகாணமானது சிறந்த செயல்பாட்டு மாகாணமாகவும் கம்பஹா மாவட்டமானது சிறந்த செயல்பாட்டு மாவட்டமாகவும் விருது பெற்றன.

பொதுத் தொழிற்துறை அமைச்சர் கௌரவ கபீர் ஹாசிம் பிரதம விருந்தினராகவும் மத்திய வங்கியின் ஊழியர்கள், அதன் தலைவர் பிரசன்ன பிரேமரத்ன, பணிப்பாளர் பிரியந்த அபேசிங்க, பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி டி. ஏ. ஆரியபால, வங்கியின் பெருநிறுவன முகாமைத்துவம், RDB அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்க அதிகாரிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

முக்கிய செயல்திறன் அம்சங்கள்

- 2016 ஆம் ஆண்டின் சிறந்த கிளை – மிரிஸ்வத்த – 1 வது இடம்
- 2016 ஆம் ஆண்டின் இரண்டாம் சிறந்த கிளை – எம்பிலிபிட்டிய
- 2016 ஆம் ஆண்டின் மூன்றாவது சிறந்த கிளை – கிரிமெடியான
- 2016 ஆம் ஆண்டின் சிறந்த மாவட்டம் – கம்பஹா
- 2016 ஆம் ஆண்டின் சிறந்த மாகாணம் – மேல் மாகாணம்



RDB "தொரின் தொர" சேமிப்பு உதவியாளர்கள் சேவைக்கு மேலும் அதிகாரம் அளித்தல்

RDB வங்கி *"தொரின் தொர"* சேவையானது தினசரி அடிப்படையில் வங்கியின் கிளைகளின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்களின் இருப்பிடங்களை நோக்கி அர்ப்பணிக்கப்பட்ட குழுவினை சேவையில் ஈடுபடுத்துகிறது. இந்த வழக்கமான வருகைகள் இலக்கு வாடிக்கையாளர்களுக்கு பெரும் நிவாரணமும் வசதியும் அளித்து, தமது நேரத்தை சேமிக்க உதவுகின்றன. அவ்வாறு இல்லையெனில் அவர்கள் தங்கள் வங்கி பரிவர்த்தனைகளுக்காக கிளைக்கு மீண்டும் மீண்டும் வருகை தர வேண்டிய நிலை ஏற்படும்.

இந்த உதவியாளர்களுக்கான பயிற்சிகள் மாஸ் ஹோல்டிங்ஸ் பயிற்சி மையத்தில் அவர்களது சிறந்த தகவல் தொடர்புத் திறனை மேம்படுத்துதல், நிதியியல் கல்வியறிவு மற்றும் பிற வாடிக்கையாளர் தேவைகளை மேம்படுத்துதல் என்பவற்றின் பொருட்டு நடாத்தப்பட்டன.

RDB பொது முகாமையாளர்/தலைமை நிர்வாக அதிகாரி திரு. டீ. ஏ. ஆரியபால, மனிதவள அபிவிருத்தி மற்றும் நிர்வாக பிரிவு தலைவர் திரு. ஜகத் கருணாதிலக, DGM- செயற்பாடுகள் மற்றும் வங்கி துணை சேவைகள் திரு. எம்.பி. ஜெயசிங்க, AGM-ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி அபிவிருத்தி திரு பிரசாத் ஹந்துன்ஹேவ, பிரதான முகாமையாளர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திரு. தீப்தி மஹானாம மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சனத் கமகே ஆகியோர் இதில் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.









RDB இன் "அபே லமய்" திட்டத்துடன் இணைந்ததாக உலக சிறுவர் தினக் கொண்டாட்டம் – 2017

அக்டோபர் மாதம் உலக சிறுவர் தினத்துடன் இணைந்ததாக, சிறுவர் சேமிப்புகளை ஊக்குவிக்குமுலமாக உண்டியல்கள் வழங்கும்" (உண்டியலுக்கு உண்டியல் மற்றும் பணத்திற்கு பணம்) செயறதிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, *"கெடய கெடயக் சஹ முதலட முதலக"* திட்டத்தில் பங்கேற்கும் பொருட்டு தமக்கு அண்மையிலுள்ள கிளையினை நாடுவதன் மூலம் சிறுவர்கள் பல பரிசுகளையும் பெற வாய்ப்பு கிடைக்கிறது.

"RDB ஜய சங்க" இல் சேமிப்புகளை மேற்கொள்வதன் மூலம் ஒரு சிறப்பு வட்டி விகிதத்தில் மதிப்புமிக்க பரிசு பொருட்களை பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். அதன்படி, இந்த அக்டோபர் மாதத்தில் உலக குழந்தைகள் தினம் கொண்டாடப்படும் போது, தேசிய குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்குவதற்கான RDB வங்கி பல பரிசுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

நாட்டின் பிரதான அபிவிருத்தி வங்கியாக, RDB வங்கிக் கிளைகளில் இந்த ஆண்டு உலக குழந்தைகள் தினம் மிகவும் வண்ணமயமான வகையில் கொண்டாடப்பட்டது.

2017 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி 116 முகாமைத்துவப் பயிலுனர்கள் கொண்ட புதிய பணிக்குழு நியமிக்கப்பட்டது.





RDB நடை பவனி 2017 – கிழக்கு மாகாணத்தில் வர்த்தக விழிப்புணர்வுக்கான "RDB நடை பவனி" நடாத்தப்பட்டது.

CSR சமூக முயற்சிகள்

பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) என்பது ஒரு நிறுவனத்தின் பணிக்கு உதவுவதற்கும் நிறுவனத்தின் நுகர்வோர் பிரதிநிதித்துவம் செய்வதற்கும் ஒரு வழிகாட்டியாக பணியாற்றுவதற்கும் சமூக பொறுப்புணர்வு திட்டமாக உள்ளது.

கடந்த ஆண்டின் CSR திட்டத்தினை தனது வாடிக்கையாளர்களுக்கு பயனளிப்பதற்காக RDB செயற்படுத்தியது. அதன்படி, ஆண்டுதோறும் CSR திட்டங்களை வங்கி செயல்படுத்துகிறது.

வெள்ள நிவாரண திட்டம்

களனி, வெல்லம்பிட்டிய, கேகாலை பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெள்ள நிவாரண உதவித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. முக்கியமாக ஊழியர்கள் மற்றும் வங்கியின் ஊழியர் சங்கம் ஆகியவை இதில் பங்கெடுத்தன.

நடமாடும் வாகணங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கு TV Derana வலையமைப்பு முன்னெடுத்த *"மனுசத் தெரண"* தேசிய வெள்ள நிவாரண நிகழ்ச்சித்திட்டத்துடன் வங்கி இணைந்து செயற்பட்டது.



சமூக நலத்திட்டம் – சிவனொளிபாதமலை பருவ கால யாத்திரை

வருடாந்த சிவனொளிபாதமலை புனித யாத்திரை பருவத்தின் ஆரம்பத்திலேயே நல்லதண்ணி வர்த்தக சமுதாய சங்கத்தின் ஆதரவுடன் ஒவ்வொரு வருடமும் சிறப்பு CSR நிகழ்வினை வங்கி நடாத்துவதுடன் பின்வரும் சமூக நலத்திட்டங்களுக்காக வங்கி நன்கொடை அளிக்கிறது:

- நுழைவுக்கான பிரதான பந்தல்
- யாத்ரீகர்களுக்கு குடிநீர் பயன்படுத்த நீர் தாங்கிகள்
- பொது இடங்களுக்கு பெயர்ப் பலகைகள்
- நல்லதண்ணி வணிக நிலையங்களுக்கு பெயர் பலகைகள்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகர்களுக்கு பருவகாலத்திற்கு இணையாக தங்கள் வணிகத்தை மேற்கொள்வதற்கான கடன் வசதிகளையும் வங்கி வழங்கியது



பின்தங்கிய பிரதேச பாடசாலைகளுக்கான சுகாதார வசதிகள்

அனைத்து 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய நாட்டின் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்திற்காக, வங்கியின் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) இனால் முன்னெடுக்கப்படும் இந்த செயற்திட்டத்தை வங்கி கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்மொழிந்துள்ளது. 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி சிரிபுரவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இது அவருக்கு வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய பின்தங்கிய பாடசாலைகளில் ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்காக 25 புதிய கழிப்பறை வசதிகளை பெற்றுக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை சுகாதார வசதிகள் – 2017

மாகாணம்	மாவட்டம்	பாடசாலை	அருகில் உள்ள கிளை
சப்ரகமுவ	கேகாலை	01. தெஹியோவிட தேசிய பாடசாலை	தெஹியோவிட
வட	யாழ்ப்பாணம்	02. வரணி கல்லூரி	யாழ்ப்பாணம்
கிழக்கு	திருகோணமலை	03. செல்வநாயகம்புர கல்லூரி	திருகோணமலை
மத்திய	கண்டி	04. லுல்கந்துர பாடசாலை	கம்பளை
	நுவரெலியா	05. மடக்குமபுர பாராக்கிரம கல்லூரி	கொத்மலை
	மாத்தளை	06. தொலம்புகொல்ல வித்யாலயம்	கலேவெல
ஊவா	பதுளை	07. விஜய வித்யாலயம்	வெலிமடை
	மொணராகல	08. பல்லேவெல கனிஷ்ட வித்யாலயம்	சியம்பலாண்துவ
வடமேல்	குருநாகல்	09. தொடங்கஸ்லந்த மகா வித்தியாலயம்	ரிதிகம
	புத்தளம்	10. நவகத்தேகம வித்யாலயம்	நவகத்தேகம
தெற்கு	காலி	11. மகாகொட பாடசாலை	கரந்தெனிய
	மாத்தறை	12. கெமுனு முதன்மை பாடசாலை	கெகனதுர
	அம்பாந்தோட்டை	13. பெரகம கனிஷ்ட வித்யாலயம்	அம்பலாந்தோட்டை
மேற்கு	களுத்துறை	14. கெலிங்கந்த ஆரம்ப பாடசாலை	பதுரலிய

அதன் கிளைகளை மறுசீரமைப்பதில், RDB ஆனது தனிநபர்களுடனும் குழுக்களுடனும் தனது உண்மையான வங்கி உறவை புதுப்பித்து, வங்கிகளால் வழங்கப்படும் நிதி வசதிகளையும் ஆலோசனைகளையும் ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கு வழங்கி, மேலும் அதிநவீன வங்கி சூழலையும் மேம்படுத்தியது.



ஹோமாகம கிளை சௌகரியமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்னவினால் பணிப்பாளர் திரு. பிரியந்த அபேசிங்க மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபால ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் 2017 ஜனவரி 16 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



கிரிந்த கிளை சௌகரியமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்னவினால் பணிப்பாளர் திரு. பிரியந்த அபேசிங்க மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபால ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் 2017 மார்ச் 30 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



அஹுங்கம கிளை சௌகரியமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்னவினால் பணிப்பாளர் திரு. பிரியந்த அபேசிங்க மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபால ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 2017 பெப்ரவரி 13 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



கலேவல கிளை சௌகரியமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்னவினால் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபாலவின் பங்குபற்றுதலுடன் 2017 பெப்ரவரி 06 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



பேரதெனிய கிளை சௌகரியமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்னவினால் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபாலவின் பங்குபற்றுதலுடன் 2017 ஏப்ரல் 03 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



புத்தளம் கிளை சௌகரியமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்னவினால் பணிப்பாளர் திரு. பிரியந்த அபேசிங்க மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபால ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் 2017 பெப்ரவரி 06 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



திறப்பனே கிளை சௌகரியமான சொந்த அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது கௌரவ பொது தொழிற்துறை அமைச்சர் கபீர் ஹாசீமினால் தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்ன, பணிப்பாளர் திரு. பிரியந்த அபேசிங்க மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபால ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 2017 ஜூலை 10 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



ரக்வான கிளை சௌகரியமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்னவினால் பணிப்பாளர் திரு. பிரியந்த அபேசிங்க மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபால ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் 2017 மே 08 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



பொத்துகர கிளை சௌகரியமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்னவினால் பணிப்பாளர் திரு. பிரியந்த அபேசிங்க மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபால ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 2017 ஒக்டோபர் 02 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



களனிய கிளை சௌகரியமான அமைவிடத்திற்கு மாற்றப்பட்டது. அது தலைவர் திரு. பிரசன்ன பிரேமரத்னவினால் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. டி. ஏ. ஆரியபாலவின் பங்குபற்றுதலுடன் 2017 ஜூன் 27 ஆந் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒரு கண்ணோட்டம்

பொருத்தமான கருவிகள், முறையான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி மனித மூலதனத்தின் கையகப்படுத்தல், வளர்ச்சி மற்றும் ஈடுபாடு ஆகியவற்றில் ஒரு மூலோபாய மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் மூலம், ஒரு உறுதியான வழியில் புலப்படக்கூடிய ஆதனம் மற்றும் புலப்படாத ஆதனம் என்பவற்றை விருத்தி செய்வதில் வங்கி ஈடுபட்டுள்ளது. இந்த முழுமையான அணுகுமுறை வங்கியின் வணிக இலக்குகளை அடைவதற்கு ஒரு உகந்த சூழலை உருவாக்கி ஊழியர்களின் நல்வாழ்வை உறுதி செய்தது. இது மனித மூலதன முதலீட்டு மற்றும் மனித மூலதன வருவாயைக் கொண்டு பிரதிபலிக்கும் ஊழியர்களின் உற்பத்தித்திறன் மேம்பாட்டினால் (ROI) விளைந்ததாகும்.

பணியாளர் உற்பத்தித்திறன் விளைவு

மனிதவள பகுப்பாய்வு மூலம் தொழிலாளர் திறன் உற்பத்தித்தாக்கத்தை அளவிடுவதற்கும், கண்காணிக்கவும் மனித மூலதன நிதி அறிக்கை (HCFS) அறிமுகப்படுத்தப்பட்டது. மனிதவள பகுப்பாய்வு என்பது திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக் கருவியாக உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் மனித மூலதன முதலீடுகள் (தொழிலாளர் செலவினங்களை) வணிக முடிவுகளுக்கு இணைப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பணியாளர் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது பணியாளர் செலவினத்தை (பணியாளர் சக்தியின் செலவு) விட அதிகமான மதிப்புள்ள (மதிப்புமிக்க ஆதனங்கள்) உருவாக்கியுள்ளது.

இற்கான சுருக்கம் 2015 – 17

பிரிவு	2017	2016	2015
செயற்பாட்டு இலாபம் (ரூ. மில்லியன்)	3,307	2,130	1,484
மொத்த வருமானம் (ரூ. மில்லியன்)	22,016	15,744	12,510
முழு நேரப் பணியாளர் (FTE)	2,395	2,342	2,368
பணியாளருக்கான மொத்த செலவு (TCOW) (ரூ. மில்லியன்)	5,346	4,699	4,168
மனித வள மூலதன திரும்பப் பெறல் (%)	61.9	45.3	35.6
மனித மூலதனம் ROI	1.62	1.47	1.43
ஒரு FTE இற்கான உற்பத்தித்திறன் (ரூ. மில்லியன்)	1.381	0.950	0.759

மனித வள தன்னியக்கம் மற்றும் செயற்பாடு

ஒருங்கிணைந்த மனிதவள அமைப்பின் தன்னியக்கத்தை பூர்த்தி செய்ய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மனிதவள அமைப்பு 14 தொகுதிகள் கொண்டது மற்றும் தானியங்கு செயல்முறை தேவைகளின் தொகுப்பை உள்ளடக்கியது, பயனர் தேவை விவரக்குறிப்பு (URS), மென்பொருள் மேம்பாடு/தனிப்பயனாக்கம், சோதனை Scripts/சோதனை தரவு தயாரிப்பது, பயனர் ஏற்றுதல் சோதனை (UAT) தயாரித்தல், பணியாளர் பிடிப்பு வரலாற்று தரவு மற்றும் இணை/நேரடி மென்பொருள் தொகுப்புகள், ஊழியர் சுயவிவரம், ஊழியர் சுய சேவை, நேரம் மற்றும் வருகை மற்றும் ஊதியம் தற்போது பயன்பாட்டில் உள்ளன, மற்றும் சில UAT முடியும் கட்டத்தில் உள்ளன மற்றும் மீதமுள்ள தொகுதிகளின் மென்பொருள் மேம்பாடு/தனிப்பயனாக்கம் 31 மே 2018 அளவில் நிறைவு செய்யப்படும். ஒருங்கிணைந்த மனிதவள அமைப்பு சரியான நேரத்தில் மற்றும் துல்லியமான முகாமைத் தகவலை வழங்கும் மற்றும் மனித மூலதனத்தின் மீது ROI ஐ கணிசமாக அதிகரிக்கும்.

திறமை வகைப்படுத்தல்

ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் முறையான ஆட்சேர்ப்புச் செயல்முறை மூலம் சிறந்த நபர்களை அடையாளம் காண்பதற்கு RDB முழுமையான நிறுவன செயல்திறன், சிறப்பம்சம் மற்றும் பேண்தகைமை ஆகியவற்றை இலக்காகக் கொண்டுள்ளது. வங்கியானது 123 பணியாளர்களை ஒரு வெளிப்படையான மற்றும் போட்டி அடிப்படையிலான கூடிய தகைமை உடையவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர், நிறுவன ஆளுகை (02), சிரேஷ்ட முகாமைத்துவம் (03), நிர்வாக முகாமைத்துவம் (108) மற்றும் சிற்றூழியர்கள் (10) ஆகியோர் அடங்குகின்றனர்.

இந்த விளம்பரத்திற்கு பதிலளித்த 9,950 வேட்பாளர்களில் 116 மேலாண்மைப் பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்பட்டது. போட்டியிடும் தேர்வு செயல்முறை எழுதப்பட்ட பரீட்சை மற்றும் நேர்காணல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. 57,764 விண்ணப்பதாரர்களிடமிருந்து பதில் கிடைத்ததால், பயிற்சி உதவியாளர்களின் ஆட்சேர்ப்பு இதுவரையில் முடிவடையவில்லை.

தொழில் முன்னேற்றம்

வங்கி திறமையான மற்றும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களை வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க ஊக்கப்படுத்தியது. அவர்கள் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர், செயற்திறன் மற்றும் தேவையான கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகள் பூர்த்திகள் என்பவை கருத்திற் கொள்ளப்பட்டன. தகுதியான பணியாளர்களை நேர்காணல் மேற்கொண்டதன் மூலம் 63 உள்ளக வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. பெருநிறுவன ஆளுகை (02), சிரேஷ்ட முகாமை (13), நிறைவேற்று முகாமை (35) மற்றும் பணியாளர் மற்றும் உதவியாளர் (13) ஆகியவை இதில் அடங்கும். உதவி முகாமையாளர் தரத்திற்கான ஊக்குவிப்புகள் சில தடைகளின் காரணமாக தாமதப்படுத்தப்பட்டன, இது குறித்து இன்னும் இறுதி முடிவு செய்யப்படவில்லை.

முக்கிய பதவி நிலைகளை நகர்த்துவதற்கான அதிக சாத்தியமுள்ள தனிநபர்களை தேர்ந்தெடுப்பதற்கு தற்போது திட்டம் உள்ளது, குறுகிய காலத்திற்குள் முக்கிய முகாமை நிலைகளை அடைய உயர்ந்த ஒரு விரைவு முறையை இது அறிமுகப்படுத்தியது. முக்கிய நிர்வாக பதவிகளுக்கான (KMPs) அடுத்தடுத்து வரும் திட்டமானது ஆண்டு மதிப்பீட்டின் மூலம் புதுப்பிக்கப்படும்.

செயற்திறன் முகாமை

ஒரு செயற்திறன் இயக்கப்படும் KPI மீளாய்வு முறை மூலம், இலக்குகளை கொண்ட பணியாளர்களை ஒருங்கிணைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த முறை ஒப்புதல் KPI களில் தனிநபர்கள் மற்றும் குழு செயற்திறன் அளவீடு மற்றும் கண்காணிப்புக்கு உதவுகிறது. KPI அடிப்படையிலான மதிப்பீட்டு முறைமை ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. வங்கி இந்த செயற்திறன் மூலம் வங்கி செயற்திறன் பங்களிப்பு மற்றும் 2018 முதல் நிதி மற்றும் நிதி அல்லாத ஊக்குவிப்பு மூலம் சிறந்த செயற்பாட்டாளர்களை அங்கீகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

பணியாளர் நியமன முறை மற்றும் செயற்பாடு

செயல்பாட்டு ஒருங்கிணைப்பு மற்றும் மூலோபாயத்தின் சீரமைப்பை மேம்படுத்துவதற்காக பணியிட கட்டமைப்பு, செயல்பாடு மற்றும் பணியாளர்களின் கலவையை நாங்கள் தொடர்ந்து ஆய்வு செய்தோம். கிளை வணிக மாதிரி மதிப்பாய்வு இன்னும் முடிக்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட கிளை தரவரிசை மற்றும் தயாரிக்கும் பணியிட திட்டத்தில் பணியாளர் மதிப்பீடு செய்யப்பட்டது.

தகவல் தொழிநுட்ப பணியாளர்கள் ஒரு புதிய தகவல் தொழிநுட்ப கட்டமைப்பின் (7 நிலைகள்) கீழ் பதவிகள் வெளிப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டன (4 நிலைகள்). உள்ளகப் பணியாளர்கள் அத்தகைய பதவி உயர்வு நிலைகளை அடைய காலமெடுக்கும் என்பதாலேயே இவ்வாறு செய்யப்பட்டன.

கிளை வலையமைப்புகளின் வாடிக்கையாளர்களின் உந்துதல் இலக்குகளை கண்காணிக்க மற்றும் ஆதரிப்பதற்கு செயற்பாட்டு மற்றும் வர்த்தக ஆதரவு துறை நிறுவப்பட்டது. அறவீடுகள் பிரிவை வலுப்படுத்துவதற்கும் அபிவிருத்தி கடன்களின் செயற்பாடுகளில் கவனம் செலுத்துவதற்கும் கடன் பிரிவினை மேலும் வலுப்படுத்துவதற்காக அறவீடுகள் பிரிவு நிறுவப்பட்டது.

குறைகளைத் தீர்த்தல்

தகவல்தொடர்பு மேம்படுத்துவதன் மூலம் சாத்தியமான மோதலைத் தீர்க்கும் என எதிர்பார்க்கப்படுவதால், ஊழியர்களுடன் தொடர்புடைய சிக்கல்கள் மற்றும் பிரச்சினை தீர்வு குறித்த ஒரு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஊழியர் தினம் ஒன்று தலைமை அலுவலகத்திலும், மாகாண மட்டத்திலும் மனித வள விவகாரங்களைப் பற்றி விவாதிக்கப்பட்டது. காலாண்டு அடிப்படையில், ஊழியர்களுடனான தொடர்பு கொள்ளும் திகதிகள் கூட நிர்ணயிக்கப்பட்டன.

மனிதவள சக்தி

வங்கியிடம் சேவைகள் வழங்கும் வங்கி வைப்புத் திரட்டல் (ஒரு நிலையான கால ஒப்பந்தமாக மாற்றப்பட்டவர்கள்) மற்றும் கிராமப்புற தலைவர்கள் (நுண்நிதி அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது) ஆகிய பதவிகள் உள்ளடங்களாக நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான வேலைவாய்ப்புக்களை வங்கி வழங்குகிறது. இந்த பிரிவுகள் வங்கி செயல்திறனுக்கு மதிப்புமிக்க உள்ளீடுகளை வழங்கும். மனிதவளத்தின் சுருக்கம் பின்வருமாறு:

மனிதவள வகை	எண்ணிக்கை
நிரந்தர/ஒப்பந்த பணியாளர்கள்	2,395
வைப்புத் சேகரிப்புக்கள் உதவியாளர்கள்	344
கிராமிய தலைவர்கள்	256
மொத்தம்	2,995

2017 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி வரை 2,342 பேர் பதவிகளை வகித்துள்ளனர். ஓய்வு பெறும் வயதை அடைவதன் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இந்த ஆண்டு 66 பேர் பதவி விலகியிருந்ததுடன் 119 புதிய நியமனங்களும் செய்யப்பட்டன. அதன்படி, 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று வங்கியில் பதவி வகிப்போர் 2,395 ஆக இருந்தனர்.

மாகாணம்	கிளைகளின் எண்ணிக்கை	பங்கேற்பாளர்	%
மேல்	34	290	12.11
மத்திய	33	292	12.19
வட மத்திய	32	259	10.81
தென்	54	409	17.08
ஊவா	26	199	8.31
சபரகமுவ	34	268	11.19
வட மேல்	35	332	13.86
கிழக்கு	20	164	6.85
தலைமை அலுவலகம்		182	7.60
மொத்தம்	268	2,395	100.00

கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான வாய்ப்புகளை வங்கி வழங்குகிறது.

பதவி	ஆண்	பெண்	மொத்தம்
பொது முகாமையாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி	1	0	1
பிரதிப் பொது முகாமையாளர்/ பிரிவின் தலைவர்	7	1	8
பிரதேச பொது முகாமையாளர்/ சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்	13	0	13
உதவி பொது முகாமையாளர்	17	2	19
தலைமை முகாமையாளர்	42	14	56
சிரேஷ்ட முகாமையாளர்	82	22	104
உதவி முகாமையார்/முகாமையாளர்	447	398	845
வங்கி உதவியாளர்	605	592	1,197
சாரதி	63	0	63
அலுவலக உதவியாளர்/ தொழிலாளர்	82	7	89
பங்கேற்பாளர்கள்	1,359	1,036	2,395
சதவீதம்	56.74	43.26	100.00

தொழிற் பயிற்சி

வங்கி ஊழியர்களின் மனோபாவத்தை மாற்றுவதற்கும், அறிவை மேம்படுத்துவதற்கும், கற்பதை ஊக்குவிப்பதற்கும் வங்கியின் செயல் பாடுகளை அறிந்து கொள்வதன் மூலம் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தும் பொருட்டு வங்கி தொடர்ச்சியான பயிற்சியளிப்பை வழங்கியது. 1,487 பங்கேற்பாளர்களுக்கு என்பத்து ஒரு (81) பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. பிலிப்பைன்ஸில் (3 குழுக்களுக்கு) ஒழுங்கமைக்கப்பட்ட வெளிநாட்டு வெளிப்பாடு பயிற்சிகள் வழங்கப்பட்டன, இதில் 108 பங்கேற்பாளர்கள் முக்கியமான கிளை அலுவலக ஊழியர்கள் பிரதிநிதித்துப்பட்டனர். வங்கியால் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்களில் அனுபவத்தை கற்கும் சிறந்த நடைமுறைகளை கற்றுக் கொள்வது பயிற்சியின் நோக்கமாக இருந்தது. மேலும், வெளிநாட்டு பயிற்சி மூலம், 24 அதிகாரிகள் தங்கள் செயல்பாட்டு பகுதிகளில் அறிவினை விருத்தி செய்ய அனுமதிக்கப்பட்டனர். ஆண்டில் பயிற்சிக்கான மொத்த முதலீடு ரூ. 60.4 மில்லியன் ஆகும்.

பணியாளர் அங்கீகாரம்

சிறந்த செயல்திறன் விருதுகள் 2016, வங்கியின் செயல்திறனுக்கு கணிசமாக பங்களித்த ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்களை அங்கீகரிப்பதற்காக நடத்தப்பட்டது. ஒவ்வொரு பிரிவிலும் விருதுகள் வழங்கப்பட்டபோது சிறந்த முறையில் வரையறுக்கப்பட்ட அளவுடன் இந்த அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. கௌரவ விருது வழங்கும் நிகழ்வில் பொது நிறுவன அபிவிருத்தி, கௌரவ அமைச்சர், கபீர் ஹாஷிம் தலைமை தாங்கினார். மிரிஸ்வத்த கிளை ஒட்டுமொத்த செயல்திறனில் முதல் இடத்தைப் பெற்றது, மேலும் 42 விருதுகள் பல்வேறு செயல்திறன் பிரிவுகளின் அடிப்படையில் வழங்கப்பட்டன. வங்கியில் 25 வருட திருப்திகரமான சேவையை நிறைவு செய்த தொண்ணூறு (90) ஊழியர்கள் தங்க விருதுகள் பெற்றனர்.

மனித வள சபை துணைக்குழு

சிறந்த நிறுவன ஆளுமை நடைமுறைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி விதிமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக, இரண்டு தனி துணைக் குழுக்களினதும் அமைக்கப்பட்டன. அவை மனித வள மற்றும் ஊதியக் குழு மற்றும் பரிந்துரைக் குழு எனப்படுகின்றன. வங்கியின் தலைவர் இரு குழுக்களினதும் தலைவராவார். மூன்று நியமனங்கள் குழு கூட்டங்கள் மற்றும் ஏழு சபை மனித வளம் மற்றும் ஊதிய குழு கூட்டங்கள் 2017 ஆம் ஆண்டு நடைபெற்றன.

முதலீடு/சேமிப்பு கணக்குகள்

RDB கெகுளு மற்றும் RDB யொவுன் – இளையோர் சேமிப்பு கணக்கு

RDB கெகுளு கணக்கானது 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் RDB யொவுன் கணக்கானது 12-17 வயதுடையவர்களுக்கு என வடிவமைக்கப்பட்டுள்ளன. இது ஒரு பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி RDB உடன் சேமிக்க ஒவ்வொரு சிறுவருக்கும் உதவுகிறது. ஒவ்வொரு புதிய கணக்கிற்கும் RDB புதிய உண்டியல்களை வழங்குகிறது. மேலும் கணக்குகளில் நிலுவைத் தொகையின் அடிப்படையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட குடைகள், பாடசாலைப் பைகள், அகராதிகள், பரிசு வவுச்சர்கள் மற்றும் சிறுவர் சைக்கிள்கள் போன்ற பலவிதமான பரிசு பொருட்களையும் வழங்குகின்றது.

சிறுபான்மையினர் மத்தியில் சேமிக்கும் பழக்கங்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளையும் வங்கி மேற்கொண்டுள்ளது. அதேவேளை பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோரை ஊக்கமளிக்கும் பொருட்டு சேமிப்புக்களை அறிமுகப்படுத்தியுள்ளது. சிறு வயதிலிருந்தே சேமிப்பு பழக்கத்தை பல்வேறு வழிகளில் ஊக்குவித்து எதிர்கால பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான "RDB கெகுளு" மற்றும் "RDB யொவுன்" என்ற இரு சிறப்பு சேமிப்பு கணக்குகளை வங்கி ஆரம்பித்துள்ளது.

பயனுள்ள பரிசளிப்பு உதவித்தொகைகள் மற்றும் பிற ஊக்கத்தொகைகள் சிக்கன மற்றும் சேமிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்றன.

சிறுவர்களுக்கான சேமிப்பு மையங்களை நிறுவி அந்த சேமிப்பு மையங்களினூடாக RDB உடன் இணைந்து, சேமிப்பினைக் கடைப்பிடிப்பதற்கும் இது மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது.

இது மேலும் கூடுதல் நோக்கங்களை அடைய வடிவமைக்கப்பட்டுள்ளது, மாணவர்களின் கல்விக்கு உதவுவதோடு, நல்ல குடிமக்களாக அவர்களை உருவாக்குவதும் இதன் நோக்கங்கள் ஆகும். தரம் 5 புலமைப்பரிசில்கள் மற்றும் O/L பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்ற கணக்குதாரர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேற்படி பரீட்சைகளுக்கு தோற்றும் கணக்குதாரர்களுக்கு கல்வி கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

RDB 14 பிளஸ்

RDB 14+ அண்மையில் RDB வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது, இளைஞர்களின் சேமிப்பு பழக்கவழக்கங்களுக்கான விசேட சேமிப்பு கருவியாகக் இதனைக் குறிப்பிடலாம்.

இந்த கணக்கு 14 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சேமிப்புக்கான உந்து சக்தியாக இருந்துள்ளது. எதிர்காலத்திற்கான திட்டமிடல் மூலம் இளைஞர்களிடையே நடைமுறைப்படுத்தப்படும் சிக்கன மற்றும் சேமிப்பு பழக்கம் அவர்களின் எதிர்கால பாதுகாப்புக்கு வழிவகுக்கும். அதன்படி, 14 மற்றும் 14 இற்கு மேற்பட்ட இளம் வயதினரை ஈர்க்கக்கூடிய மதிப்பு சேர்த்தலுடன் RDB 14+ கணக்கு செயல்படுகிறது.

கணக்கில் உள்ள இருப்பு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 30% போனஸ் வட்டி கூடுதலான வட்டி விகிதம் RDB 14+ கணக்கிற்கு வழங்கப்படுகிறது. ATM அட்டையினூடாக 14 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் தங்கள் நிதி தேவைகளுக்கு பணத்தை திரும்பப் பெற வாய்ப்பளிக்கப்படுகிறது. எனவே, சிறுவர்கள் தங்கள் கைகளில் அதிக பணத்தை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ATM அட்டை மூலம் திரும்பப் பெறும் வசதி மூலம் பள்ளிச் சிறார் தங்கள் கணக்கிலிருந்து அவசர பணவியல் தேவைகளுக்கு பணத்தை மீளப் பெற இதனைப் பயன்படுத்தலாம்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரங்களின் படி இலங்கையின் மொத்த தொழிலாளர் வகுப்பில் சுமார் 10% 15-25 வயதுக்குட்பட்டதாக உள்ளது. இந்த பிரிவில் உள்ளவர்கள் இந்த கணக்கிலிருந்து சிறப்பு நன்மைகளை பெறக் கூடியதாக உள்ளது.

வீட்டு வசதி, வாகனம், தளபாடங்கள், வியாபாரம், மின்னணு உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவது, கல்வி தேவைகள், வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் போன்ற தேவைகளை நிறைவேற்றுவதற்காக இளைஞர்களுக்கு இந்த கணக்கின் மூலம் கடன் வசதிகளும் வழங்கப்படுகின்றன. மேலும், கணக்குதாரர்களின் தாய் அல்லது தந்தை மரணித்தல் மற்றும் குழந்தைகளின் சுகவீனம் என்பவற்றின் போது சிறப்பு நன்மைகளும் உண்டு.

உங்கள் பரிவர்த்தனை நடவடிக்கைகள் உங்கள் கைத் தொலைபேசிகளில் இற்றைப்படுத்தப்படும் பொருட்டு SMS செய்திகள் அனுப்பப்படுகின்றன.

RDB லிய சவிய – பெண்கள் சேமிப்புக் கணக்கு

இந்த கணக்கு இலங்கையின் தைரியமான பெண்களை குறிவைத்து அறிமுகப்படுத்தப்பட்டது. *"RDB லிய சவிய"* கணக்கு ஆரம்பிக்க, ஆரம்ப வைப்பு ரூ. 100/- ஆகும். நிதி வசதிகளுக்கு மேலதிகமாக, சுய தொழில் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் பெண்களுக்கு வங்கி ஆலோசனை சேவைகளையும் வழங்குகிறது. கணக்கின் சிறப்பு அம்சங்களாக வட்டி விகிதம், போனஸ் வட்டி மற்றும் முற்பணங்கள் போட்டியிடும் வட்டி விகிதங்களில் காணப்படுகின்றன.

சர்வதேச மகளிர் தினத்திற்கு இணையான பெண்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும் சிறப்பு கருத்தரங்குகள், திறன் மேம்பாட்டு தொழில் பயிற்சி திட்டங்கள் மற்றும் வலய மற்றும் தேசிய அளவிலான பட்டறைகள் நடத்தப்படுகின்றன.

RDB விக்டரி

RDB விக்டரி என்பது ஒரு சிறப்பு சேமிப்பு கணக்காக வங்கியால் அறிமுகப்படுத்தப்படுகிறது, இதில் பணத்தை திரும்பப் பெறும் போது அதிக வட்டி பெறலாம். இதன் சிறப்பு நன்மையானது போனஸ் வட்டி 70% இந்த கணக்கு மூலம் வழங்கப்படுவதாகும். மேலும், கணக்கு வைத்திருப்பவர் கணக்கில் நிலுவையிலிருக்கும் தொகைக்கு பத்து மடங்குக்குச் சமனான தொகை கடன் பெறும் ஒரு சிறப்பு கடன் திட்டம் இந்த கணக்கின் சிறப்பு அம்சமாகும். இந்த வைப்புத்தொகை பேணப்படும் நாட்களின் எண்ணிக்கைக்கு போனஸ் செலுத்துப்படுகிறது. மேலும், அனைத்து பரிமாற்றங்களும் SMS செய்திகள் மூலம் தெரிவிக்கப்படுகின்றன.

ஒரு நாட்டினுடைய குடிமக்களின் சேமிப்பு நடைமுறையானது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமாகும், மேலும் RDB யின் வைப்பு மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் கவர்ச்சிகரமான வைப்புத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தள்ளுபடி செய்யப்பட்ட விகிதங்களின் கீழ் பண பரிமாற்றச் சேவைகளை வழங்குதல் என்பது இந்த கணக்கால் வழங்கப்படும் ஒரு சிறப்பு நன்மை ஆகும்.

RDB பராயமடைந்த/சிரேஷ்ட குடிமக்கள் சேமிப்பு கணக்கு

வங்கி சந்தையில் போட்டி நிலைமைகளைக் கருத்திற் கொண்டு பராயமடைந்த குடிமக்களுக்கான வட்டி விகிதங்களை வழங்குகிறது. இதற்கான ஆரம்ப வைப்பு ரூ. 500/- ஆகும், 18 வயதுக்கு மேலான எந்த தனிநபருக்கும் வயதுவந்தோரின் சேமிப்பு கணக்கு திறக்க முடியும். சிரேஷ்ட குடிமக்கள் தங்கள் வைப்பிற்காக அதிக வட்டி விகிதங்களை பெறுகின்றனர்.

RDB முதலீட்டுக் கணக்கு

இது கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு வாடிக்கையாளர்களுக்கு வங்கியால் அறிமுகப்படுத்தப்படும் பொதுவான முதலீட்டுக் கணக்கு ஆகும். இது தயாரிப்பு சிறப்பு அம்சத்தையும் வைப்புகளுக்கான கவர்ச்சிகரமான வட்டி விகிதத்தையும் இலக்கு வைத்த பிரிவுக்கு தனிப்பயனாக்கப்பட்ட ஒரு சிறப்பு கடன் திட்டத்தையும் கொண்டிருக்கின்றது.

RDB நிலையான வைப்பு

RDB நிலையான வைப்பானது அதன் தனிப்பட்ட மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்களிடமிருந்து முதலீடு செய்யப்படும் பிரதான கணக்காக உள்ளது. 1, 2, 3 மற்றும் 6 மாத காலம் மற்றும் 1-5 வரையான ஆண்டுகள் என RDB இன் நிலையான வைப்புக்கள் காணப்படுகின்றன. மற்ற வங்கிகளுடன் ஒப்பிடுகையில் தொடக்கத்திலிருந்தே, வங்கி மிகவும் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களை வழங்குகிறது. முதிர்வு காலம் 1 வருடம் மற்றும் அதற்கு மேலதிகமாக குறிப்பிட்ட சேமிப்புக்களுக்கு சிறப்பு வட்டி விகிதங்கள் வழங்கப்படுகின்றன்.

RDB "தொரின் தொர" – நாளாந்த சேமிப்பு சேகரிப்புத் திட்டம்

இது RDB இன் முதன்மை தயாரிப்பு/சேவையாகும். தினசரி அடிப்படையில் வணிகத் தளங்கள் மற்றும் வீடுகளுக்கு வருகை தரும் அர்ப்பணிப்புடன் கூடிய உத்தியோத்தர்களைக் கொண்டு இம்முறை செயற்படுத்தப்படுகிறது. இந்த வழக்கமான வருகைகள் இலக்கு குழுவிற்கு பெரும் நிவாரணமும் வசதியும் அளித்து அவர்களது நேரத்தை மிச்சப்படுத்துகிறது, அவ்வாறில்லையெனில், அவர்கள் தங்கள் வங்கி பரிவர்த்தனைகளுக்கு மீண்டும் மீண்டும் கிளைக்களுக்கு வருகை தர வேண்டியிருக்கும். தொரின் தொர தயாரிப்பு/சேவை சேமிப்பு வைப்புக்கு மட்டுமல்லாமல், இலக்கு வாடிக்கையாளர்களுக்கு கடன் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் உதவுகிறது. கடன் சேவையை வழங்குவதோடு தவணைகளை உடனடியாக செலுத்துவதற்கும் உதவுகிறது. இந்த தனிப்பட்ட தயாரிப்பு/சேவை பல சிறிய தொழில்முனைவோர் மற்றும் தனிநபர்கள் அதிக முயற்சியும் தொந்தரவும் இன்றி சேமிப்புக்களைப் பேண உதவுகிறது. இந்த பரிவர்த்தனைகள் மின்னணு நடமாடும் சாதனங்கள் (பாம் டாப்) வழியாக மேற்கொள்ளப்படுகின்றன, அத்துடன் பரிவர்த்தனை தானாகவே வங்கியின் அமைப்புக்கு இற்றைப்படுத்தப்படும்.

"தொழில் முனைவோரை வளப்படுத்தல்" என்ற வங்கியின் தொலைநோக்கை நிறைவேற்ற இது உதவியாக இருந்துள்ளது.

வங்கி தமது வாடிக்கையாளர்கள் சேவை கட்டணங்களைச் செலுத்துவதற்கான சேவைகளை வழங்குவதன் மூலம் தனது சேவையை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தையும் கொண்டுள்ளது.

வெஸ்டர்ன் யூனியன் மற்றும் லங்கா பணப் பரிமாற்றம் (LMT)

வெஸ்டர்ன் யூனியன் மற்றும் லங்கா பணப் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம் பணப் பரிமாற்றங்கள் கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புற பகுதிகளில் பரவலாக அமைந்துள்ள RDB இன் அனைத்து கிளைகளிலும் மேற்கொள்ள முடிகிறது. இது எமது நாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து நிதிகளை பரிமாறிக்கொள்ளும் மற்றொரு எளிமையான மற்றும் விரைவான வழி ஆகும்.



புதிய ATM களை தொடங்கி வைத்தல்

நடைமுறைக் கணக்குகள் தவிர சேமிப்பு கணக்குகள், சிறுவர் சேமிப்பு கணக்குகள், பெண்கள் கணக்குகள் மற்றும் மூத்த குடிமக்களின் கணக்குகள், அடமான வசதிகள், நீண்ட கால கடன் வசதி உள்ளிட்ட பரந்த அளவிலான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை தனது வாடிக்கையாளர்களுக்கு வங்கி வழங்குகிறது. வாடிக்கையாளர்களுக்கு அட்டை வசதிகளை வங்கி அண்மையிலேயே வழங்க ஆரம்பித்தது.

எவ்வாறெனினும், லங்கா பேயின் பொதுவான ATM இயந்திரத்தின் புரட்சிகர அறிமுகத்துடன் தனது வாடிக்கையாளர்களுக்கு ATM அட்டைகளை வழங்க வங்கி தயாராக உள்ளது. 2015 ஆம் ஆண்டிலிருந்து, RDB ATM அட்டையைப் பயன்படுத்தி லங்கா பே வியாபார குறியீடு கொண்ட எந்த ATM களிலும் வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்கிலிருந்து பணத்தை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

RDB இல் உள்ள பெரும்பாலான வாடிக்கையாளர்கள் கிராமிய மற்றும் அரை நகர்ப்புற தொழில் முனைவோர் மற்றும் வேளாண்மை, மீன் வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளதால், இந்த ATM அட்டை சிறந்த வசதியாகவும் பாதுகாப்பாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

6

வழிகாட்டல்

30 மேற்பார்வை பொறுப்பு

33 பெரு நிறுவன முகாமத்துவக் குழு

36 பிரதேசப் பொது முகாமையாளர்கள்/ சிரேஷ்ட உதவிப்பொது முகாமையாளர்கள்

38 உதவி பொது மேலாளர்கள்/ திணைக்களங்களின் தலைவர்கள்

42 இடர் முகாமை

50 பெருநிறுவன ஆளுகையின் மீது கணக்காய்வாளரின் பொது அறிக்கை

51 பெருநிறுவன ஆளுகை

65 சபை மற்றும் சபை குழுக்களின் பங்குபற்றுதல்

66 பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

70 சபை கணக்காய்வுக் குழுவின் (BAC) அறிக்கை

71 சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு (BHRRC), சபை நியமனக் குழு (BNC) அறிக்கை

73 சபை தகவல் தொழிநுட்ப வழிகாட்டும் குழு (BITSC) அறிக்கை

74 ஒருங்கிணைந்த இடர் முகாமைக் (IRMC) குழு அறிக்கை

75 தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் தலைமை நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்பு தொடர்பான அறிக்கை

76 நிதிக் கூற்று அறிக்கை மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

77 உள்ளகக் கட்டுபாட்டு அறிக்கை மீது கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாதம்

78 உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் அறிக்கை


01
02
03
04
05
06
07
08

01 திரு. பிரசன்ன பிரேமரத்ன
தலைவர்

19 பெப்ரவரி 2015 அன்று வங்கியின் தலைவராக திரு. பிரசன்ன பிரேமரத்ன பொறுப்பேற்றார்.

சிறிய மற்றும் நடுத்தர நிறுவன (SME) துறை வளர்ச்சியில் சிறப்பாக ஈடுபட்டுள்ள ஒரு மேம்பாட்டு வங்கியாளராக 30 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இவர் ஒரு விவசாயத் துறை நிபுணர் மற்றும் தகுதி வாய்ந்த வங்கியாளர் ஆவார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச கற்கை மையத்திலிருந்து (BCIS) சர்வதேச உறவுகளில் முதுகலைப் பட்டம், இலங்கை வங்கியாளர் நிறுவனத்திடமிருந்து டிப்ளோமா மற்றும் USSR இலிருந்து விவசாயத்தில் முதுகலைப் பட்டம் என்பவற்றை இவர் பெற்றுள்ளார்.

பிரசன்ன பிரேமரத்ன DFCC வங்கியின் துணைத் தலைவர் மற்றும் DFCC கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார்,

இலங்கை தொழில்முறை வங்கியாளர்களின் சங்கத்தின் (APB) ஆயுட்கால உறுப்பினராகவும், தென் ஆசியாவின் கூட்டமைப்பின் (SAPSRI) உறுப்பினராகவும் உள்ளார்.

02 திரு. எம். சி. எம் முனீர்
பணிப்பாளர்

திரு. எம். சி. எம். முனீர் ஒரு சட்டத்தரணி ஆவார். இவர் ஒரு நொத்தாரிசு, சத்தியப்பிரமாண ஆணையர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் செயலாளர் ஆகவும் உள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் B.Com பட்டம் மற்றும் சட்ட முதுகலைப் பட்டம் பெற்றவர். இலங்கையின் சட்டத்தரணி சங்க உறுப்பினர், பார் கவுன்சிலின் உறுப்பினரும் கொழும்பு சட்ட சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினருமாவார். அவர் முஸ்லிம் வழக்கறிஞர்கள் சங்கத்தின் பொருளாளராகவும் பணியாற்றுகிறார்.

03 திரு. எம்.ஜே.பி. சல்காடோ
பணிப்பாளர்

திரு. சல்காடோ, இலங்கை வங்கியின் பிரதி பொது முகாமையாளர் பதவியை வகிக்கும் ஒரு நிரந்தர ஊழியர் ஆவார். அவரது தற்போதைய செயற்பாடுகளில் தயாரிப்பு முகாமை மற்றும் வணிக செயல்முறை மறு பொறியியல் திட்டம், மின்னணு வங்கி மற்றும் கடன் அட்டைச் செயல்பாடுகள் மற்றும் மத்திய பின்வரிசைச் செயற்பாடு என்பவை அடங்கும்

மாகாண விற்பனை முகாமைத்துவம், பிரீமியர் வங்கியியல், ISSP நடைமுறைப்படுத்தல், சிறப்புத் திட்டம், தொடர்பு மையம் மற்றும் காப்புறுதி ஆகியவற்றில் 28 வருட அனுபவத்தை அவர் பெற்றுள்ளார். இலங்கை வங்கியின் "வெனச மாற்றியமைத்தல் கருத்திட்டதின்" செயல் உறுப்பினராகவும் உள்ளார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் BCom இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றுள்ளார். பட்டய கணக்காளர் நிறுவனத்தின் சான்றிதழ், இலங்கையின் வியாபார தொழில் நிபுணத்துவ சங்கத்தின் உறுப்பினர், இலங்கையின் வங்கியியல் நிறுவனத்தின் உறுப்பினர் ஆகிய பதவிகளையும் அவர் வகிக்கிறார்.

வங்கியில் இணைவதற்கு முன்னர் திரு. சல்காதோ அவர்கள் மகாவலி பொறியியலாளர்கள் மற்றும் கணக்காய்வு நிறுவனத்தில் கணக்காளராகப் பணியாற்றியுள்ளார்.

04 திருமதி ஷமாரா ஹேரத்
பணிப்பாளர்

திருமதி ஷமாரா ஹேரத் டில்லி பல்கலைக்கழகத்தில் வர்த்தக இளங்கலைப் பட்டம் பெற்றார். அவரது ஆரம்ப கல்வி மற்றும் அவரது இரண்டாம் நிலை கல்வியானது முறையே வென்னப்புவயிலுள்ள புனித திருக்குடும்ப கன்னியர் மடம், மற்றும் கொழும்பிலுள்ள மகளிர் கல்லூரியில் இடம் பெற்றது.

திருமதி ஷமாரா நிதி/கணக்கியல் துறையில் தனது தொழிலை தொடங்கினார் மற்றும் வனிக் கூட்டு நிறுவன நிதி பிரிவில் பணிபுரிந்தார். அதன் பிறகு, அவர் தனது சொந்த விளம்பர நிறுவனத்தை அமைத்தார். லண்டன், மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகளில் உலகளாவிய அளவில் சந்தைப்படுத்தல் வர்த்தக ஆலோசகர் (சந்தைப்படுத்தல் மற்றும் மனித வளத்துறை தலைவர்) சிறப்பான நகைகளை மேம் படுத்துவதற்கு அவர் பணியாற்றியுள்ளார். அவர் நிறுவனத்தின் ஒட்டுமொத்த மனித வளங்களை வழிநடத்துகிறார்.

05 திரு ஜகத் கமநாயக்க
பணிப்பாளர்

ஜகத் கமநாயக்க தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் ஆவார். வங்கித் தொழில் துறையில் 20 வருட அனுபவத்தை அவர் பெற்றுள்ளார். தேசிய சேமிப்பு வங்கியில் சேருவதற்கு முன்னர் திரு. கமநாயக்க உரங்கள், கட்டிடப் பொருட்கள் மற்றும் நுகர்வோர் தயாரிப்புகள் போன்ற பல துறைகளில் பணியாற்றினார்.

ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஆப் மார்க்கெட்டிங் (SLIM) மற்றும் இலங்கையின் வங்கியியல் நிறுவனம் (IBSL) ஆகியவற்றில் இவர் ஒரு சக உறுப்பினராக உள்ளார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிருவாகத்தில் (MBA) முதுகலைப் பட்டம் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டம் (சிறப்பு) பெற்றுள்ளார். அவர் IBSL வங்கியியல் மற்றும் நிதிப் பட்டயத்தையும் மற்றும் பிரிட்டனில் பட்டய நிறுவனம் (CIM) இலிருந்து சந்தைப்படுத்தல் டிப்ளோமாவினையும் பெற்றுள்ளார்.

இவர் தொழில்முறை வங்கியாளர்களின் சங்கத்தின் உறுப்பினர் மற்றும் IBSL இன் மாற்று பணிப்பாளர் ஆவார். அவர் IBSL மற்றும் அக்வினாஸ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார்.

06 திரு. ஏ. ஆர். தேசப்பிரிய
பணிப்பாளர்

திரு. ஏ. ஆர். தேசப்பிரியா 31 வருட பணி அனுபவத்தைப் பொதுத் துறையில் பெற்றுள்ளார். அவர் இலங்கை நிர்வாக சேவை (SLAS) இன் ஒரு சிறப்பு தர அதிகாரி ஆவார்.

இந்த காலகட்டத்தில், அவர் பொதுத் துறையின் பல்வேறு பகுதிகளிலும் பணிபுரிந்தார், பணிப்பாளர் மற்றும் கூடுதல் திறமையின் கீழ் பொது திறைசேரியில் பல்வேறு பதவிகளை வகித்தார்.

திறைசேரியின் செயலாளராக அவரது தற்போதைய பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு தேசிய வரவு செலவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணிபுரிந்தார். காப்பீட்டு ஒழுங்குமுறை குழுவின் உறுப்பினராகவும் அவர் பணியாற்றியுள்ளார். இலங்கை, நலன்புரி நன்மைகள் சபை உறுப்பினர் மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவன உறுப்பினராகவும் உள்ளார் திரு. ஏ. ஆர். தேசப்பிரிய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது முகாமைத்துவத்தில் BSc பட்டம் பெற்றுள்ளார்.

07 திரு. டபிள்யூ. ஏ. பிரியந்த அபேசிங்க
பணிப் பணிப்பாளர்

திரு. டபிள்யூ. ஏ. பிரியந்த அபேசிங்க 2015 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளராக கடமையாற்றினார்.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் B.Com (சிறப்புப் பட்டம்), ஜெம்மோலோஜி டிப்ளோமா படிப்பு, இரத்தினக்கல் அகல்வு என்பவற்றில அனுபவம் உடையவர். இரத்தினகல் மதிப்பீடு, அகல்வு, என்ற துறைகளில் 10 ஆண்டு அனுபவம் உடையவர், மற்றும் ஹோட்டல் முகாமைத்துத்தில் டிப்ளமோ பட்டம் பெற்றுள்ளார்.

திரு. அபேசிங்க 1988 முதல் 1994 வரை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் மாவட்ட முகாமையாளராக பணியாற்றினார்.

08 திரு. கே. பீ. ராஜபக்ஷ
பணிப்பாளர்

திரு கே. பி. இராஜபக்ஷ, மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் (சில்லறை வங்கி) மற்றும் வர்த்தக வங்கியியல் துறையில் 31 வருட அனுபவம் உள்ளவர். இவர் ஒரு சட்டத்தரணி ஆவார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம், BSc பட்டம் பெற்றுள்ளார்.

இலங்கையின் கடன் முகாமைத்துவ நிறுவனத்தில் டிப்ளோமாவும், களனி பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் முதுகலை பட்டப் படிப்பு டிப்ளோமாவும் பெற்றுள்ளார். இலங்கையின் வங்கியியல் நிறுவனத்தின் அங்கத்துவ உறுப்பினரும் ஆவார்.

தற்போது இவர் இலங்கை வங்கியாளர் சங்கத்தின் பணிப்பாளர் மற்றும் வேளாண் மற்றும் கழக காப்பீட்டு சபையின் பணிப்பாளராகவும், இலங்கை கடன் தகவல் திணைக்களத்தின் மாற்று பணிப்பாளராகவும் பணியாற்றுகிறார்.

01


02


03


04


05


06


07


08


09


01 திரு. டி. ஏ. ஆரியபால
பொது முகாமையாளர்/தலைமை நிர்வாக அதிகாரி

திரு. டி. ஏ. ஆரியபால தற்போது பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார். அவர் அபிவிருத்தி வங்கி, கூட்டுறவு மற்றும் கிளை வங்கி மற்றும் SME ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற பல்வேறு திறன்களில் 39 வருட வங்கி சேவையை நிறைவுசெய்கிறார். அவர் 1978 ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் சேர்ந்தார். கிளை முகாமையாளர், பிரதேச முகாமையாளர், மண்டல முகாமையாளர், மண்டல உதவி முகாமையாளர் மற்றும் துணை பொது முகாமையாளர் ஆகிய பதவிகளில் செப்டம்பர் 2014 வரை பணிபுரிந்தார். அவர் BSc வணிக நிர்வாக சிறப்பு பட்டம் மற்றும் சட்ட இளங்கலை (LLB) பட்டங்களைப் பெற்ற ஒரு சட்டத்தரணி ஆவார். அவர் இலங்கை வங்கியாளர்கள் (IBSL, FIB) நிறுவனத்தின் அங்கத்துவ உறுப்பினராகவும், அசோசியேஷன் ஆ/ப் டெக்னீசியன்ஸ் (MAAT) இன் ஒரு இணை உறுப்பினராகவும் உள்ளார். கூட்டுறவு, நுண் நிதி, மனித வள முகாமை மற்றும் கிளை வங்கியியல் ஆகியவற்றில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளை அவர் பெற்றுள்ளார். மக்கள் வங்கியில் ME வங்கி, SME மைய கருத்தாக்கம் மற்றும் மேம்பாட்டுக் கடன் என்பற்றிலும் அவர் பணியாற்றியுள்ளார்.

இலங்கை வங்கியாளர் நிறுவனம் (உத்தரவாதம்) (SLBA) மற்றும் நிதி குறைதீர்ப்பாளர் இலங்கை (உத்தரவாத) லிமிடெட் (FOSL) ஆகியவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் உள்ளார். அவர் இலங்கை வங்கியாளர்களின் நிறுவன நிர்வாக ஆளுநரின் ஒரு மாற்று பணிப்பாளராகவும், கூட்டுறவு கிராமப்புற வங்கிகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

02 திரு. வஜிர ஜயசிங்க
தலைமை தகவல் அதிகாரி

வஜிர ஜயசிங்க, இருபது வருட அனுபவத்துடன் தகவல் தொழிநுட்ப தொழில்முறை நிபுணர் ஆவார், ஜூன் 2011 இல் பிரதேச அபிவிருத்தி வங்கியில் இணைந்தார். அவர் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் BSc பொறியியல் பட்டம் பெற்றுள்ளார். அவர் தாய்லாந்தில் ஆசிய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் அமெரிக்காவின் ஹவாய் பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைப் பட்டம் மற்றும் பொறியியல் முதுகலைப் பட்டம் என்பவற்றைப் பெற்றுள்ளார். பட்டம் பெற்ற பிறகு, IBM வேல்ட் வர்த்தக நிறுவனத்தில் முறைமைப் பொறியியலாளராகத் தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கினார். நிதி சேவைகள் மற்றும் வங்கித் தொழில் துறையின் முகாமைப் பதவிகளில் பதினாறு ஆண்டுகள் பணி அனுபவத்தை அவர் பெற்றள்ளார். இங்கிலாந்து கணணி அமைப்பின் சான்றளிக்கப்பட்ட தகவல் தொழிநுட்ப நிபுணர் (CITP) மற்றும் அமெரிக்காவின் திட்ட முகாமை நிறுவனத்தின் ஒரு சான்றளிக்கப்பட்ட திட்ட முகாமை நிபுணர் (PMP) ஆகிய தகமைகளை உடைய, அவர் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பட்டய பொறியாளராகவும் பணிபுரிகிறார்.

03 திரு. டி. குகன்
தலைமை இடர் அதிகாரி

திரு. டி. குகன், ஒரு தொழில் நிபுணத்துவ வங்கியாளர், 2011 செப்டம்பர் மாதம் RDB உடன் சேர்ந்தார், அதற்கு முன்னர் இரண்டு புகழ்பெற்ற தனியார் வங்கிகளில் பணியாற்றியுள்ளார், அதாவது HNB மற்றும் யூனியன் வங்கி ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார். அபிவிருத்தி வங்கி, பெருநிறுவன கடன், கிளை வங்கி, இடர் முகாமை மற்றும் வர்த்தக நிதியளிப்பு ஆகியவற்றின் வெளிப்பாட்டுடன் பல்வேறு நிர்வாக திறன்களை வங்கியியல் துறைகளில் தனித்தனியாக 26 ஆண்டுகள் தொடர்ச்சியாக பெற்றுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் பொருளியலில் முதுநிலை பட்டம் பெற்றவர். மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் இயந்திரப் பொறியியல், இலங்கையின் வங்கியியல் நிறுவனம் (IBSL) மற்றும் தேசிய தொழிநுட்ப டிப்ளோமா (NDT) ஆகிய இரு வங்கியியல் மற்றும் நிதித்துறையில் வங்கி முகாமைத்துவத்திலும் முதுகலை டிப்ளோமா பெற்றள்ளார். அவர் IBSL இன் மூத்த Fellowship Holder ஆவார். அவர் ஒரு பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் IBSL இன் வருகைப் பேராசிரியராகவும் இருக்கிறார்.

04 அஜித் அழஹகோன்
பிரதி பொது முகாமையாளர் அறவீடுகள்

இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் 1987 ஆம் ஆண்டில் ஒரு சிறப்புப் பட்டப் படிப்புடன் பட்டம் பெற்றார். இவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை வங்கியாளர்களின் நிறுவனம் ஆகியவற்றின் இணை உறுப்பினர் ஆவார். அவர் 1979 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியில் தனது வங்கித் தொழிலை தொடங்கினார். மேலும், சனச அபிவிருத்தி வங்கியை உருவாக்கியதில் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார். அவர் LB நிதிக் கூட்டுத்தாபனத்தில் ஏழு ஆண்டுகள் உதவி பொது முகாமையாளராக தனது சேவையை வழங்கினார்.

திரு. அழஹகோன் 39 ஆண்டுகளுக்கும் மேலாக நிதியியல் மற்றும் பொது நிர்வாக அனுபவங்களை வங்கித் துறையில் மற்றும் நிதியியல் சேவைகளில் கொண்டுள்ளார். மேலும், அவர் அபான்ஸ் பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் 2006 ல் அதன் முதல் பொது முகாமையாளராக பணியாற்றினார். 2010 ஆம் ஆண்டில் தனது முதல் பொது முகாமையாளராக/ தலைமை நிர்வாக அதிகாரியாக குளோபல் ட்ரஸ்ட் பினான்ஸ் லிமிட்டெட்டில் பணியாற்றினார். பிரதேச அபிவிருத்தி வங்கியில் இணைவதற்கு முன்னர், ஹவுசிங் டெவலப்மெண்ட் பினான்ஸ் கார்ப்பரேஷனில் அவர் கடன் உதவித் தலைவராக பணியாற்றியிருந்தார்.

05 திரு. ஜகத் கருணாதிலக
மனித வள அபிவிருத்தி மற்றும் நிர்வாகத்தின் தலைவர்

மனித வள நிபுணராக 31 வருட அனுபவம் கொண்ட திரு. ஜகத் கருணாதிலக, ஜூலை 2014 இல் RDB இல் சேர்ந்தார். அவர் மோட்ரேஜ் முதலீட்டு வங்கி (SMIB) உதவி பொது முகாமையாளர்/தலைவராக (மனித வள மற்றும் லாஜிஸ்டிக்ஸ்) பணியாற்றினார். அவர் கமிதிரியவில் (உலக வங்கி உதவியளிக்கும் திட்டம்) மேலதிக இயக்குநராக (HRD & Admin) பணிபுரிந்துள்ளார். இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி மற்றும் நிர்வாகம்) மற்றும் இலங்கை நிர்வாக கூட்டுறவு முகாமைத்துவத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகர் மற்றும் முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) ஆகிய பதவிகளையும் அவர் வகித்துள்ளார். திரு. கருணாதிலக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவத்தில் BSc சிறப்புப் பட்டம்

(1986), (1996) மற்றும் வர்த்தக முதுகலை நிறுவனத்திடமிருந்து (PIM) HRM சான்றிதழ் மற்றும் 1996 இல் MBA (2003) பட்டத்தையும் பெற்றுள்ளார். இலங்கையின் மனிதவள முகாமைத்துவ நிறுவனத்தில் இணைந்த இவர், IPM இலிருந்து 2010 ஆம் ஆண்டிற்கான தேசிய மனிதவள மேம்பாட்டுக்கான விருது பெற்றார். IPM நிறுவனத்திலிருந்து HRD இற்கான "சான்."

திரு. கருணாதிலக்க அவர்கள் மனிதவளப் பிரிவு தெரடர்பான தணிக்கைகளை மேற்கொள்வதற்கான IPM (2017) நிறுவனத்தின் "அங்கீகாரம் பெற்ற கணக்காய்வாளர்" அந்தஸ்த்தினைக் கொண்டுள்ளார்.

06 திரு. சுமேத எதிரிசூரிய
தலைமை நிதி அதிகாரி

திரு. சுமேத எதிரிசூரிய 1992 ஆம் ஆண்டில் வர்த்தக நிர்வாகத்தில் விஞ்ஞான விசேட பட்டமளிப்புடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். இவர் இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்துவ உறுப்பினராகவும், வணிக நிர்வாகப் பட்டத்தின் முதுநிலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து. எர்னிஸ்ட் ரூயங் – கொழும்பு, தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் செலான் வங்கி போன்ற முன்னணி நிறுவனங்களில் கணக்காய்வு, கணக்கியல், வரிவிதிப்பு, முகாமை ஆலோசனை மற்றும் நிதியியல் துறைகளில் 27 வருட அனுபவம் பெற்றுள்ளார். அவர் ஜனவரி மாதம் RDB இல் சேர்ந்தார். RDB இல் தலைமை நிதி அலுவலராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியில் தலைமை நிதி அதிகாரி, இணக்கப்பாடுகள் அலுவலர் மற்றும் பொது முகாமையாளர்/தலைமை நிர்வாக அதிகாரி பதவிகளை வகித்தார்.

07 திரு. ஏ. எச். எம். எம். பி. ஜயசிங்க
பிரதி பொது முகாமையாளர் – செயற்பாடுகள் மற்றும் வங்கித்துணைச் சேவைகள்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் BSc பட்டம் பெற்றுள்ளார். 1986 இலங்கை வங்கியாளர் நிறுவனத்திடமிருந்து ஆ/ப் பட்டய முகாமைத்துவத்தில் டிப்ளோமா பெற்றார். வயம்ப பல்கலைக்கழகத்தில் இருந்து முகாமைத்துவ முதுகலை டிப்ளோமா, NIBM இலிருந்து பிரதேச அபிவிருத்தியில் முதுகலை டிப்ளோமா, வயம்ப பல்கலைக்கழகத்தில் இலிருந்து MBA போன்ற பட்டங்களையும் பெற்றுள்ளார். 1987 ஆம் ஆண்டில் அவர் பிரதேச அபிவிருத்தி வங்கியில் சேர்ந்தார். கிளை முகாமையாளர், வலய முகாமையாளர், மாவட்ட முகாமையாளர், பிரதான முகாமையாளர், உதவி பொது முகாமையாளர் மற்றும் பிரதேச பொது முகாமையாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார். திரு. ஜயசிங்க வங்கி துறையில் 30 வருட அனுபவம் பெற்றுள்ளார்.

08 திரு. சி. எல். பிஹில்லந்த
பிரதி பொது முகாமையாளர் - கடன்

களனி பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பட்டம் பெற்றார். பேராதனை பல்கலைக்கழகத்தில் வர்த்தகத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். வங்கியில் (கண்டி பிரதேச கிராம அபிவிருத்தி வங்கி) ஒரு முகாமையாளராக இணைந்தார். வங்கித் தொழிற்துறையில் அவர் முகாமைத்துவ மட்டத்தில் கிளை முகாமையாளர், பிரதான முகாமையாள் உதவி பொது முகாமையாளர் மற்றும் சபரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் பிரதேச பொது முகாமையாளராகவும் பரந்த அளவிலான அனுபவத்தை பெற்றுள்ளார். அவர் வங்கிக் தொழில் துறையில் 30 வருட அனுபவம் பெற்றுள்ளார்.

09 திருமதி என். எஸ். திலகரத்ன
உள்ளக கணக்காய்வு தலைவர்

ஏப்ரல் 2017 ஆம் ஆண்டு முதல் வங்கியின் கணக்காய்வுத் தலைவராக திருமதி. நந்தனி திலகரத்ன நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர்களில் ஒருவராக உள்ளார். அவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் BSc இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் வங்கியாளர்கள் நிறுவனத்தில் ஒரு சக உறுப்பினராக உள்ளார். இந்தியாவின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட தகவல் கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வில் டிப்ளோமா பெற்றுள்ளார். வங்கியில் சேரும் முன் அவர் மக்கள் வங்கியின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஆக பணியாற்றினார். மேலும் கடன் மற்றும் கணக்காய்வில் 28 ஆண்டுகள் அனுபவம் பெற்றார்.

பிராந்திய பொது முகாமையாளர்கள்/ சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்கள்


01


02


03


04


05


06

01 திரு. யூ. பி. சேமசிங்க

பிராந்திய பொது முகாமையாளர் – வடமத்திய மாகாணம்

B.Com (சிறப்பு) பட்டம் – கொழும்பு பல்கலைக்கழகம்

02 திரு. டி. எம். சேனரத்ன பண்டார

பிராந்திய பொது முகாமையாளர் – மத்திய மாகாணம்

B.Com (சிறப்பு) பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

03 திரு. டி. எம். டி. எஸ். குமார

பிராந்திய பொது முகாமையாளர் – வடமேல் மாகாணம்

BSc வணிக நிர்வாகம் (சிறப்பு) பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

04 திரு. டபிள்யூ. எஸ். ஹேவாவசம்

பிராந்திய பொது முகாமையாளர் – மேல் மாகாணம்

B.Com (சிறப்பு) பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

05 திரு. ஏ. எச். எம். ஜி. அபேரத்ன

பிராந்திய பொது முகாமையாளர் – சபரகமுவ மாகாணம்

B.Com (சிறப்பு) பட்டம் – களனி பல்கலைக்கழகம்,

நுண் நிதி டிப்ளோமா – இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

06 திரு. ஐ. ஜே. விஜேசேகர

பிராந்திய பொது முகாமையாளர் – கிழக்கு மாகாணம்

B.Com (சிறப்பு) பட்டம் - ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்


07


08


09


10


11


12


13

07 திரு. ஜி. எஸ். டி. சில்வா

பிராந்திய பொது முகாமையாளர் – தென் மாகாணம்

(BSc) – வணிக நிர்வாகம் (சிறப்பு) பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

08 திரு. பி. எச். எம். எஸ். பஸ்நாயக்க

பிராந்திய பொது முகாமையாளர் - ஊவா மாகாணம்

BSc வணிக நிர்வாகம் (சிறப்பு) பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் டிப்ளமோ முகாமைத்துவம் – யுவா பல்கலைக்கழகம்

09 திரு. எஸ். ஏ. ஆர். ஆர். சி. சிங்களகொட

சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் – செயற்பாடுகள

B.Com (சிறப்பு) பட்டம் – களனி பல்கலைக்கழகம்

10 திரு. கே. பி. தஹநாயக்க

சிரேஷ்ட உதவிய பொது முகாமையாளர் – கடன் நிர்வாகம்

B.Com (சிறப்பு) பட்டம் – ருஹுனு பல்கலைக்கழகம், முதுநிலை டிப்ளமோ முகாமைத்துவம் – ரஜரட பல்கலைக்கழகம்

11 திரு. டபிள்யூ. எம். நிமல் டி சில்வா

சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் – நிர்வாகம்

BSc வணிக நிர்வாகம் (சிறப்பு) பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

12 திரு. டபிள்யூ. கோட்டகே

சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் – அலுவலக சேவைகள்

B.Com (சிறப்பு) பட்டம் – ருஹுனு பல்கலைக்கழகம்

13 திரு. டபிள்யூ. எம். டி. எஸ். விக்கிரமசிங்க

சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் – இணக்கம்

B.Com (சிறப்பு) பட்டம் – ருஹுனு பல்கலைக்கழகம், முதுகலை டிப்ளமோ வர்த்தக முகாமைத்துவம் – கொழும்பு பல்கலைக்கழகம், சுவீகரிப்பு முகாமைத்துவத்தில் வங்கியியல் – சுவீடன்

உதவி பொது முகாமையாளர்/ திணைக்களங்களின் தலைவர்கள்


01


02


03


04


05


06

01 திரு. கே. ஆரியதிலக

உதவி பொது முகாமையாளர் – நுண் நிதி மற்றும் சிறப்பு திட்டங்கள்

மனிதவள மேம்பாட்டு உயர் தேசிய டிப்ளமோ – தேசிய மேலாண்மை நிறுவனத்தின் டிப்ளோமா

02 சி. எஸ். வேரகொட

உதவி பொது முகாமையாளர் – தென் மாகாணம்

BSc வணிக நிர்வாகம் (சிறப்பு) பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

03 திரு. டபிள்யூ. வி. ஈ. ஜி. வரகாகொட

உதவி பொது முகாமையாளர் – திறைசேரி

BSc – வியாபார நிர்வாகம் (சிறப்பு) பட்டம் – ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை. இடைநிலைப் பரீட்சை – இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம்

04 திரு. எல். பி. உபாலி

உதவி பொது முகாமையாளர் – SME/கடன்

B.Com சிறப்பு பட்டம் – களனி பல்கலைக்கழகம்

05 திரு. பீ. எம். யூ. எஸ். பஸ்நாயக்க

உதவி பொது முகாமையாளர் – சந்தைப்படுத்தல்

விவசாயத்தில் டிப்ளமோ – வேளாண் கல்லூரி, பல்வெஹர

06 திரு. ஆர். எம். ஆர். ரண்தெனிய

உதவி பொது முகாமையாளர் – வடமேல் மாகாணம்

இளங்கலை பட்டம் – பேராதனை பல்கலைக்கழகம்


07


08


09


10


11


12

07 திரு. டி. எஸ். பி. சி. ஹதுன்ஹெவ

உதவி பொது முகாமையாளர் – ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி அபிவிருத்தி

08 திரு. டி. பி. தர்மதாச

உதவி பொது முகாமையாளர் – ஊவா மாகாணம்

இளங்கலை பட்டம் – பேராதனை பல்கலைக்கழகம்

09 திருமதி. பி. ஆர். டீ புஷ்பகுமாரி

உதவி பொது முகாமையாளர் – மனித வள அபிவிருத்தி

B.Com (சிறப்பு) பட்டம் – களனி பல்கலைக்கழகம்

10 திரு. ஜி. டபிள்யூ. அதுல குமார

உதவி பொது முகாமையாளர் – கிழக்கு மாகாணம்

BSc பொது நிர்வாக சிறப்பு பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

11 திரு. டப். எம். சி. வனிகசிங்க

உதவி பொது முகாமையாளர் – உள்ளகக் கணக்காய்வு

இளங்கலை (பொருளாதாரம்) பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

12 திரு. டபிள்யூ. எஸ். விஜேதுங்க

உதவி பொது முகாமையாளர் – தகவல் தொழில்நுட்பம்

BSc பிரயோக விஞ்ஞானம், MSc in IT, MBA in IT


13


14


15


16

13 எம். எம். எம். எஸ். ஆனந்த

உதவி பொது முகாமையாளர் – மேல் மாகாணம்

IBSL இணை உறுப்பினர்

14 திரு. ஜி. எம். எம். சி. டி. சில்வா

உதவி பொது முகாமையாளர் – வட மத்திய மாகாணம்

B.Com பட்டம், IBSL இணை உறுப்பினர், PGDBM – வயம்ப பல்கலைக்கழகம்

15 திரு. ஏ. ஏ. குணரத்ன

உதவி பொது முகாமையாளர் – சபரகமுவ மாகாணம்

BSc பொது நிர்வாக சிறப்பு பட்டம் – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

16 திரு. எஸ். டி. ரணதுங்க

உதவி பொது முகாமையாளர் – ஊவா மாகாணம்

BA (சிறப்பு) பட்டம் – கொழும்பு பல்கலைக்கழகம்


17


18


19


20

17 திரு. பி. எம். எஸ். விக்கிரமரத்ன

உதவி பொது முகாமையாளர் – கடன் அறவீடு

B.Com சிறப்புப் பட்டம் – கொழும்பு பல்கலைக்கழகம்

18 திரு. கே. சி. டி. தர்மப்பிரியா

உதவி பொது முகாமையாளர் – இடர் முகாமைத்துவம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டம், இலங்கையின் வங்கியாளர்களின் நிறுவனத்தின் சிரேஷ்ட உறுப்பினர்

19 திரு. கே. பி. விஜேரத்ன

உதவி பொது முகாமையாளர் – நிதி

BSc வணிக முகாமை சிறப்பு பட்டம் – ரஜரட பல்கலைக்கழகம் IBSL இன் இடைநிலை ஆய்வு

20 திருமதி ஆர். எம். டி. ராஜபக்ஷ

சபைச் செயலாளர்/பதில் தலைமை சட்ட அலுவலர்

சட்டத்தரணி – கொழும்பு பல்கலைக்கழகம்

RDB ஒரு அபிவிருத்தி வங்கியாகும், கடன் அதன் முக்கிய வர்த்தக வலையமைப்பு ஆகும், மற்றும் வளர்ந்து வரும் கடன் தரத்தின் அதிகரிக்கும் நிர்வாக செயற்பாடுகளின் நோக்குடன் 2017 ஆம் ஆண்டில் இடர் முகாமைத்துவப் பிரிவின் கீழ் கடன் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக ஒரு விரிவான கடன் மறு ஆய்வு செய்முறை (LRM) மேற்கொள்ளப்பட்டது.

இடர் நிதி நடவடிக்கைகளில் உள்ளார்ந்ததாகும். "இடரினை எதிர் கொள்ளாமல் எவரும் எதையாவது சம்பாதிக்க முடியாது" இந்த கருத்து வங்கியியல் வியாபாரத்திற்கும் பொருந்தும். நிதியச் சந்தையில் பேண்தகைமை வளர்ச்சியைப் பெறுவதற்காக, வங்கி இந்த இடர் காரணிகளை நிர்வகிக்கவும் குறைக்கவும் வேண்டும், எனவே இடர் முகாமை என்ற கருத்து, அந்த இடர்களைத் தணிக்கவும் நிர்வகிக்கவும் ஒரு வழிகாட்டலாக உள்ளது.

கடன் இடர், செயற்பாட்டு இடர் மற்றும் சந்தை இடர் போன்ற பல இடர்களை வங்கிகள் எதிர்கொள்கின்றன. இந்த மூன்று முக்கிய இடர் வகைகளுக்கு கூடுதலாக, மூலோபாய இடர், அந்நியச் செலாவணி இடர், இணக்கம் இடர், சட்ட இடர் மற்றும் நற்பெயர் இடர் போன்ற பல்வேறு இடர் வகைகளையும் வங்கிகள் கருத்தில் கொள்ள வேண்டும். இதன் விளைவாக, ஒவ்வொரு வங்கியியல் நிறுவனம் அவர்களின் இடர் கலாச்சாரம் மற்றும் இடர் நடைமுறைகள் மீது கவனம் செலுத்துகிறது. இதற்கு இணங்க, RDB சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றும் செயல்முறையிலும் உள்ளது. அனைத்து பணியாளர்களும் இடர்களை அடையாளம் காணவும், அந்த இடர்களை ஓரளவுக்கு நிர்வகிக்கவும் பொறுப்பு உள்ளவர்கள். பின்வரும் பிரிவு RDB இன் நடப்பு இடர் ஆளுமை கட்டமைப்பு மற்றும் எதிர்கால போக்குகள் மீது கவனம் செலுத்துகிறது.

ஒருங்கிணைந்த இடர் ஆளுமை

RDB இன் இடர் ஆளுகையின் கட்டமைப்பு பணிப்பாளர் சபையிலிருந்து தொடங்குகிறது மற்றும் இடர் முகாமைத்துவக் கொள்கைகள், நடைமுறைகள், குழுக்கள் மற்றும் பிரதிநிதித்துவம் பெற்ற அதிகார அளவுகள் மூலம் கிளை மட்டத்தில் பயிற்சி அளிக்கிறது. RDB இன் பணிப்பாளர்கள் குழு ஒட்டுமொத்த வங்கியின் இடரினை நிர்வகிப்பதில் இறுதி பொறுப்பைக் கொண்டுள்ளது. வங்கி ஒருங்கிணைப்பு இடர் முகாமைக் குழு (BIRMC), சபைக் கடன் குழு (BCC), சபைத் தகவல் தொழிநுட்பக் குழு (BITC) மற்றும் சபை கணக்காய்வுக் குழு (BAC) ஆகியவை, வங்கி மற்றும் நிர்வாக குழுக்களின் (MC) மொத்த இடர் நிர்வாகத்தை மேற்பார்வையிடுவதில் உதவுகின்றன. வங்கியின் வணிக அமைப்பிலிருந்து சுயாதீனமான பிரதான இடர் அதிகாரி (CRO) அனைத்து வியாபார மட்டங்களின் தினசரி நடவடிக்கைகள் குறித்து வழக்கமான அறிக்கையை சபைக்கு வழங்குகிறார்.

IRMC, நிர்வாக பணிப்பாளரின் தலைமையில் குழு மற்றும் வங்கி இடர் முகாமை கட்டமைப்பில் முடிவுகளை எடுக்க உதவுகிறது. வங்கி முழுமையான இடர் விவரங்களுக்கான சிபாரிசுகளை வழங்கியதோடு, வங்கியின் இடர் நிர்வாகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உள்ளக மூலதன ஆதார மதிப்பீட்டு செயல்முறை (ICAAP) ஆகியவற்றை பரிந்துரைத்தது. ICAAP கொள்கைகள் நடைமுறைகள் IRMC இற்கு CRO க்களினால் தமது பிரிவுகள் தொடர்பாக வழமையான முறையில் வழங்கப்படுகின்றன.


RDB சார்பாக வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தை **BAC** ஆய்வு செய்கிறது. வங்கியின் உள் கணக்காய்வு செயல்திறன், துல்லியம் மற்றும் சுயாதீனத்தை குழு அணுகும்.

MC என்பது வங்கியின் GM/CEO தலைமையிலான குழு மற்றும் வங்கியின் அனைத்து நிர்வாக நிலை நபர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்தக் குழு அவ்வப்போது மற்றும் தேவையான போதும் செயல்படுகிறது. அவ்வப்போது இடர் மற்றும் நிச்சயமற்ற நிலைமை குறித்த அறிக்கைகள் வங்கியின் செயல்பாட்டு மட்டத்திலிருந்து பரிசீலனை செய்யப்படுகின்றன.

CRO (தலைமை இடர் அதிகாரி) வங்கி மற்றும் இடர் முகாமை நுட்பங்களை ஒட்டுமொத்த இடர் முகாமை பற்றி BOD மற்றும் IRMC இற்கு உதவுவதற்கான ஒரு சுயாதீனமான நபர்.

RMD (இடர் முகாமை திணைக்களம்) CRO இன் தலைமையில் உள்ளது, இதில் இடர் முகாமை, கடன் இடர் மற்றும் சந்தை மற்றும் வட்டி விகித இடரின் மூன்று தனித்தன்மைகள் உள்ளன.

இடர் முகாமை அமைப்பு



இடர் முகாமைத்துவத்தின் திறன் என்பது அடிப்படையில் இடர்முகாமைக கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டமைப்பை சார்ந்துள்ளது. RDB இன் பயனுள்ள இடர் முகாமைக்கான மூலோபாய வழிகாட்டுதலாகும். RMD, IRMC யின் பரிந்துரையின் பேரில் பணிப்பாளர் சபை ஒப்புதல் பெற்ற விரிவான இடர் முகாமை கொள்கைகள், நடை முறைகள் மற்றும் சட்ட தேவைகளை நிறுவியுள்ளது. RMD ஆல் இந்த கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டமைப்பை ஆண்டு தோறும் மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

இடர் முகாமைக் கொள்கை, RDB க்கான நடைமுறைகள் மற்றும் கட்டமைப்பு

கொள்கை	நிறுவப்பட்ட ஆண்டு	உள்ளடங்குபவை
கடன் இடர் முகாமை கொள்கை	2012	கடன் வரம்புகள் மற்றும் இடர்முகாமை மற்றும் கடன்களின் நுட்பங்கள் ஆகியவற்றின் முறைகள்
செயல்பாட்டு இடர் முகாமைக் கொள்கை	2012	செயலிழப்பு மற்றும் செயற்பாட்டு இடர் மற்றும் செயல்பாட்டு துணைக்குழு பற்றிய விவரங்களைக் கண்டறியும் நுட்பங்கள்
பணப்புழக்க இடர் முகாமைக் கொள்கை	2012	பணமாற்ற ஆதனங்கள் மற்றும் பணமாற்ற பொறுப்புகளை நிர்வகிப்பதற்கான நுட்பங்கள்
வட்டி விகிதம் இடர் முகாமை கொள்கை	2012	வட்டி விகித இடரைக் குறைப்பதும் அடையாளம் காண்பதற்கான நுட்பங்களும்
அழுத்த சோதனைக் கொள்கை	2012	மூலதன ஏற்றத்தாழ்வுக்கான அழுத்தம் சோதனை கட்டமைப்பை, நீக்குதல்
ஒருங்கிணைந்த இடர் முகாமை கட்டமைப்பு	2013	RDB க்கான இடர் முகாமை கட்டமைப்பு
சந்தை இடர் முகாமை கொள்கை	2015	சந்தை இடரைத் தடுக்கவும் நுணுக்கங்களைக் கண்டறியவும் உத்திகள்
கடன் மறு ஆய்வு கொள்கை	2016	கடன் மறு ஆய்வு நுட்பம்
வணிக தொடர்ச்சி திட்டம்	2016	பேரழிவுக்கான வணிகத் தொடர் திட்டத்திற்கான வழிகாட்டுதல்
ஏற்கத்தக்க பயன்பாட்டுக் கொள்கை	2015	தகவல் பயன்பாடுக்கான வழிகாட்டுதல்
தகவல் பாதுகாப்பு கொள்கை	2015	IT பாதுகாப்புக்கான வழிகாட்டுதல்

வங்கி என்பது அதன் உள்ளார்ந்த பல்வேறு வகையான இடர்களை வெளிப்படுத்தும் ஒரு வியாபாரமாகும். வங்கிகள் பொதுவாக எதிர்கொள்ளும் முக்கிய மற்றும் மிகவும் வெளிப்படையான இடர்கள் கடன், சந்தை மற்றும் செயல்பாட்டு இடர்கள் ஆகும். இருப்பினும், சமீப காலத்தில் தொழில்நுட்பம் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் நிதி நெருக்கடிகளின் அபிவிருத்திகள், மூலோபாய இடர்கள், இணக்க இடர்கள், சட்டபூர்வ இடர்கள், நற்பெயர் இடர்கள் போன்ற பிற இடர் வகைகளை வங்கிகள் பரிசீலிக்க ஊக்குவித்துள்ளன. சூழ்நிலைகளில் இன்று ஒவ்வொரு வங்கி நிறுவனமும் அவர்களின் இடர் கலாச்சாரம் மற்றும் இடர் முகாமை நடைமுறைகளை கருத்தில் கொள்கின்றன. இந்த பிரிவில், நாம் RDB வெளிப்பாடு என்று முக்கிய நிதி மற்றும் நிதி அல்லாத இடர் பகுப்பாய்வு பற்றி நோக்கவுள்ளோம்.

கடன் இடர்

கடன் இடர் என்பது, கடன் இழப்பு அல்லது கடனளிப்பு ஒப்பந்தத்தை சந்திக்காமல் கடன் வாங்கியதில் இருந்து திருப்பிச் செலுத்தத் தவறுவதால் ஏற்படும், முக்கிய இழப்பு அல்லது நிதி வெகுமதி இழப்புடன் தொடர்புடைய இடர் ஆகும்.

RDB இல் கடன் இடர் முகாமை

கடன் இடர் வெளிப்பாடு


RDB யின் மொத்த கடன் வெளிப்பாடு அதன் மொத்த ஆதனங்களில் 75.64% ஆகும். விரிவாக்க கடன் வங்கியின் முக்கிய வியாபார மார்க்கம் ஆகும், இதன் விளைவாக, கடன் இடர்கள் நிர்வகிக்கப்படும் மிக முக்கியமான இடர் வகை ஆகும்.

எங்கள் கடன் சேவை ரூ. 128.34 பில்லியன் ஆக அதிகரித்தது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20% அதிகரிப்பாகும். 2017 ஆம் ஆண்டின் முடிவில், வங்கியின் 626 கடன் வசதிகள் உள்ளன, இதில் 5 மில்லியனுக்கும் அதிகமானோர், முதல் 10 பேர் கடன் பெறுபவர்கள் மொத்தத்தில் 0.49% பங்களிப்புடன், மேலும் முதல் 3 கடன் பெறுவோர் 0.13%, 0.11%, மற்றும் 0.03% என காணப்பட்டது. விவசாயக் கடன்கள், கால்நடை வளர்ப்பு கடன், தொழிற்துறை கடன் (SME), வர்த்தக மற்றும் சேவைகள் கடன், வீட்டுக் கடன்கள், அடகுக் கடன், நுகர்வுக் கடன் மற்றும் வைப்புகளுக்கு இணையான கடன்கள் ஆகியவை அடங்கும். RDB ஒரு அபிவிருத்தி வங்கியாக இருப்பதுடன், வங்கியின் ஒட்டுமொத்த இடர் வெளிப்பாட்டை எந்தவொரு வங்கியையும் போன்றே கடன் கொள்கையில் வெளிப்படுத்த முயல்கிறது. ஆகையால், கடன் இடர் முகாமை செயல்முறை மீது கணிசமான முக்கியத்துவத்தை வங்கி கொண்டுள்ளது.

கடன் இடர் ஆளுமை

RDB இன் கடன் இடர் முகாமைக் கொள்கையானது, கடன் இடர் நிர்வாகத்தின் முக்கிய வழிகாட்டுதலாகும், இது சபையின் ஒப்புதலுடன் ஒவ்வொரு ஆண்டும் மதிப்பாய்வு செய்யப்படுகிறது, இது கடன் கொள்கையை அடையாளம் காண்பது, நிர்வகிக்க மற்றும் குறைக்க அனைத்து கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் முறைகளைக் கொண்டுள்ளது. சபை மட்ட குழுக்கள் மற்றும் நிர்வாக மட்ட குழுக்கள் RDB கடன் இடர் நிர்வாகத்துடன் ஈடுபடுகின்றன. RMD உடன் இணைக்கப்பட்ட கடன் இடர் நிர்வாக அலகு பாதுகாப்பு இடர், NPL மற்றும் கடன் கண்காணிப்பு ஆகியவற்றை அடையாளம் மற்றும் கண்காணிக்க பொறுப்பு வகிக்கிறது. RDB கடன் பிரிவில் மதிப்பாய்வு செய்து RMD இன் கீழான கடன் இடர் முகாமை குழு அவ்வப்போது சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க பொறுப்பு வகிக்கிறது.

கடன் இடர் ஆளுகை



கடன் இடர் குறைப்பு, கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல்

வாடிக்கையாளர் பகுப்பாய்வு மற்றும் மீட்பு செயல்முறைகள் மூலம் கிளை முகாமையாளர்/கடன் உத்தியோகத்தர்கள் மற்றும் தனிப்பட்ட கடன் வசதிகளால் (கிளை மட்டத்தில்) கடன் அறவீடு மிக நெருக்கமாக கண்காணிக்கப்படுகிறது. எனினும், தலைமை அலுவலக மட்டத்தில், இடர் முகாமைத்துவ திணைக்களம் வங்கியின் கடன் பிரிவை ஆய்வு செய்து KRI (முக்கிய இடர் காட்டி) அறிக்கையின் கீழ் சபையின் பணிப்பாளர்களிடம் அறிக்கையிடும். KRI அறிக்கை மொத்த கடன் சேவை பகுப்பாய்வு, NPA பகுப்பாய்வு மற்றும் கடன் வழங்குதல் பகுப்பாய்வு ஆகியவற்றை உள்ளடக்கியது. இடர் முகாமைத்துவ பிரிவானது, வங்கியின் சிறந்த 20 வாடிக்கையாளர்களை ஒரு மாதாந்த அடிப்படையில் கண்காணிக்கும் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடும். தரமான கடன் தொகுப்புகளை நிர்வகிக்க RDB மூலமாக நுட்பங்கள் மற்றும் அணுகுமுறைகளை பின்பற்றுவதன் மூலம் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது.

அங்கீகார ஒப்புதல் ஆணையம்

கடன் வசதிகளை அங்கீகரிப்பதற்காக வங்கி குறிப்பிட்ட பிரதிநிதித்துவ அதிகார அளவைக் கொண்டுள்ளது. பொதுவாக, கடன் திட்டங்களை அனுபவம் வாய்ந்த கடன் அதிகாரிகளால் ஆராய்ந்து, ஒப்புதலுக்கான அதிகார அனுமதிப்பத்திரத்திற்கு ஒப்படைக்கப்படுகிறது. இருப்பினும், உயர் மதிப்பீட்டுக் கடன் திட்டங்களை கடன் குழு மற்றும் பணிப்பாளர்கள் குழு அங்கீகரிக்கின்றன. தற்பொழுது, பிரதி பொது முகாமையாளர் கடனீட்டு அதிகாரத்தின் அளவுக்கு அதிகமான கடன் திட்டங்கள், CRO மூலம் சுயாதீன மதிப்பீடு செய்யப்படும். வங்கி 2014 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட மதிப்பீட்டு மற்றும் ஒப்புதல் செயல்முறையை தொடர்ந்ததோடு அது வங்கியின் கடன் இடர் முகாமைக்கு மிகவும் பங்களித்தது.

கடன் நிர்வாக பிரிவு

கடனீட்டுப் பிரிவின் அதிகரிக்கும் நிர்வாக செயல்முறையின் அடிப்படையில், 2016 மார்ச்சில், இடர் முகாமைப் பிரிவின் கீழ் கடன் நிர்வாக அலகு ஒரு சுயாதீன அலகாக நிறுவப்பட்டது. கடனீட்டு ஆவணங்களை கண்காணிக்கவும் மற்றும் 3 மில்லியனுக்கும் மேலான அனைத்து கடன்களையும் மதிப்பீடு செய்வதற்கு இந்த அலகு பொறுப்பு வகிக்கிறது.

கடன் மீளாய்வு பொறிமுறை (LRM)

IRMC கூட்டங்களின் நடவடிக்கைகள் சந்திப்பு குறிப்புக்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் சபைக்கு அறிவிக்கப்படுகின்றன. வங்கியின் இடர் விவரக் குறிப்பைப் பற்றிய அறிக்கை மற்றும் பிற குறிப்பிட்ட விடயங்கள் IRMC யின் பரிந்துரையின் பேரில் பணிப்பாளர் சபை ஒப்புதலுக்காக தனித்தனியாக சமர்ப்பிக்கப்படுகின்றன. மறு ஆய்வுக்குரிய காலத்தில் IRMC அளித்த பரிந்துரைகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.



கே. பீ. ராஜபக்ஷ

தலைவர்
ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு

தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் தலைமை நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்பு தொடர்பான அறிக்கை

2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதியியல் அறிக்கைகள் பின்வரும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்க சமர்ப்பிக்கப்படுகின்றன:

1. இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கியல் தரநிலைகள் (SLFRS/LKAS).
2. 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியதிச் சட்டங்கள்.
3. கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியல் விதிகள்.
4. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்.
5. 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட விதிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்.
6. 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம்.

இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளின் வருடாந்த நிதி அறிக்கைகள் தயாரிப்பதற்கான குறிப்பிட்ட வடிவமைப்புகளுடன் இணங்குவதற்கான நிதி அறிக்கைகள் மற்றும் வெளிப்படுத்துதல்களின் விளக்கத்தில் பயன்படுத்தப்படும் வடிவங்கள்.

வங்கியின் கணக்கியல் கொள்கைகள் இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க அமைக்கப்பட்டுள்ளன. இது 1 ஜனவரி 2012 முதல் அமுலுக்கு வந்தது. கணக்கியல் கொள்கைகள் தொடர்ச்சியாக வங்கியால் பயன்படுத்தப்படுகின்றன. நடப்பு வருடத்தின் திட்டத்துடன் இணங்கும் பொருட்டு ஒப்பீட்டுத் தகவல்கள் மீளக் குறிப்பிடப்படுகின்றன. நிதி அறிக்கைகள் குறிப்புகள் மூலம் அனைத்து குறிப்பிடத்தக்க விடயங்களும் வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. நிதி வழங்கல், வருமான அறிக்கை மற்றும் வங்கியின் பணப் பாய்ச்சல்கள் ஆகியவை குறித்து உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டம் வழங்கப்பட்டுள்ளது என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம். வங்கி எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகளை தொடர போதுமான வளங்கள் உள்ளன என்று நம்புகிறோம் மற்றும் அதன்படி நிதி அறிக்கைகளை தயாரித்து வழங்குகிறோம்.

பணிப்பாளர்கள் சபை மற்றும் வங்கியின் முகாமைத்துவம், நிதி அறிக்கையின் குறிக்கோள் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றிற்கு பொறுப்பு ஏற்கிறது. நிதி அறிக்கைகள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள் ஒரு நியாயமான மற்றும் விவேகமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு நிதி அறிக்கைகள் ஒரு உண்மையான மற்றும் நியாயமான பார்வையை பிரதிபலிக்கும் பொருட்டு பரிவர்த்தனைகளின் வடிவம் மற்றும் இயல்பு மற்றும் வங்கியின் விவகாரங்கள் ஆகியவை நியாயமான முறையில் வழங்கப்பட்டுள்ளன.

இதை உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை செயல்படுத்துவதில், வங்கியின் ஆதனங்களைப் பாதுகாப்பதற்காகவும், மோசடிகளைத் தடுக்கவும், மற்ற முறைகேடுகளை கண்டறிவதற்கும், தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன.

வங்கியின் உள்ளக கணக்காய்வாளர்கள் வங்கியின் நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை தொடர்ச்சியாக தொடர்ந்து பின்பற்றுவதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்கியுள்ளனர். இருப்பினும், உள்ளக வரம்புகள் எந்தவொரு உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்கியல் உத்தரவாதத்தை அடையாளம் காண பயன்படுத்தப்படுவது அவசியமாகும்.

வங்கியின் நிதி அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்படுகின்றன. கணக்காய்வாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட இந்த அறிக்கை இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 81 இல் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து நடவடிக்கைகளும் துல்லியமாக பதிவு செய்யப்பட்டுள்ளன மற்றும் SLFRS/LKAS உள்ளிட்ட இலங்கை கணக்கியல் தரநிலைகள் மற்றும் நிதி அறிக்கை மற்றும் வெளிப்படுத்தல் தொடர்பான பிற ஒழுங்கு முறை விதிகள் ஆகியவற்றை பின்பற்றி அனைத்து நிதி அறிக்கைகள் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சபை கணக்காய்வு குழு உறுதி செய்கிறது. வெளி மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் விவாதிப்பதற்கான எந்தவொரு விடயத்தைப் பற்றியும் கணக்காய்வு அறிக்கை சுதந்திரமாக அறிக்கையிடலானது இவ்வாண்டறிக்கையில் 70 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

எங்கள் அறிவுக்கு எட்டிய வரையில் பின்வருவனவற்றை நாம் உறுதிப்படுத்துகிறோம்:

- பொருந்தும் சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும வழிகாட்டுதல்களுடன் வங்கி இணங்குகின்றது.
- இணக்கப்பாடற்ற விடயங்கள் எதுவும் இல்லை.
- வருடாந்த அறிக்கையின் நிதி அறிக்கைகளில் குறிப்பு 36.1 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர வங்கிக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- வங்கி மற்றும் அதன் அனைத்து பங்காளிகள் சார்பாக செலுத்த வேண்டிய அனைத்து பங்களிப்புகளும், கடமைகளும், வரிகளும் மற்றும் வங்கியின் அனைத்து சட்டரீதியான தொகையும் செலுத்தப்பட்டுள்ளது அல்லது அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ரி. ஏ. ஆரியபால
பொது முகாமையாளர்/த.நி.அ



பி. எஸ். எதிரிசூரியா
தலைமை நிதி அதிகாரி

5 மார்ச் 2018

நிதிக் கூற்று அறிக்கை மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

பணிப்பாளர்கள் சபையின் இந்த அறிக்கை நிதி தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புகளை வங்கியின் கட்டமைப்பின் படி வெளிப்படுத்துகின்றன. நிதி அறிக்கைகள் தொடர்பாக கணக்காய்வாளர்களின் பொறுப்புகள் இந்த வருடாந்திர அறிக்கையின் பக்கம் 81 இல் உள்ள கணக்காய்வாளர்களின் அறிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிதி அறிக்கைகள்

அனைத்து பரிவர்த்தனைகளின் கணக்குகளும் சரியான முறையில் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்தல், ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் இலங்கை கணக்கியல் தரநிலைகள் (SLFRS/LKAS) ஆகியவற்றிற்கு ஏற்ப அனைத்துப் பரிவர்த்தனைகள் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்தல் மற்றும் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் சட்டபூர்வமான ஒழுங்குமுறை தேவைகளுக்கேற்ப நிதி அறிக்கையினை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு பணிப்பாளர்களின் சபை பொறுப்பாக உள்ளது. இந்த நிதி அறிக்கையானது வருமான அறிக்கை, விரிவான வருமான அறிக்கை, நிதி நிலை அறிக்கை, பங்கு மாற்றங்கள் அறிக்கை, திரவத்தன்மை அறிக்கை, குறிப்பிடத்தக்க கணக்குக் கொள்கை மற்றும் குறிப்புகள் ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது.

31 டிசெம்பர் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நிதி அறிக்கைகள் தயாரிப்பதில் மிக பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு, தொடர்ந்தும் மற்றும் போதுமானதாக வெளியிடப் பட்டதாகவும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். நிதி அறிக்கைகளின் தயாரிப்பின் செயல்பாடு மற்றும் பரிவர்த்தனைகளின் சரியான பிரதிபலிப்பை உறுதி செய்வதற்கு தேவையான நியாயமான மற்றும் விவேகமான வழிமுறைகள் தேவைப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டின் டிசெம்பர் 31 ஆம் திகதி நிறைவடைந்த நிதியியல் ஆண்டிற்கான அறிக்கைகள், 2008 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட திருத்தங்கள், இலங்கை கணக்கியல் தரநிலைகள் மற்றும் பிற சட்டரீதியான ஒழுங்குமுறை தேவைகள் ஆகியவற்றின் விதிமுறைகளுக்கு இணங்குகின்றன. இந்த நிதி அறிக்கைகள் 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வங்கியின் விவகாரங்களின் உண்மையான மற்றும் நேர்மையான பார்வையை முன்வைக்கின்றன.

நிகழ்கால கவனம்

பணிப்பாளர்கள் எதிர்காலத்திற்கான வணிகத்தில் தொடர்ச்சியான வளங்கள் காணப்பட வேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் தமது பொறுப்புக்களை உறுதிப்படுத்துகின்றனர்.

உள்ளகக் கட்டுப்பாடு, இடர் முகாமை மற்றும் இணக்கம்

பணிப்பாளர்கள் உள்ளக நிதியியல் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் மேலாண்மை ஆகியவற்றிற்கும் பொறுப்பானவர்கள், மற்றும் அவர்கள் வங்கியின் ஆதனங்களைப் பாதுகாக்கவும், மோசடி மற்றும் தவறான நிர்வாகத்தை தடுக்கவும் ஒரு வலுவான கட்டுப்பாடு சூழலை பராமரிப்பதில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்துகின்றனர். முழுமையாக அகற்றப்பட முடியாத உள்ளக இடர்களை வலியுறுத்தும் அதே வேளையில், பல்வேறு முறைமைகள் மற்றும் பிற கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்துவதன் மூலம் அவற்றைக் கட்டுப்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர். நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பான வருடாந்த அறிக்கை பக்கம் 81 இல் கொடுக்கப்பட்டுள்ளது. இது குறித்த நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்காக நிதி அறிக்கை முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் மீது பணிப்பாளர்கள் உத்தரவாதம் அளிக்கின்றனர்.

பணிப்பாளர்கள் மற்றும் முகாமைத்துவம் என்பவை இடர் முகாமைக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் முக்கிய பங்கு வகிக்கின்றன. காலத்திற்குக் காலம் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவிற்கு இடர் பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்கும் பொருட்டு இடர்களைக் கண்காணிக்கவும் நிர்வகிக்கவும் குழு உப குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பொருந்தும் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் இணங்குதல் என்பவை இணங்குதல் பிரிவினால் கண்காணிக்கப்படுகிறன. இவை ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கு அவ்வப்போது அறிவிக்கப்படுகிறன.

கணக்காய்வு குழு மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு என்பவை தொடர்ந்து செயல்படுகையில், உட் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமை நடைமுறைகளின் செயல்திறனை வலுப்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளன. வருடாந்திர அறிக்கையின் முறையே 70 மற்றும் 74 ஆம் பக்கங்களில் கணக்காய்வுக் குழு மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் அறிக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

கணக்காய்வாளர் நாயகம், வங்கியின் அனைத்து பதிவுகளிலும் பணிப்பாளர் சபையின் நிதி அறிக்கைகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் பெற்றுக் கொண்டதுடன், அவை பொருத்தமானதாக கருதப்படும் ஆய்வினை மேற்கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்கியுள்ளன.

இணங்குதல்

நிதி ஆண்டின் இறுதியில் வங்கியால் செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகளும், அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து அறியப்பட்ட சட்ட பூர்வமான நிலுவைகளும் இதர தொடர்புடைய ஒழுங்குமுறை மற்றும் சட்டபூர்வ கொடுப்பனவுகளும் வங்கியால் செலுத்தப்பட்டுள்ளன அல்லது மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற வகையில் உறுதி செய்கின்றனர்.

பணிப்பாளர்கள் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி தங்கள் பொறுப்புகளை நிறைவு செய்துள்ளதாக கருதுகின்றனர்.

சபையின் ஆணையின் படி



சபையின் செயலாளர்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. BAF/F/RDB/IC/2017

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date // April 2018

தலைவர்,
பிரதேச அபிவிருத்தி வங்கி

பிரதேச அபிவிருத்தி வங்கியின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் அறிக்கையில் பணிப்பாளர் குழுவுக்கு கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை.

அறிமுகம்

2017 ஆம் ஆண்டின் டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருடாந்த அறிக்கையில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதியியல் அறிக்கை ("கூற்று") தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு தொடர்பான பணிப்பாளரின் அறிக்கை இந்த அறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

முகாமைப் பொறுப்பு

வங்கியியல் சட்டத்தின் பிரிவு 3(8) (ii) (b) இன்படி இணக்கத்தினால் வழங்கப்பட்ட "உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கையில் வங்கி சபை பணிப்பாளர்களுக்கான வழிகாட்டுதலுடன்" 2007 ஆம் ஆண்டின் டிசம்பர் 12 ஆம் திகதி, இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.

SLSAE 3050 உடன் என் பொறுப்பு மற்றும் இணக்கம்

எனது பொறுப்பு, பணிப்பாளர் சபைக்கு அறிக்கையை வெளியிடுவதாகும். வங்கிகளுக்கான இலங்கை உத்தரவாத தரவரிசைகளின் ஏற்பாடு SLSAE 3050 இன்படி உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளரின் அறிக்கையின் மீது எனது உத்தரவாதத்தினை அளிக்கிறேன்.

நிகழ்த்தப்பட்ட பணிச் சுருக்கம்

அறிக்கைகள், பணிப்பாளர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணங்களை முறைப்படி அனுசரிக்கின்றனவா மற்றும் நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு செயன்முறையை அது சரியாக பிரதிப்பலிக்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்வது எனது பணிகளாகவுள்ளன.

வங்கியின் பணியாளர்களின் மீதான விசாரணை மற்றும் பணிப்பாளர் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட செயல்முறைக்கு ஆதாரமாக அமைந்த மாதிரி ஆவணங்கள் தொடர்பான விடயங்களில் மட்டுமே எமது செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த அறிக்கையானது அனைத்து இடர் மற்றும் கட்டுப்பாட்டு முறைகளை உள்ளடக்கியதா என்பதை தீர்மானிக்க எனக்கு SLSAE 3050 அவசியப்படவில்லை. மேலும் SLSAE 3050 ஆனது வருடாந்த அறிக்கையில் வெளியிட்டப்பட்ட எந்த குறிப்பிடத்தக்க சிக்கல்களின் மீதான உள்ளக கட்டுப்பாட்டின் அம்சத்தையும் சமாளிக்க விவரித்த செயல்முறைகள் உண்மையில், பிரச்சினைகளுக்குத் தீர்வாகுமா என்பதை பரிசீலிக்கவும் எனக்கு அவசியமாக இருக்கவில்லை.

தீர்மானம்

வருடாந்த அறிக்கையின் நிதி கூற்றுக்கள் மீதான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர் சபையின் மதிப்பாய்வின் வடிவமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவை ஏதேனும் பிழைகள் அற்றது என எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ற வகையில் உறுதி செய்கிறேன்.

எச். எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் நாயகம்

உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் அறிக்கை

தேவைப்பாடுகள்

இந்த அறிக்கை 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவு 3 (8) (ii) (b) மற்றும் இலங்கையின் பட்டயகணக்காளர் நிறுவனத்தின் (ICASL) வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொறுப்பு

பிரதேச அபிவிருத்தி வங்கியில் உள்ள உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அதன் செயற்திறனை மீளாய்வு செய்வதற்கு பணிப்பாளர்கள் சபை பொறுப்பாகவுள்ளது. எனினும், வங்கியின் கொள்கைகள் மற்றும் வணிக நோக்கங்களை நிறைவேற்றுவதில் தோல்வி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு பதிலாக வங்கியின் முக்கிய இடங்களில் உள்ள இடர்கள் மற்றும் ஏற்கத்தக்க இடர் விவரங்களை நிர்வகிக்கும் பொருட்டு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, உள்ளக கட்டுப்பாட்டு முகாமை மற்றும் நிதியியல் தகவல்கள் மற்றும் நிதி இழப்புக்கள் அல்லது மோசடிக்கு எதிரான பதிவுகள் குறித்த முழுமையான உத்தரவாதத்தை இதனால் வழங்க முடியாது.

சபையின் மீளாய்வு செயல்முறை

வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்படும் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் அறிக்கையின் படி உள்ளகக்கட்டுப்பாட்டு செயல்முறை அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுகிறது. அந்த வழிகாட்டுதலில் கொடுக்கப்பட்ட உள் கட்டுப்பாட்டு முறையை மதிப்பீடு செய்வதற்கு கணக்குக் கொள்கைகளை உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை குறித்த நியாயமான உத்தரவாதத்தை வழங்குதல் மற்றும் வெளி நோக்கங்களுக்காக நிதி அறிக்கைகளை தயாரித்தல் போன்றவற்றிற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மேம்படுத்துவதற்காக வங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

முகாமை இடர் மற்றும் கட்டுப்பாட்டைப் பொறுத்து சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை செயற்படுத்துவதில் சபைக்கு நிர்வாகம் உதவுகிறது. எதிர்கொள்ளும் இடர்களைக் கண்டறிந்து மதிப்பிடுவதன் மூலம் இந்த இடர்களைக்கிக்கவும் கட்டுப்படுத்தவும் முடிகின்றது.

செயல்முறையின் முக்கிய அம்சங்கள்

நிதி அறிக்கை தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் போதுமான மற்றும் நம்பகத்தன்மையை மீளாய்வு செய்வதில் நிறுவப்பட்டுள்ள முக்கிய செயல்முறைகள் பின்வருமாறு:

- வங்கியின் தினசரி நடவடிக்கைகளின் செயற்திறனை உறுதிப்படுத்துவதற்காக சபையின் சார்பில் கணக்காய்வு, கடன் மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமை துணைக் குழுக்கள் சபையினால் உருவாக்கப்பட்டுள்ளன. வங்கியின் நடவடிக்கைகள் பெருநிறுவன குறிக்கோள்கள், உத்திகள் மற்றும் வருடாந்த வரவு-செலவு திட்டத்துடன் இணங்குவதிலும், அனுமதிக்கப்பட்ட கொள்கைகளிலும் வணிக விதிமுறைகளிலும் இணங்குவதிலும் இவை சபைக்கு உதவுகின்றன.
- வங்கியின் நிதி மற்றும் பிற கட்டுப்பாடுகள் தொடர்பான அனைத்து பரிமாற்றங்களுடனும் சம்பந்தப்பட்ட ஒரு செயற்பாட்டு கையேட்டை சபை அங்கீகரித்துள்ளது. கையேட்டில் உள்ள நடைமுறைகள் அனைத்து ஊழியர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன.
- வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவு வங்கியின் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளின் மீது உள்ளகக் கட்டுப்பாட்டின் இணக்கத்தை மாதிரிகள் மற்றும் சுழற்சி செயற்பாடுகளைப் பயன்படுத்தி ஆராய்வதுடன் இணக்கமற்ற எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும் அறியப்படுத்துகின்றது. கணக்காய்வு நடைமுறையானது அனைத்து அலகுகளிலும் கிளையிலும் நடத்தப்படுவதுடன், இடரின் தன்மையைப் பொறுத்து சுயாதீனமான அறிக்கைகளையும் சமர்ப்பிக்கிறது.
- வருடாந்த கணக்காய்வுத் திட்டம் கணக்காய்வு குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும். உள்ளக கணக்காய்வு முடிவுகள் அவ்வப்போது கணக்காய்வுக் கூட்டங்களில் ஆய்வு செய்யப் படுவதற்காக குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.
- வங்கியின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு, ஒழுங்குமுறை அதிகாரிகள் மற்றும் நிர்வாகத்தால் அடையாளம் காணப்பட்ட உள்ளகக்கட்டுப்பாட்டு சிக்கல்களை மறுபரிசீலனை செய்து இடர் முகாமை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகள் ஆகியவற்றின் நம்பகத்தன்மை மற்றும் திறனை மதிப்பிடுகின்றன. உள்ளக கணக்காய்வுகளின் தரவரிசை மற்றும் உள்ளக கணக்காய்வுகளின் தரத்தில் குறிப்பாக முக்கிய கணக்காய்வு செயல்பாடுகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. கணக்காய்வு குழு கூட்டங்களின் குறிப்புக்கள் ஒரு குறிப்பிட்ட கால அடிப்படையில் வங்கியின் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.
- 2012 ஆம் ஆண்டின் LKAS மற்றும் SLFRS என்பவற்றை உள்ளடக்கிய புதிய இலங்கை கணக்கியல் தரநிலைகளை வங்கி ஏற்றுக் கொண்டுள்ளது. மேற்கூறிய கணக்கியல் தரங்களை பின்பற்ற ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைகள் 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வெளிக்கள கணக்காய்வாளர்களின் அறிக்கை மற்றும் விதிமுறைகளுக்கிணங்க மேலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. கடன் மற்றும் முற்பணங்கள் மீதான குறைபாடுகள் மற்றும் இடர் முகாமை தொடர்பான நிதிக் கூற்றுக்கள் மீதான வெளிப்படுத்துகை என்பவை மேலும் வலுப்படுத்தப்பட்டன.

உறுதிப்படுத்தல்

மேலே குறிப்பிடப்பட்ட செயல்முறைகளின் அடிப்படையில், வங்கியின் அறிக்கையின் நம்பகத்தன்மை மற்றும் வெளி நோக்கங்களுக்கான நிதி அறிக்கைகளை தயாரித்தல் இலங்கை கணக்கியல் தரநிலைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் விதிமுறைத் தேவைகள் என்பவற்றிற்கிணங்க வங்கியின் நிதி கூற்று அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்ற உத்தரவாதத்தை சபை அளிக்கிறது.

வெளிக்கள கணக்காய்வாளர்களின் மதிப்பாய்வு

வெளிக்கள கணக்காய்வாளர்கள், 2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான உள்ளகக் கட்டுப்பாட்டின் மீதான பணிப்பாளர்களின் அறிக்கையை மதிப்பாய்வு செய்துள்ளனர். மேலும் சபையினால் வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் வடிவமைப்பு மற்றும் செயல்திறன் மீதான சபையின் மதிப்பாய்வு தொடர்பான ஏதேனும் தவறுகள் ஏற்பட்டுள்ளதா, என்பது குறித்த விரிவான அறிக்கையையும் அவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

ஏ. ஆர். தேசபிரிய	பிரசன்ன பிரேமரத்ன	டப்ல்யூ. ஏ. பிரியந்த அபேசிங்க
தலைவர் கணக்காய்வுக் குழு	தலைவர்	பணிப்பாளர்

24 ஜனவரி 2018

7

வருமானக் கூற்று

81 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

82 வருமானக் கூற்று

83 விரிவான வருமானக் கூற்று

84 நிதி நிலைமைக் கூற்று

85 காசுப்பாய்ச்சல் கூற்று

86 ஒப்புரவில் மாற்றங்கள் பற்றிய கூற்று

87 நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

135 மூன்று ஆண்டுத் தொகுப்பு

137 முதலீட்டாளர் தகவல்

138 புவியியல் ரீதியாக கிளைகளின் பரம்பல்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය எனது இல. My No. BAF/F/RDB/1/17/21 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 09 April 2018

தலைவர்,
பிரதேச அபிவிருத்தி வங்கி

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (2) (சீ) இன் நியதிகளின் கீழான 2017 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

2017 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி வங்கியின் ("வங்கி") நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வானது 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, ஒப்புரவில் மாற்றங்கள் பற்றிய கூற்று, அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சலின் கூற்று என்பவற்றை உள்ளடக்கியிருப்பதோடு மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளின் முக்கிய சுருக்கம் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பன 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 33 ஆம் பிரிவு, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 13 (1) இன் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் வண்ணம் எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

நிதிசார் கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்புக்கூறும் தன்மை

பணிப்பாளர் சபையானது ("சபை") இலங்கைக் கணக்கீட்டுத் தராதரங்களுக் கமைவாக இந்த நிதிசார் கூற்றுக்களை தயாரித்து முன்வைப்பதற்கும் மோசடி அல்லது பிழைகளினால் ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களிலிருந்து விலகியதாக நிதிசார் கூற்றுக்களை தயாரிப்பதற்கு வழியமைப்பதற்கு தேவையான சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளை மேற்கொள்வதற்கும் பொறுப்பாகவிருக்கின்றது.

கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது பொறுப்பு யாதெனில், எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் கருத்தொன்றை வெளிப்படுத்துவதாகும். இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுடன் இணைந்ததாக நான் எனது கணக்காய்வை நடத்தியிருக்கின்றேன். இந்த தராதரங்கள் நிதிசார் கூற்றுக்கள் பௌதீக ரீதியான தவறான கூற்றுக்களிலிருந்து நீங்கியவையாக உள்ளதா என்பது பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு, செயலாற்றுவதற்கான ஒழுக்கவியல்சார் தேவைப்பாடுகளை கொண்டிருக்கின்றது என்பதில் நான் உடன்படுகின்றேன்.

ஒரு கணக்காய்வானது நிதிசார் கூற்றுக்களில் தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் பற்றிய கணக்காய்வுச் சான்றை பெற்றுக் கொள்வதற்கான நடைமுறைகளை செயலாற்றுவதுடன் தொடர்புபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் கணக்காய்வாளரின் தீர்மானத்தின் அடிப்படையில் தங்கியிருப்பதோடு நிதிசார் கூற்றுக்களின் பொருள்சார் தவறான கூற்றுக்களின் ஆபத்துக்களை மதிப்பிடுவதையும் உள்ளடக் கியிருப்பதோடு அவை மோசடி அல்லது தவறின் காரணமாக இடம் பெற்றதா என்பதையும் உள்ளடக்குகின்றது. அத்தகைய ஆபத்து மதிப்பீடுகளை செய்கின்றபோது கணக்காய்வாளர், வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் நியாயமான தயாரிப்பு மற்றும் முன்வைப்பதற்கான பொருத்தமான உள்ளக கட்டுப்பாடுகளையும் கருத்திற்கொள்கின்றார். இது அச்சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயாகும் ஆனால், இது வங்கியின் உள்ளக கட்டுப்பாடின் வினைத்திறன் தொடர்பான கருத்தொன்றை வெளியிடும் நோக்கத்திற்காக அல்ல. ஒரு கணக்காய்வானது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டின் தன்மையை மதிப்பிடுவதையும் சபையினால் செய்யப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் நிதிசார் கூற்றுக்களின் முழுதுமளாவிய முன்வைப்பையும் மதிப்பிடுவதையும் உள்ளடக்குகின்றது.

நான் பெற்றுக்கொண்ட கணக்கீட்டுச் சான்றானது எனது கணக்கீட்டுக் கருத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளதென நான் நம்புகிறேன்.

கருத்துரை

எனது கருத்தின்படி நிதிசார் கூற்றுக்கள், 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி நிலைமைகள் தொடர்பாகவும் இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுடன் இயைந்ததாக அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல்கள் பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான கருத்தொன்றை வழங்குகின்றது என்பதாகும்.

ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைபாடுகள் தொடர்பான அறிக்கை

இந்த நிதிசார் கூற்றுக்கள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கியியல் சட்டம் மற்றும் அதனகத்துப் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாக தேவைப்படுத்தப்பட்டவாறான தகவல்களையும் முன்வைத்திருக்கின்றது.

பாராளுமன்றத்திற்கான அறிக்கை

அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இன் ஏற்பாடுகளுக்கமைவாக பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையானது, உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எச். எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. · இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. · No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி 2017 ரூபா	வங்கி 2016 ரூபா
மொத்த வருமானம்	5	22,016,079,277	15,744,336,598
வட்டி வருமானம்		20,909,579,906	14,813,083,474
வட்டி செலவீனங்கள்		(11,233,284,493)	(7,197,198,715)
தேறிய வட்டி வருமானம்	6	9,676,295,413	7,615,884,759
கட்டண மற்றும் தரகு வருமானம்		1,101,825,405	905,636,508
கட்டண மற்றும் தரகு செலவீனங்கள்		(181,086,441)	(124,649,164)
தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம்	7	920,738,964	780,987,344
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய விலையில் நிதிசார் சாதனங்களிலிருந்தான தேறிய பெறுகை (இழப்பு)	8	(7,700)	4,200
ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய)	9	4,673,967	25,616,616
மொத்த தொழிற்பாட்டு வருமானம்		10,601,700,644	8,422,492,919
கடன்கள் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் மீதான தேறிய இழப்பு கட்டணங்கள்	10	(443,866,831)	29,110,255
தேறிய தொழிற்பாட்டு வருமானம்		10,157,833,813	8,451,603,174
குறைப்பு – தொழிற்பாட்டு செலவினங்கள்			
ஆளணிகிரயம்/செலவினங்கள்	11	(4,980,435,598)	(4,609,232,586)
கட்புலனாகாத ஆதனங்களின் கழிப்புக்கள்		(40,785,417)	(37,168,652)
ஏனைய செலவினங்கள்	12	(1,704,618,122)	(1,549,634,014)
பொதுத்திறைசேரிக்கு செலுத்திய அறவீடு		(125,000,000)	(125,000,000)
சேர் பெறுமதி வரிக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம் (வெட்)		3,306,994,676	2,130,567,922
தேசத்தை கட்டியெழுப்பும் வரி		(131,325,757)	(107,482,813)
நிதிசார் சேவைகள் மீதான சேர் பெறுமதி வரிக்கு (வெட்)		(984,943,174)	(767,485,246)
வரிக்கு முன்னர் இலாபம்		2,190,725,745	1,255,599,863
வரி செலவீனங்கள்	13	(906,796,239)	(614,311,651)
ஆண்டுக்கான இலாபம்		1,283,929,506	641,288,212
தலா பங்கிற்கான உழைப்புகள்			
தலா பங்கிற்கான உழைப்புகள்: அடிப்படை	14	9.23	4.68

அடைப்புகளிலுள்ள உருக்கள் குறைத்தல்களை சுட்டிக்காட்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களானவை பக்கம் 87 – 134 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்ட வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் ஓர் அங்கமாக உள்ள தொடர்புடைய குறிப்புகளுடன் இணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 81 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி 2017 ரூபா	2016 ரூபா
ஆண்டுக்கான வருமானம்		1,283,929,506	641,288,212
ஏனைய விரிவான வருமானம் (செலவினம்)			
இலாபம் அல்லது நட்டமாக மீள்வகுப்பாக்கம் செய்யப்படாத பொருட்கள்			
வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் மீதான உண்மைப் பெறுகை (இழப்பு)	31.3	(236,286,599)	(170,393,439)
மேற்குறிப்பிட்டவை மீதான தாமதமான வரி	24.1	66,160,248	47,710,163
ஆண்டுக்கான மொத்த ஏனைய விரிவான வருமானம், தேறிய வரிகள்		(170,126,351)	(122,683,276)
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்		1,113,803,154	518,604,936

அடைப்புகளிலுள்ள உருக்கள் குறைத்தல்களை சுட்டிக்காட்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களானவை பக்கம் 87 – 134 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்ட வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் ஓர் அங்கமாக உள்ள தொடர்புடைய குறிப்புகளுடன் இணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 81 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு	குறிப்பு	வங்கி 2017 ரூபா	வங்கி 2016 ரூபா
ஆதனங்கள்			
காசும் காசுக்கு சமமானவையும்	16	482,919,655	428,697,741
இலங்கை அரசாங்க பிணையங்கள்	17	2,512,362,500	–
வங்கியிலுள்ள நிலுவை	18	27,702,520,133	18,979,572,034
வங்கியுடனான நிலைப்படுத்தல்கள்	19	6,682,475,675	1,682,030,495
நிதிசார் ஆதனங்கள் – வர்த்தகத்திற்கானது	20	196,500	204,200
ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்தான கடன்களும் கிடைக்கப்பெறவேண்டியவைகளும்	21	127,508,812,394	105,653,630,944
நிதிசார் முதலீடுகள் – முதிர்வுக்கானது	22	516,934,932	516,741,803
கட்புலனாகாத ஆதனங்கள்	23	37,842,762	58,025,552
தாமதமான வரி ஆதனங்கள்	24	343,878,698	217,649,611
ஏனைய ஆதனங்கள்	25	2,266,365,532	2,191,034,111
சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	26	1,204,892,835	1,186,397,657
மொத்த ஆதனங்கள்		169,259,201,615	130,913,984,148
பொறுப்புக்கள்			
வங்கிகளுக்கான நிலுவை	27	10,729,312,134	11,765,493,022
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான நிலுவை	28	139,827,364,797	107,031,720,855
வழங்கப்பட்ட கடன்பத்திரங்கள் ஏனைய பெற்றுக்கொண்ட நிதியங்களும்	29	4,707,852,534	2,708,377,456
ஏனைய பொறுப்புக்கள்	30	2,686,028,770	2,130,544,286
ஓய்வூதிய நலன் கடப்பாடு	31	1,695,894,720	1,278,903,024
மொத்த பொறுப்புக்கள்		159,646,452,955	124,915,038,643
ஒப்புரவு			
குறிக்கப்பட்ட மூலதனம்/குறித்துரைக்கப்பட்ட மூலதனம்	32	3,870,936,931	1,370,936,931
நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம்	33	663,652,150	599,455,675
வைத்துக்கொள்ளப்பட்ட உழைப்புகள்	34	1,716,908,747	988,284,444
ஏனைய ஒதுக்குகள்	35	3,361,250,831	3,040,268,455
மொத்த பங்குடமையாளர் ஒப்புரவு		9,612,748,660	5,998,945,505
மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்		169,259,201,615	130,913,984,148
அவசரநிலை பொறுப்புக்களும் அர்ப்பணிப்பும்	36	406,561,172	453,555,712

நிதிக் கூற்றுக்களானவை பக்கம் 87 – 134 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்ட வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் ஓர் அங்கமாக உள்ள தொடர்புடைய குறிப்புகளுடன் இணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 81 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

நிதிசார் கூற்றுக்களானவை 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் ஆம் 2008 ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச்சட்டம் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கு இயைந்ததாக தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் சான்றுப்படுத்துகின்றேன்.

பி. எஸ். எதிரிசூரிய
பிரதம நிதிசார் அலுவலர்

ரி. ஏ. ஆரியபால
பி.நி.அ/பொது முகாமையாளர்

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, அவர்கள் சார்பில் கையொப்பமிடப்பட்ட இந்த நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்கும் முன்வைப்புக்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாகவுள்ளது.

எச். பிரசன்ன பிரேமரத்ன
தலைவர்

டபிள்யு. ஏ. பி. அபேசிங்க
பணிப்பாளர்

2018 மார்ச் மாதம் 2 ஆந் திகதி
கொழும்பு

டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி 2017 ரூபா	வங்கி 2016 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்			
வரிக்கு முன்னர் இலாபம்		3,306,994,676	2,130,567,922
சீராக்கம்			
வரிக்கு முன்னரான இலாபத்தில் உள்ளடக்கப்பட்ட காசல்லாத பொருட்கள்	39	1,077,334,374	423,360,531
தொழிற்பாட்டு ஆதனங்களில் மாற்றங்கள்	40	(24,958,618,433)	(19,002,958,980)
தொழிற்பாட்டு பொறுப்புக்களில் மாற்றங்கள்	41	34,542,627,172	21,615,023,501
ஏனைய வகைப்படுத்தல்கள்	42	30,154	(2,247)
வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களுக்கான செலுத்தப்பட்ட பங்களிப்பு		(47,155,929)	(22,372,294)
செலுத்திய வரி		(1,990,669,221)	(1,308,145,965)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய காசு (பயன்படுத்தப்பட்ட)		11,930,542,793	3,835,472,468
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்கள்			
சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	26	(303,997,879)	(385,493,382)
கட்புலனாகாத ஆதனங்களின் தேறிய கொள்வனவு	23	(20,602,627)	(16,378,229)
சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான வருமானம்		1,017,097	22,705,687
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசு (பயன்படுத்தப்பட்ட)		(323,583,410)	(379,165,924)
நிதிசார் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்கள்			
சாதாரண பங்கு மூலதன வழங்குகையிலிருந்தான தேறிய வருமானங்கள்	32	2,500,000,000	–
துணை கடன் வழங்குகையிலிருந்தான தேறிய வருமானங்கள்	29	2,000,000,000	–
கடனீட்டுப்பத்திரங்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி		(460,163,717)	(209,554,246)
செலுத்தப்பட்ட பங்கிலாபம்		–	(137,093,693)
நிதிசார் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு		4,039,836,283	(346,647,939)
காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு (குறைப்பு)		15,646,795,667	3,109,658,605
ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசு சமனிகள்		19,056,079,201	15,946,420,596
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசு சமனிகள்		34,702,874,868	19,056,079,201
காசு மற்றும் காசுக்கு சமமானவை இணக்கப்பாடு			
மத்திய வங்கியிலுள்ள காசும் நிலுவைகளும்	16	482,919,655	428,697,741
வங்கிகளுடனான சாதகமான நிலுவைகள்	18/19	34,384,995,809	20,661,602,529
வங்கிகளுடனான சாதகமற்ற நிலுவைகள்	27	(165,040,596)	(2,034,221,069)
		34,702,874,868	19,056,079,201

நிதிக் கூற்றுக்களானவை பக்கம் 87 – 134 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்ட வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் ஓர் அங்கமாக உள்ள தொடர்புடைய குறிப்புகளுடன் இணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 81 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

	வங்கி					
	குறிப்பிடப்பட்ட மூலதனம்	நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம்	விசேட ஒதுக்கு நிதியம்	பொது ஒதுக்கு நிதியம்	வைத்துக் கொள்ளப்பட்ட உழைப்புக்கள்	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2016 சனவரி 1 ஆம் திகதியன்று நிலுவை	1,370,936,931	567,391,264	421,781,592	2,458,164,810	799,159,665	5,617,434,262
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்						
ஆண்டுக்கான இலாபம்	–	–	–	–	641,288,212	641,288,212
ஏனைய விரிவான வருமானம்	–	–	–	–	(122,683,276)	(122,683,276)
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்	–	–	–	–	518,604,936	518,604,936
ஒப்புரவில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட ஒப்புரவு உரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்						
நியதிச்சட்ட ஒதுக்கிற்கு நிதியத்திற்கு மாற்றப்பட்டவை	–	32,064,411	–	–	(32,064,411)	–
விசேட ஒதுக்கிற்கு நிதியத்திற்கு மாற்றப்பட்டவை	–	–	32,064,411	–	(32,064,411)	–
பொது ஒதுக்கிற்கு நிதியத்திற்கு மாற்றப்படட்வை	–	–	–	128,257,642	(128,257,642)	–
பங்கிலாபம் – 2015	–	–	–	–	(137,093,693)	(137,093,693)
ஒப்புரவில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட ஒப்புரவு உரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்	–	32,064,411	32,064,411	128,257,642	(329,480,157)	(137,093,693)
2016 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிலுவை	1,370,936,931	599,455,675	453,846,003	2,586,422,452	988,284,444	5,998,945,505
2017 சனவரி 1 ஆம் திகதியிலுள்ளவாறான நிலுவை	1,370,936,931	599,455,675	453,846,003	2,586,422,452	988,284,444	5,998,945,505
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்						
ஆண்டுக்கான இலாபம்	–	–	–	–	1,283,929,506	1,283,929,506
ஏனைய விரிவான வருமானம்	–	–	–	–	(170,126,351)	(170,126,351)
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்	–	–	–	–	2,102,087,598	7,112,748,659
ஒப்புரவில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட ஒப்புரவு உரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்						
வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட மூலதனம்	2,500,000,000	–	–	–	–	2,500,000,000
நியதிச்சட்ட ஒதுக்கிற்கு நிதியத்திற்கு மாற்றப்பட்டவை	–	64,196,475	–	–	(64,196,475)	–
விசேட ஒதுக்க நிதியத்திற்கு மாற்றப்பட்டவை	–	–	64,196,475	–	(64,196,475)	–
பொது ஒதுக்க நிதியத்திற்கு மாற்றப்படட்வை	–	–	–	256,785,901	(256,785,901)	–
ஒப்புரவில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட ஒப்புரவு உரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்	2,500,000,000	64,196,475	64,196,475	256,785,901	(385,178,851)	2,500,000,000
2017 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிலுவை	3,870,936,931	663,652,150	518,042,478	2,843,208,353	1,716,908,747	9,612,748,660

நிதிக் கூற்றுக்களானவை பக்கம் 87 – 134 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்ட வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் ஓர் அங்கமாக உள்ள தொடர்புடைய குறிப்புகளுடன் இணைந்ததாக வாசிக்கப்படல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 81 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

1. கூட்டாண்மைத் தகவல்கள்

1.1 பொது

பிரதேச அபிவிருத்தி வங்கியானது 1985ஆம் ஆண்டை நோக்கி பின்னோக்கிச் செல்வதோடு இவை பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் வகுதியின்கீழ் மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்பட்டன. பின்னர் 1997ஆம் ஆண்டில் ரஜரட்ட, றுகுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சபரகமுவ அபிவிருத்தி வங்கிகள் என்ற வகையில் இயங்கிய 6 மாகாண மட்ட வங்கிகளினுள் அத்தகைய 17 பிரதேச அபிவிருத்தி வங்கிகள் இணைக்கப்பட்டன. 2010 மே மாதத்தில் இந்த 6 வங்கிகளும் ஒரு தேசிய வங்கியாக இணைக்கப்பட்டு பிரதேச அபிவிருத்தி வங்கி என மீள் பெயரிடப்பட்டது. வங்கியானது 2008ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின்கீழ் நியதிச் சட்ட அமைப்பொன்றாக தாபிக்கப்பட்டது. வங்கியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனியவில் அமைந்துள்ளது.

2017 டிசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான வங்கியின் நிரந்தர, பயிற்சி மற்றும் ஒப்பந்த பதவியினரின் பலம் 3361ஆக இருந்தது. (2016 டிசெம்பர் 31 இல் 3396).

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாட்டின் தன்மையும்

வங்கியின் பிரதான தொழிற்பாடுகள் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், வணிகம், கால்நடை, கடற்றொழில் செயற்பாடுகள் மற்றும் பெண்கள் வலுவூட்டல் போன்றவற்றின் அபிவிருத்தியை மேம்படுத்தி, பிரதானமாக இவற்றிற்கு நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதிசார் உதவிகளை வழங்கி இலங்கையின் முழுதுமளாவிய பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளிப்பதாகும்.

மீளாய்வின் கீழான நிதிசார் ஆண்டில் வங்கியின் பிரதானத் தொழிற் பாடுகளின் தன்மையில் எவ்வித குறிப்பிடத்தக்க மாற்றங்களும் இடம்பெறவில்லை.

1.3. நிதிசார் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புடைமை

பணிப்பாளர் சபையானது 2008ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கிச் சட்டம் மற்றும் அதனகத்துப் பின்னரான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு இயைந்ததாகவும் இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுக்கு அமைவாகவும் வங்கியின் நிதிசார் கூற்றுக்களை தயாரித்து முன்வைப்பதற்கு பொறுப்பாக விருக்கின்றது.

1.4 பணிப்பாளர் சபையினால் நிதிசார் கூற்றுக்களுக்கான அங்கீகாரம்

2017 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் நிதிசார் கூற்றுக்கள் 2018 மார்ச் 2ஆம் திகதியன்று பணிப்பாளர் சபையினால் வெளியீட்டுக்காக அதிகாரமளிக்கப்பட்டது.

2. கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1 தயாரிப்பின் அடிப்படைகள்

நிதிசார் கூற்றுக்கள் பின்வரும் பொருள்சார் விடயங்கள் தவிர்த்து வரலாற்றுச் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றது:

- வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகளுக்கான பொறுப்புடமையானது உண்மை ரீதியாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு அது வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.
- வர்த்தகத்திற்கான நிதிசார் ஆதனங்கள் நியாயத்தன்மையில் அளவிடப்பட்டிருக்கின்றன.

2.1.1 இணக்கப்பாட்டுக் கூற்று

2017 டிசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறானதும் அப்போது முடிவடைந்ததுமான ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள், இலங்கைப்-பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கிச்சட்டம் மற்றும் அதனகத்துப்பின்னரான திருத்தங்கள், 2008 ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் மற்றும் அதனகத்துப்பின்னரான திருத்தங்கள் என்பவற்றினால் இடப்பட்ட இலங்கைக் கணக்கீட்டுத் தராதரங்களின் தேவைப்பாடுகளுக்கமைவாக தயாரிப்பட்டிருக்கின்றன. நிதிசார் கூற்றுக்களின் முன்வைப்பானது 2008ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் மற்றும் அதனகத்துப்பின்னரான திருத்தங்கள் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கு இயைந்ததாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

2.1.2 தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயம்

வங்கியின் நிதிசார் கூற்றுக்கள் இலங்கை ரூபாக்களில் முன்வைக்கப் பட்டுள்ளதோடு இதுவே பிரதேச அபிவிருத்தி வங்கி இயங்குகின்ற பிரதான பொருளாதார சூழலில் நாணயமாக உள்ளது. இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்ட நிதிசார் தகவல்கள் வேறுவிதமாக குறிப்பிடப்படாதவிடத்து அண்மைய ரூபாக்களில் தரப்பட்டிருக்கின்றது.

2.1.3 நிதிசார் கூற்றுக்களின் முன்வைப்பு

தமது நிதிசார் நிலைமைக்கூற்றில் முன்வைக்கப்பட்டுள்ள வங்கியின் பொருட்கள் அதன் தன்மையின் அடிப்படையிலும் பிரிக்கப்பட்டு தொடர்புடைய திரவத்தன்மை, முதிர்வுத்தன்மை என்பவற்றை பிரதிபலிக்கத் தக்க வகையில் பட்டியலிடப்பட்டிருக்கின்றது. நிதிசார் கூற்றுக்களில் தாக்கம் செலுத்துகின்ற பணவீக்க காரணிகளுக்கு எவ்வித சீராக்கங்களும் செய்யப்பட்டவில்லை. அறிக்கையிடல் திகதியின் பின்னரான 12 மாதங்கள் (நடைமுறை) மற்றும் அறிக்கையிடல் திகதியின் பின்னரான 12 மாதங்களுக்கு மேற்பட்ட (நடைமுறையல்லாத) காலத்தினுள் மீட்பு அல்லது தீர்ப்பனவு தொடர்பான பகுப்பாய்வொன்று குறிப்பு 44இல் தரப்பட்டுள்ளது.

2.1.4 பொருள்சார் தன்மையும் கூட்டு மொத்தமும்

இலங்கைக் கணக்கீட்டுத் தராதரங்களுக்கு அமைவாக (LKAS – 1) "நிதிசார் கூற்றுக்களை முன்வைத்தலானது" நிதிசார் கூற்றுக்களில் ஒவ்வொரு பொருள்சாரவகுதியும் தனியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. வேறுபட்ட தன்மை கொண்ட பொருட்கள் அல்லது தொழிற்பாடுகளும் அவை பொருள்சார் தன்மைகொண்டவையாயின் தனியாக முன்வைக்கப்பட்டுள்ளன.

நிதிசார் ஆதனங்களும் நிதிசார் பொறுப்புக்களும் வேறாகத்தரப்பட்டிருப்ப தோடு நிதிசார் நிலைமைக் கூற்றுக்களின் அறிக்கையிடப்பட்ட தேறிய தொகையானது அங்கீகரிக்கப்பட்ட தொகையை வேறாகப் பிரிப்பதற்கு சட்ட ரீதியாக இணைப்படுத்தக் கூடிய உரிமை இருக்கும்போது மட்டுமே அவ்வாறு இடம்பெற்றுள்ளது. இங்கு இவைகளை தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு ஒரு இணக்கம் காணப்பட்டுள்ளது. அல்லது சொத்துக்களின் யதார்த்தப்படுத்தி அதேவேளை பொறுப்புக்களை தீர்ப்பதற்கு ஒரு இணக்கம் காணப்பட்டிருக்கின்றது, வருமானங்களும் செலவீனங்களும் வருமானக் கூற்றில் தனியாக காட்டப்படவில்லை. அவை ஏதாவது கணக்கீட்டுத் தராதரங்கள் அல்லது பொருள்கோடல்கள் என்பவற்றில் விசேடமாக கணக்கீட்டுக்கொள்கைகளில் வெளிப்படுத்தப்பட்டாலன்றி அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுத்தப்படவில்லை அல்லது அதிகாரமளிக்கப்படவில்லை.

2.1.5 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றானது இலங்கை கணக்கீட்டுத் தராதரம் 7க்கு இயைந்ததாக "காசுப்பாய்ச்சல் கூற்று" மறைமுக முறைமையைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கின்றது. காசும் காசுக்கு சமமானவையும், கையிலுள்ள காசு, மற்றும் குறுங்கால காசாக உடனடியாக மாற்றத்தக்க அதிக திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருப்பதோடு அவை பெறுமதியில் மாற்றங்களைக் கொண்டு வரும்போது சிறியளவு ஆபத்தை எதிர்நோக்கும் தன்மையும் கொண்டுள்ளன.

காசு மற்றும் காசுக்கு சமமானவையும் விபரங்கள் நிதிசார் கூற்றின் 16, 18 மற்றும் 19ஆம் குறிப்புக்களில் தரப்பட்டுள்ளன.

காசு மற்றும் காசுக்கு சமமானவையும் கையிலுள்ள காசு வங்கிலுள்ள நிலுவை, அழைப்பில் கிடைக்கக்கூடிய பணம் குறைந்த அறிவித்தலில் தேறிய சாதகமற்ற நிலுவைகள்ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

2.2 முக்கிய கணக்கீட்டுத் தீர்மானங்கள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

வங்கியின் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதில் இலங்கை கணக்கீட்டு தராதரங்களுடன் இணைந்ததாக முகாமைத்துவம் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தில் பாதிப்படைகின்ற செல்வாக்கு செலுத்துகின்ற தீர்மானங்கள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை செய்வதற்கு தேவைப்படுத்தப்படுவதோடு ஆதனங்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் செலவினங்கள் தொகைகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. உண்மையான விளைவுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபட முடியும்.

மதிப்பீடுகளும் அதன்கீழ் வருகின்ற ஊகங்களும் தொடர் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்படுகின்ற காலத்தில் அங்கீகாரிக்கப்படுவதோடு காலத்திற்கும் பாதிப்பு செலுத்தத்தக்க எந்தவொரு எதிர்காலத்திற்குமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதில் மதிப்பீடு நிச்சயமற்ற தன்மை முக்கிய தீர்மானங்கள் என்பவற்றில் மிக முக்கிய பகுதியாக இருப்பது. கீழ்வருகின்றவாறு வங்கியின் நிதிசார் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள்மீது கணிசமான விளைவை ஏற்படுத்தக்கூடியவையாகும்.

2.2.1 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

வங்கியின் முகாமைத்துவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் தொடர்வதற்கான அதன் ஆற்றலில் மதிப்பீடு செய்துள்ளதோடு எதிர்வுகூறத்தக்க எதிர்காலத்திற்கு வியாபாரத்தை தொடர்ந்தும் கொண்டு செல்வதற்கான மூல வளங்களை இருப்பதையிட்டு திருப்தியடைந்திருக்கின்றது. மேலும், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்வதற்கு வங்கியின் ஆற்றலுக்கு முக்கிய சந்தேகமொன்றை எழுப்பக்கூடிய எந்தவொரு பொருள்சார் நிச்சயமற்ற தன்மைகள் குறித்தும் வங்கி முகாமைத்துவம் விழிப்பானதாகவில்லை. ஆதலால், நிதிசார் கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

2.2.2 கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான சேத இழப்புக்கள்

சேதத்திற்கான தனிப்பட்ட ரீதியில் மதிப்பிடபடபட்ட நிதிசார் ஆதனங்களுக்கான சேதத்திற்கான பிரயோகங்கள், பிரயோகங்களுக்கான மொத்த கொடுப்பனவுகளின் தனிப்பட்ட கூறானது முகாமைத்துவத்தின் சிறந்த காசோட்டத்தின் தற்போதைய மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது. இது கிடைக்கதருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த காசோட்டங்களை மதிப்பிடுவதில் முகாமைத்துவமானது ஒரு கடன்பட்டவரின் நிதிசார் நிலைமை பற்றிய தீர்மானத்தை செய்கின்றது. இது எந்தவொரு உட்கிடையான தொகுதியினதும் நம்பத்தக்க பெறுமதியை தேறிய பெறுமதியைக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு சேதமடைந்த ஆதனமும் அதன் சிறப்புக்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு, தொழிற்படக்கூடிய உபாயமுறை காசோட்டத்தின் பெறுமதி என்பன கடன் ஆபத்து தொழிற்பாட்டினால் சுயாதீனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வங்கியானது இலாப அல்லது நட்டக்கூற்றில் ஒரு சேத இழப்பு பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதை மதிப்பிடுவதற்கு 2017 திசெம்பர் 31ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சபை தீர்மானங்களுக்கமைவாக ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட அதன் தனிப்பட்ட முக்கியமான கடன் மற்றும் முற்பணங்களை மீளாய்வு செய்கின்றது. இந்த மதிப்பீடுகள் பல்வேறுபட்ட காரணிகளின் ஊகங்களின் அடிப்படையில் அமைந்திருப்பதோடு அதன் உண்மையான விளைவுகள் சேத கொடுப்பனவில் செய்யப்படுகின்ற எதிர்கால மாற்றங்களுக்கு அமைவாக வேறுபட்டு அமைய முடியும்.

ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட அனைத்து கடன்களும் முற்பணங்களுக்குட்பட்ட ரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு அவை சேதம் விளைவிக்கத்தக்கவையாக அறியப்படவில்லை என்பதோடு அனைத்து தனிப்பட்ட ரீதியான முக்கியமற்ற கடன்களும் முற்பணங்களும் கூட்டாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. மொத்த கொடுப்பனவின் திரண்ட கூறுகள் தனிப்பட்ட ரீதியாக முக்கியமற்றதாக கருதப்படாத சிறப்புக் குறைந்த கடன்களின் குழுக்களாக தாபிக்கப்படுகின்றது.

கூட்டு மதிப்பீடானது கடன் விபரங்களிலிருந்தான தரவுகள் (நிலுவை மட்டங்கள் வகை, கடன்களின் வகை, ஆபத்துக்களின் கவனத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற தீர்மானங்கள், பொருளாதர தரவுகள் என்பவற்றை கவனத்திற்கொள்கின்றது.

வரலாற்று ரீதியான இழப்பு அனுபவங்களை தாபித்துக் கொள்வதற்கு வங்கி தேறிய காசு பாய்ச்சல் விகிதத்தைப் பயன்படுத்துகின்றது. இந்த முறைமையானது இழப்புத் தொகையை மதிப்பீடு செய்வதற்கு கடமைதவறுதல் அடிப்படையில் வரலாற்றுத் தரவுகளின் புள்ளிவிபர ரீதியான பகுப்பாய்வைப் பயன்படுத்துகின்றது. முகாமைத்துவமானது வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட இழப்புக்களின் மதிப்பீட்டை உறுதிப்படுத்துவதற்கு தீர்மானங்களை பிரயோகிப்பதோடு அறிக்கையிடும் திகதியில் பொருளாதார நிலைமைகளையும் உற்பத்தி கலப்புக்களையும் பிரதிபலிப்பதற்கு இது தோதானதாக சீர்செய்யப்படுகின்றது. சூழலும் விகிதங்களும் இழப்பு விகிதங்ளும் உண்மையான இழப்பு அனுபவத்திற்கு எதிரான வழமையாக முக்கியமானவையாக அமைகின்றன.

கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான சேத இழப்பு குறிப்பு 21இல் மேலும் விபரமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

2.2.3 வரி விதிப்பு

வங்கியானது வருமான வரிக்கு உட்படுவதோடு இந்த நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக் காலத்தில் பிரயோகத்திலுள்ள வரி சட்டங்களின் பொருள்கோடல் காணப்படுகின்ற நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக வலுவிலுள்ள அப்போதைய மற்றும் காலதாமதமான ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாடுகளை தீர்மானிப்பதற்கு தீர்ப்பு தேவைப்படுகின்றது.

தற்போதுள்ள ஒப்பந்த உடன்படிக்கைகள் என்பவற்றின் சிக்கலான தன்மை பாரிய அளவிலான வியாபாரத் தொடர்புகள் மற்றும் நீண்டகால தன்மை உண்மையான விளைவுகளிற்கிடையிலான எழுகின்ற வேறுபாடுகள் எடுக்கப்பட்ட ஊகங்கள் என்பவற்றின் பின்னணியில் இது வருமான வரியிற்கான சீராக்கம் செலவீனங்கள் நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்பு 13 மற்றும் 24 இல் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்ட தாமதமான வரித் தொகைகள் என்பவற்றின் பின்னணியை இது கொண்டிருக்கின்றது.

காலதாமதமான வரி, ஆதனங்கள் எதிர்கால வரியிடத்தக்க ஆதனங்களில் சாத்தியப்படத்தக்க அளவிற்கான வரி இழப்புக்கள் தொடர்பில் அங்கீகரிக்கப் படுவதோடு அத்தகைய வரி இழப்புக்கள் எங்கு வேறாக்கத்தக்க முடியும் என்பதன் அடிப்படையிலும் காணப்படுகின்றது. தீர்ப்பானது, அங்கீகரிக்கத் தக்க தாமதமான வரி ஆதனங்களின் தொகையை நேர அடிப்படையிலும் எதிர்காலவரி அறவிடத்தக்க இலாபங்களின் மட்டத்திலும் சேர்த்து எதிர்கால வரித்திட்டமிடல் உபாயமுறைகளுடன் ஒருங்கிணைத்து அதன் அடிப்படையிலேயே அதன் தொகை தீர்மானிக்கப்படுவதை தேவைப்படுத்துகின்றது.

2.2.4 வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களின் செலவு அவற்றின் தற்போதைய கடப்பாட்டுப் பெறுமதி என்பன உண்மையான பெறுமதிகளைப்பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. உண்மையான பெறுமதியானது கழிவு விகிதங்கள், ஆதனங்கள் மீதான எதிர்பார்க்கப்படுகின்ற வருமான விகிதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள், மகப்பேற்று விகிதங்கள், எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புக்கள் என்பவற்றின் ஊகங்களுடன் சம்பந்தப்படுகின்றது. இந்த திட்டங்களின் நீண்ட காலத் தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் கணிசமான நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுத் தக்கவையாகும். அனைத்து ஊகங்களும் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

பொருத்தமான கழிவு விகிதத்தை தீர்மானிப்பதைப் பொறுத்தவரையில் முகாமைத்துவமானது வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களின் எதிர்பார்ப பற்ற காலத்தின்/இணைந்த வகையில் முதிர்வு பெறத்தக்க இலங்கை அரசாங்க முறிகளின் வட்டி விகிதத்தைக் கவனத்திற் கொள்கின்றது.

இறப்பு விகிதமானது பொதுவாகக் காணப்படுகின்ற இறப்புவிகித அட்டவணையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது, எதிர்கால சம்பள அதிகரிப்புக்களும் ஓய்வூதிய அதிகரிப்புக்களும் எதிர்கால பணவீக்க விகிதம் வங்கியின் எதிர்பார்க்கப்படும் எதிர்கால சம்பள அதிகரிப்பு விகிதம் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

2.2.5 சொத்து மற்றும் உபகரணங்களின் பயன்படுத்தத்தக்க ஆயுட்காலம்

வங்கியானது வதிவிடத்திலுள்ள பெறுமதி ஆதனங்களின் தேய்மான முறைமைகள் அதன் பயன்படுத்தத்தக்க ஆயுட்காலம் என்பவற்றை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவத்தின் தீர்ப்பானது இந்த பெறுமதிகள் விகிதங்கள் முறைமைகள் என்பவற்றின் மதிப்பீட்டில் பிரயோகிக்கப்படுவதோடு இந்த வகையில் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுகின்றன.

2.2.6 அர்ப்பணிப்புகளும் அவசர நிலைமைகளும்

அனைத்து செயற்படத்தக்க ஆபத்துக்களும் அனைத்தும் அறியப்பட்ட பொறுப்புக்களின் தொகை தீர்மானிப்பதற்கு கவனத்திற்கொள்ளப்படுகின்றன.

அவசரப் பொறுப்புக்கள் என்பவை சாத்தியமான கடப்பாடுகள் அவற்றின் இருப்பானது நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு, சமகால கடப்பாடுகள் என்பவற்றில் மாத்திரம் உறுதிப்படுத்தப்பட முடியும் என்பதோடு இங்கு பொருளாதார நலன்களின் மாற்றமானது சாத்தியமானதல்ல அல்லது நம்பகமாக மதிப்பிடப்பட முடியாததுமாகும். அவசர நிலைமைப்பொறுப்புக் களானவை நிதிநிலைமைக்கூற்றில் அங்கீகரிக்கப்படவில்லை என்பதோடு அவை மிகவும் சாத்தியமற்றதாக இருந்தாலேயன்றி வெளிப்படுத்தப்படவில்லை.

2.2.7 நிதிசார் சாதனங்களின் நியாயப் பெறுமதி

நிதிசார் ஆதனங்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களின் நியாயப்பெறுமதி நிதிசார் நிலைமைக்கூற்றில் பதிவு செய்யப்படும்போது முனைப்பான சந்தைகளிலிருந்து அவற்றைப் பெற முடியாது. அவை கணித முறைமையில் அமைந்த பயன்படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட மதிப்பீட்டு உத்திகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த மாதிரிகளின் உள்ளீடுகள் சாத்தியமான அவதானிக்கப்படக்கூடிய சந்தைகளிலிருந்தே பெறப்படுகின்றன. எவ்வாறாயினும், அத்தகைய தரவுகளும் காணப்படவில்லையாயின் அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டுத்தாக்கத்தை குறைப்பதற்கு நியாயப் பெறுமதி அடிப்படையில் அவை தாபிக்கப்பட்டு தீர்ப்பின் அளவு பிரயோகிக்கப்படுகின்றது.

3. முக்கிய கணக்கீட்டுக்கொள்கைகளின் சுருக்கம்

நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதில் வங்கியினால் பிரயோகிக்கிப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: கீழே வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் வேறுவகையாக தீர்மானிக்கப்படாதவிடத்து வங்கியின் இந்த நிதிசார் கூற்றுக்களில் தயாரிக்கப்பட்ட அனைத்துக் காலங்களிலும் தொடராக பிரயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

3.1 நிதிசார் சாதனங்கள் – ஆரம்ப அங்கீகாரமும் அளவீடுகளும்

3.1.1 அங்கீகாரம்

அனைத்து நிதிசார் ஆதனங்களும் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் வர்த்தக திகதியின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. சாதனமொன்றின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான தரப்பொன்றாக வங்கி மாறுகின்ற திகதியிலிருந்தாகும். இது வழமையான முறையிலான வர்த்தகங்கள், கொள்வனவுகள், நிதிசார் ஆதனங்களின் விற்பனைகள் என்பவற்றை உள்ளடக்குவதோடு, சந்தையில் மரபு ரீதியாக அல்லது விதிமூலம் தாபிக்கப்பட்ட பொதுவான கால அளவினுள் இந்த ஆதனங்களின் விநியோகம் தேவைப்படுத்துகின்றது.

3.1.2 வகையீடும் ஆரம்ப நிதிசார் சாதனங்களின் ஆரம்ப அளவீடும்

நிதிசார் சாதனங்களின் வகையீடானது ஆரம்ப அங்கீகாரத்தில் அவற்றின் நோக்கம், பண்புகள் அவற்றை முகாமைத்துவம் பெறுகின்ற இலக்கு என்பவற்றின் அடிப்படையில் தங்கியிருக்கின்றது.

ஆரம்பத்தில் அனைத்து நிதிசார் சாதனங்களும் நியாயப்பெறுமதி, அத்துடனான கொடுக்கல்வாங்கல் செலவு என்பவற்றின் அடிப்படையில் அளவிடப்படுவதோடு இவை இலங்கை கணக்கீட்டுத் தராதரம் நிதிசார் சாதனங்கள் அங்கீகாரமும் அளவீடும் 39 இன் வண்ணம் இலாப மற்றும் நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் நிதிசார் பொறுப்புக்கள் நிதிசார் ஆதனங்களின் விடயங்கள் தவிர்த்து அத்தகைய நிதிசார் சாதனங்களின் பெறுகை அல்லது வளங்களுடன் நேரடியாக தொடர்புபடுகின்றது. நிதிசார் ஆதனங்கள் நிதிசார் பொறுப்புக்களுக்கான கொடுக்கல்வாங்கல் செலவைப் பொறுத்தவரையில் வருமானக் கூற்றினூடான இலாபம் மற்றும் நட்டத்தினூடான நியாயப் பெறுமதியுடன் சம்பந்தப்படுகின்றது.

3.1.3 நிதிசார் ஆதனங்களின் தொடரான அளவீடு

நிதிசார் ஆதனங்களின் அதன் பின்னரான தொடர் அளவீடு அவற்றின் வகையீட்டில் தங்கியிருக்கின்றது.

3.1.3.1 வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள்

வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிதிசார் ஆதனங்கள் நிதிசார் நிதி நிலைமைக்கூற்றில் நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன. நியாயப்பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் “தேறிய வர்த்தக வருமானத்தில்” அங்கீகரிக்கப்படுகின்றது. பங்கிலாப வருமானம் அல்லது செலவினம் ஒப்பந்த விதிகளுக்கு அமைவாக அல்லது கொடுப்பனவு உரிமை எவ்வாறு தாபிக்கப்பட்டிருக்கின்றது என்பதன் அடிப்படையில் “தேறிய வர்த்தக வருமானம்” பதிவு செய்யப்படுகின்றது.

3.1.3.2 முதிர்ச்சியடைந்த நிதிசார் முதலீடுகள்

முதிர்ச்சியடைந்த நிதிசார் முதலீடு என்பவை நிலையான அல்லது தீர்மானிக்கத்தக்க கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளுடனான மீளப் பெறத்தக்க நிதிசார் ஆதனங்கள் ஆகும். இதற்கு வங்கி முதிர்ச்சியடைத்தக்க நோக்கத்தையும் ஆற்றலையும் கொண்டிருக்கும். இதன் ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து முதிர்ச்சியடைந்த நிதிசார் முதலீடுகள் பயனுறுதிமிக்க வட்டி விகிதம் குறைவான சேதம் என்பவற்றைப் பயன்படுத்தி கழிக்கப்படுகின்ற செலவு கிரயத்தில் அளவிடப்படுகின்றன. கழிக்கப்பட்ட செலவானது பயனுறுதி மிக்க வட்டி விகிதத்தின் அங்கமொன்றாக சுவீகரிப்பு மற்றும் கட்டணங்களின் ஏதாவது கழிவு அல்லது தவணைக் கொடுப்பனவு என்பவற்றை கவனத்திற்கொண்டு கணிப்பிடப்படுகின்றன. கழிப்பானது வருமானக்கூற்றிலுள்ள வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

